**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

190

UNIVERSITY OF MADRAS.
Detailed Tamil Text for Intermediate Examination 1935.

# முதற் குலோத்துங்கசோழன்.

190

இரண்டாம் பதிப்பு.

T. V. சதாசிவபண்டாரத்தார்
எழுதியது.

1933.

All Rights Reserved.] [Price Re. 1.

C. N. Srinivasagopalachariyar

190

190

உ

# முதற் குலோத்துங்கசோழன்.

கும்பகோணம்
வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
**T. V. சதாசிவபண்டாரத்தார்**
எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

கும்பகோணம்
யதார்த்தவசனி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
**1933.**

*All Rights Reserved.*

# பொருளடக்கம்.

அதிகாரம். பக்கம்.

1. சோழரும் சளுக்கியரும் ... 1
2. குலோத்துங்கசோழனது முன்னோரும் பிறப்பும் ... ... 7
3. வேங்கிநாட்டில் குலோத்துங்கன் முடிசூடுதல் ... ... 17
4. குலோத்துங்கன் சோழமண்டலத்திற்கு இளவரசன் ஆதல்... 20
5. ,, சோழமண்டலத்தில் முடிசூடுதல் ... 26
6. ,, அரசாட்சி ... 30
7. ,, போர்ச்செயல்கள் ... 35
8. ,, சமயநிலை ... 54
9. ,, குணச்சிறப்பு ... 57
10. ,, மனைவியரும் மக்களும் 61
11. ,, அரசியல் தலைவர்கள் 66
12. ,, அவைக்களப்புலவர் ... 71
13. ,, அரசியல் ... 76
14. முடிவுரை ... ... 96

சேர்க்கை.

I. குலோத்துங்கனது மெய்க்கீர்த்திகள் 99
II. சோழசளுக்கியர் சம்பந்தம் ... 104
III. திருவைகாவூர்க் கல்வெட்டு ... 105

உ

சிவமயம்.

# முகவுரை.

திருவாங்கூர் இராச்சியத்தின் கல்வெட்டுப் பரிசோதகர் காலஞ்சென்ற திரு. T. A. கோபிநாதராயர் அவர்கள் M. A. எழுதிய 'சோழவம்ச சரித்திரச் சுருக்கம்' என்ற நூலை நான் படித்தபோது நம் தமிழகத்தில் பண்டைக்காலத்தில் அரசாண்ட சேர சோழ பாண்டியரது வரலாறுகளை இயன்றவரையில் விரிவாக அறிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் உண்டாகவே, கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆராயத்தொடங்கினேன். எனது ஆராய்ச்சியிற் புலப்பட்ட சரித்திர உண்மைகளை மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் இவற்றின் திங்கள் வெளியீடுகளாகிய 'செந்தமிழ்' 'தமிழ்ப்பொழில்' என்ற இரண்டிலும் அவ்வக்காலங்களில் நான் வெளியிட்டு வந்ததை அன்பர் பலரும் அறிவர். நம் தமிழகத்திலும் பிறநாடுகளிலும் தன் ஆணை செல்லச் செங்கோல் செலுத்திய சக்கரவர்த்தியாகிய முதற் குலோத்துங்கசோழன் வரலாற்றை விரித்தெழுதுவதற்குரிய கருவிகள் எனக்குக் கிடைத்தமையின் காலக் குறிப்புக்களுடன் இந்நூலை ஒருவாறு எழுதி முடித்தேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் உண்மைச் சரித்திரம் தாய்மொழியில் வெளிவருதல் பெருந்துணையாகும் என்பது அறிஞர்களது துணிபு. ஆதலால், இது, முதலில் 'தமிழ்ப்பொழில்' இரண்டு மூன்றாம் துணர்களில் வெளியிடப்பட்டது; பிறகு 1930-ஆம் ஆண்டில் தனிநூலாக வெளிவந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் ( **Mudras University**) இதனை நன்கு மதித்து 1935ஆம் ஆண்டு இண்டர்மீடியேட் ( **Intermediate**) பரீட்சைக்குரிய பாடங்களுள் ஒன்றாக அமைத்திருத்தல்பற்றிப் பெரிதும் மகிழ்ச்சியுறுவதோடு அக்கழகத்தார்க்கு என்றும் நன்றிபாராட்டும் கடமையுமுடையேன்.

இதனைப் படிக்கும் கல்லூரி மாணவர்களுக்கு ஆராய்ச்சித்துறையில் ஊக்கம் பிறக்குமாறு உரிய இடங்களில் பல மேற்கோள்கள் இப்பதிப்பில் ஆங்காங்குக் கீழ்க் குறிப்புக்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அன்றியும், பிறகு கிடைத்துள்ள சில ஆதாரங்களினால் இப்பதிப்பில் சிறந்த திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

சரித்திர ஆராய்ச்சியில் எனக்கு மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் முதலில் உண்டுபண்ணியது திரு. T. A. கோபிநாத ராயர் அவர்கள் M. A. எழுதிய 'சோழவம்ச சரித்திரச் சுருக்க'மாதலின் அப் பெரியார்க்கும் எனது நன்றியுரியதாகும்.

இந்நூலைத் தமது அச்சுக்கூடத்தில் மிக அழகாக விரைவில் அச்சியற்றித் தந்து தக்க காலத்தில் உதவி புரிந்த கும்பகோணம் 'யதார்த்தவசனி'ப் பத்திராதிபர் திரு. T. V கோவிந்தசாமி பிள்ளை அவர்களது பெருந்தகைமையினையும் பேரன்பினையும் எக்காலும் மறவேன்.

இத்தகைய ஆராய்ச்சி நூல்களில் சில இடங்களில் கருத்து வேறுபாடு நிகழ்தலும், இனி கிடைக்கும் கருவிகளால் சில செய்திகள் மாறுபடுதலும் இயல்பு என்பது அறிஞர்கள் நன்கறிந்ததேயாகும்.

வாணாதுறை ஹைஸ்கூல்,<br>கும்பகோணம்.<br>25-6-33. } T. V. சதாசிவ பண்டாரத்தார்.

உ

சிவமயம்.

# மதிப்புரைகள்.

HINDU :—In this book of about 100 pages the story of the reign of the great Chola Emperor Kulothunga I is told in full. All the available materials have been laid under contribution and the author has based his conclusions on a critical examination of his data. That under Kulothunga I South India enjoyed the benefits of a well-ordered administration, internal peace and external security, that the people freely pursued their varied avocations, that learning and the arts of civilization flourished as perhaps never before, all this is brought out with quite a wealth of detail. The last chapter particularly should be of great interest to the general reader. Entitled "Kulothunga's administration" it throws a flood of light on the social, political and economic conditions of South India in the 11th century. The first chapters deal with the Chalukya—Chola wars and Kulothunga's early career and military exploits.

It is commendable that the work has been produced in Tamil thereby extending its sphere of usefulness.

30—7—1930.

MAHAMAHOPADYAYA
V. SWAMINATHAIYAR,
MADRAS.

"TYAGARAJA VILAS."
TIRUVETTESWARANPET.
2-8-1930.

கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர், ஸ்ரீமான் சதாசிவபண்டாரத்தார் இயற்றிய முதற் குலோத்துங்கசோழன் சரித்திரத்தை முற்றும் படித்துப் பார்த்தேன். இதனை இயற்றியவர் நெடுங் காலமாகச் சிலாசாஸனங்கள், சங்கச் செய்யுட்கள் முதலியவற்றை ஆராய்ந்தவரென்பதை இது புலப்படுத்துகின்றது. தமிழ்மொழி இக்காலத்தில் பலதுறைகளிலும் வளர்ச்சியுற்று வருகின்றதென்பதற்கு இந்நூலாசிரியரது கல்வி முறையையே ஓர் இலக்காகக் கூறலாம். இந்தச் சரித்திரத்திலுள்ள விஷயங்கள், விளங்கும்படி நன்றாக முறைப்படுத்தி எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. தமிழரசர்களுடைய சரித்திரங்களை அறிந்து கொள்வது இன்றியமையாததாதலால் இந்தப் புத்தகம் பொதுவாக யாவருக்கும் சிறப்பாகப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் மிகப் பயன்படுமென்று எண்ணுகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையர்.

---

நவசக்தி:—முதற் குலோத்துங்கசோழன் வரலாறு கொண்ட இந்நூல் வரப்பெற்றோம். இந்நூலாசிரியர் கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் முயற்சியைப் பாராட்டுகிறோம். கலிங்கத்துப்பரணி, கல்வெட்டுகள் முதலியவற்றை ஆதாரமாகக்கொண்டு இந்நூல் உருப்பெற்றிருக்கிறது. சரித்திரமுறையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. குலோத்துங்கன் வரலாற்றுக் கூறுகள் பல ஆங்காங்கே ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமுறையில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

குலோத்துங்கனது அரசியல்முறை தெற்றெனக் காட்டுவதாயிருக்கிறது. இனிய எளிய நடையில் நூல் எழுதப்பட்டிருத்தல் மகிழ்ச்சியூட்டுகிறது. சரித்திர அமைப்பில் இத்தகைய நூல் பல வெளிவரல் வேண்டுமென்பது நமது வேணவா. திருவாளர் பண்டாரத்தார்க்கு நமது நன்றி உரியதாக. [21—1—1931.]

---

செந்தமிழ் —குலோத்துங்கசோழன் :-இஃது, இப்பெயரோடு சோழ குலத்தின் திலகமாய் விளங்கிய சக்ரவர்த்தியின் சரித்திரத்தைக் கூறுவது; கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் தமிழ் நூற்சான்றுகளையும் ஆராய்ந்து ஒரு கோவைப்படத் தொகுத்துக் கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் T. V. சதாசிவபண்டாரத்தாரவர்களால் எழுதப்பெற்றது.

இதன் வசனநடை எளிமையும் இனிமையும் வாய்ந்தது. அக்கால அரசியல்முறையும், நாகரிகநிலையும் முதலிய எல்லாம் இதனால் அறிந்து மகிழற்பாலன. அன்றியும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் இதிற் காலக்குறிப்போடு நன்கு விவரிக்கப்பட்டுளது.

சரிதவாராய்ச்சியில் தமிழ்ப்புலவர்கள் அதிகமாகத் தலையிடவில்லை என்னும் குறையுடைய இக்காலத்தில் இதன் ஆசிரியருடைய ஊக்கமும் உழைப்பும் போற்றுதற்குரியன. [தொகுதி 29, பக். 85, 86.]

உ

# முதற் குலோத்துங்க சோழன்.

## முதல் அதிகாரம்.

### சோழரும் சளுக்கியரும்.

நம் தமிழகம்[1] சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் என்னும் மூன்று பெரும் பகுதிகளையுடையதாக முற்காலத்தில் விளங்கிற்று.[2] இவற்றுள், சோழமண்டலம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு முதலான ஜில்லாக்கள் அடங்கிய ஒரு நாடாகும். இது குணபுலம்[3] எனவும் வழங்கப்பெறும். இதனைப் பண்டைக்

1. 'இமிழ்கடல் வரைப்பில் தமிழகம்'—
சிலப்பதிகாரம்—அரங்கேற்றுக்காதை 37.

2. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்'—
தொல்—பொருள்—செய்யுளியல்—சூத்-79.

3. 'தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமான்'—
சிறுபாணாற்றுப்படை — 78, 79.

காலமுதல் ஆட்சிபுரிந்துவந்தோர் தமிழ் வேந்தர்களுள் ஒருவராகிய சோழமன்னர் ஆவர். இவர்கள் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய தலைநகரங்கள் உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பன. பிற்காலத்துச் சோழமன்னர்களது ஆட்சிக்காலங்களில் தஞ்சாவூரும், கங்கைகொண்டசோழபுரமும் தலைநகரங்களாகக்கொள்ளப்பட்டன. சோழர்களுக்குரிய அடையாள மாலை ஆத்தியாகும்; கொடியும் இலச்சினையும் புலியாம்.[4] வடவேந்தரைப்போல இன்னோர் சூரியகுலத்தினரென்றும் காசிபகோத்திரத்தினரென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.[5]

பரசிராமர் அரசகுலத்தினரை அழித்தொழிப்பதையே தம் பெருநோன்பாகக்கொண்டு இப்பரத கண்டம் முழுவதும் சுற்றிவந்த நாட்களில், காவிரிப்பூம்பட்டினத்தில் காந்தன் என்ற சோழமன்னன் ஒருவன் அரசாண்டுவந்தான். அவன் பரசிராமரது வருகையைக் கேட்டுப் பெரிதும் அஞ்சி, பூம்புகார்த் தெய்வமாகிய சம்பாபதிபாற்சென்று, தான் உய்யும் வழியொன்றுணர்த்துமாறு பணிவுடன் வேண்டினன். அஃது அவனது காதற்கணிகையின் புதல்வனாகிய ககந்தனுக்கு முடிசூட்டிவிட்டு அவனைக் கரந்துறையுமாறு

4. 'நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே'—
புறநானூறு—45.
'புலிபொறித்துப் புறம்போக்கி'—
பட்டினப்பாலை 135.

5. கலிங்கத்துப்பரணி—தாழிசைகள் 173, 174.
விக்கிரமசோழனுலா—கண்ணிகள் 1, 2, 3.
இராசராசசோழனுலா— ஷெ 1, 2, 3.

அறிவுறுத்திற்று.[6] அவனும் அங்ஙனமே காத்துவருதலும், சோணாடு சென்ற பரசிராமர் அரியணையில் வீற்றிருந்து அரசாளுமவன் அரசகுலத்தினன் அல்லன் என்பதை யறிந்து கணிகையின் புதல்வனாகிய அவனைக் கொல்லுதல் தம் நோன்பிற்கேற்றதன்று எனக் கருதி அந்நாட்டை விட்டகன்றனர். பரசிராமருக்குப் பயந்து கரந்துறைந்த இக்காந்தன் என்பவனே காவிரியாற்றைக் கொணர்ந்த பெருந்தகையாளன் என்று பழைய தமிழ்நூலாகிய மணிமேகலை கூறுகின்றது.[7] பிற்றைநாளில், அப்பரசிராமர் இராமபிரான் திருமணஞ்செய்துகொண்டு மிதிலைமாநகரிலிருந்து திரும்புங்கால் அவரை எதிர்த்துத் தோல்வியுற்று, அரசகுலத்தினரை வேருடன் களைதற்கெண்ணிய தமது எண்ணத்தை முற்றிலும் ஒழித்து, மலைச்சாரல்சென்று தவம்புரிந்தனர் என்பது இராமாயணத்தால் அறியக்கிடக்கின்றது.

இனி, இராமாயணகாலத்தில் சோழமன்னருள் ஒருவன் மலயமலையிலிருந்த அகத்தியமாமுனிவரது ஆணையால் மக்களது இன்னலைப் போக்குமாறு, வானத்தின்கண் அசைந்துகொண்டிருந்த மூன்று மதில்களை அழித்தனன்; அக்காரணம்பற்றியே சிலப்பதிகாரமும் புறநானூறும் அவனைத் 'தூங்கெயிலெறிந்த

6. மணிமேகலை—சிறைசெய்காதை 25—40.

7. 'செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை'
—மணிமேகலை—பதிகம் 9—12.

தொடித்தோட் செம்பியன்' என்று புகழ்ந்து கூறுகின்றன.[8]

பாரதப்போர் நிகழ்ந்த நாட்களில் ஒரு சோழ மன்னன் போர்முடியும் வரையில் தருமன் படைக்கு உணவளித்து உதவிபுரிந்தனன் என்று கலிங்கத்துப் பரணி யுரைக்கின்றது.[9]

ஆகவே, இராமாயண பாரதகாலங்களினும் அவற்றிற்கு முந்திய நாட்களிலும் சோழகுலத்தினர் மிகச் சிறப்புற்று விளங்கினர் என்பது இனிதுணரப்படுகின்றது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில், மகதநாட்டில் செங்கோற்செலுத்திய அசோகனது ஆணையை யுணர்த்தும் கல்வெட்டுக்களிலும் சோழரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. கி. பி. முதல் நூற்றாண்டில், மேனாட்டினின்றும் தமிழ்நாடுபோந்த யவன ஆசிரியனாகிய தாலமி என்பானது வரலாற்றுக் குறிப்பினும், மேனாட்டு வரலாற்று ஆசிரியன் ஒருவனால், அப்பழைய காலத்தில் எழுதப்பெற்ற 'பெரிப்ளஸ்' என்ற நூலிலும் சோழரைப்பற்றிய உயரிய செய்திகள் காணப்படுகின்றன. எனவே, கிரேக்கரும் உரோமரும் மிக உயர்நிலையிலிருந்த நாட்களில் நம் சோழரும் அன்னாருடன் வாணிபத் தொடர்புடையராய்ப் பெருமையோடு வாழ்ந்துவந்தனர் என்பது பெறப்படுகின்றது.

---

8. புறநானூறு 39.

'உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை'
—சிலப்பதிகாரம்—வாழ்த்துக்காதை.

9. கலிங்கத்துப்பரணி 181.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து உண்மை காணு மிடத்து, சோழகுலத்தினர் நம்மனோரால் ஆராய்ந்து அளந்து காணமுடியாத அத்துணைப் பழங்காலமுதல் நம் தமிழ்நாட்டின் கீழ்ப்பகுதியாகிய சோழவளநாட்டில் வீற்றிருந்து, அதனைச் சிறப்புடன் ஆண்டுவந்த அரசகுலத்தினர் ஆவர் என்பது நன்கு விளங்குதல் காண்க.

இனிச் சளுக்கியர் என்பார், வடநாட்டினின்றும் போந்து, பம்பாய் மாகாணத்தின் தென்பகுதியிலுள்ள இரட்டப்பாடி நாட்டை, வாதாபிபுரம்,[10] மானியகேடம், கலியாணபுரம் முதலான நகரங்களில் வீற்றிருந்து அரசுபுரிந்துவந்த ஓர் அரசகுலத்தினர் ஆவர். சீனதேசத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த வழிப்போக்கனாகிய 'யுவான் ச்வாங்' என்ற ஆசிரியன், சளுக்கியரது போர்வன்மையைத் தன் நூலுட் புகழ்ந்திருத்தலோடு வடவேந்தனாகிய 'அர்ஷவர்த்தனனைத்' தென்னாட்டிற்குச் செல்லாதவாறு போர்புரிந்து விலக்கிய இரண்டாம் புலிகேசி என்பவன் இச்சளுக்கிய குலத்தில் தோன்றிய மன்னன் என்று பாராட்டிக் கூறியுள்ளான்.[11]

இரண்டாம் புலிகேசியின் தம்பியாகிய 'குப்ஜ விஷ்ணு வர்த்தனன்' என்பான் கிருஷ்ணை, கோதாவரி என்ற இருபேராறுகளுக்கும் இடையிலுள்ள வேங்கிநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதனைக்

10. The Modern Badami in the Bijapur District.
11. Mysore Gazetteer Volume II Part II pages 708, 709 & 710.

கைப்பற்றிக் கீழைச்சளுக்கிய நாடொன்றை அமைத்தான்.[12] இது நிகழ்ந்ததுமுதல், சளுக்கியர் கீழைச் சளுக்கியர் மேலைச்சளுக்கியர் என்ற இரு கிளையினராயினர்.

இன்னோர் சந்திரகுலத்தினர் என்றும் மானவிய கோத்திரத்தார் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்களுக்குரிய கொடியும் இலச்சினையும் பன்றி என்பர்.

பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளிற் சோழருக்கும், மேலைச்சளுக்கியருக்கும் அடிக்கடி பெரும் போர்கள் நடைபெற்றன; ஆனால், கீழைச்சளுக்கியர் சோழமன்னரது பெண்களை மணஞ்செய்துகொண்டு அன்னோர்க்கு நெருங்கிய உறவினராய் நட்புற்று வாழ்ந்துவந்தனர். இவ்வுண்மையை அடுத்த அதிகாரத்தில் நன்கு விளக்குவாம்.

12. Mysore Gazetteer Volume II, Part II, pages 707 & 708.

## இரண்டாம் அதிகாரம்.

### குலோத்துங்க சோழனது முன்னோரும் பிறப்பும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் தென் மதுரையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத் திறுதிக்காலத்தில் நிலவிய சில சோழமன்னரது பெயர்கள் அச்சங்கத்துச் சான்றோர் இயற்றியுள்ள பாடல்களாலும் நூல்களாலும் தெரிகின்றன. அவர்களுள் சோழன்கரிகாலன், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, செங்கணான் முதலானோர் சிறந்தவராவர்.

இன்னோருள் சோழன்கரிகாலன் என்பான் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறந்த துறைமுகப் பட்டினமாகக் கட்டி, அதனை வாணிபத்திற்கேற்ற வளநகராக்கியவன்; காவிரியாற்றின் இருமருங்கும் கரையெடுப்பித்துச் சோணாட்டை வளம்படுத்திச் 'சோறுடைத்து' என்று அறிஞர்கள் புகழுமாறு செய்தவன்.[1] இது பற்றியே இவ் வேந்தர்பெருமானைக் கரிகாற்பெருவளத்தான் என்றும் திருமாவளவன் என்றும் மக்கள் பாராட்டிக் கூறுவாராயினர். பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் இம்மன்னன் மீது பாடப்பெற்ற நூல்களேயாம். இவற்றுள் பட்டினப்பாலையை இயற்றிய ஆசிரியர் கடியலூர் உருத்தி

1. கலிங்கத்துப்பரணி—தா. 184.

ரங்கண்ணனார்க்கு இவ்வேந்தன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் அளித்து அந்நூலைக்கொண்டான் என்று கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் கூறியுள்ளார்.[2] இதனால் இவன் நல்லிசைப்புலவர்பால் கொண்டிருந்த பெருமதிப்பு நன்கு விளங்கும். இம்மன்னன் இமயமுதல் குமரிவரையில் தன் வெற்றியையும் புகழையும் பரப்பிய பெருவீரன் என்பது ஈண்டு அறியத்தக்கதொன்றாம்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தமிழ்ப் புலமையிற் சிறந்தவன்; புலவர்க்கும், இரவலர்க்கும் வேண்டியாங்களித்த பெருங்கொடை வள்ளல்; தமிழகத்தில் தன் வெற்றியைப் பரப்பி வீரனாய் விளங்கியவன்.

பெருநற்கிள்ளி என்பான் உறையூரிலிருந்து சோழவளநாட்டை ஆட்சிபுரிந்து கொண்டிருக்குங் காலில், புகார் நகரத்து வணிகனாகிய கோவலனது மனைவி கண்ணகிக்கு உறையூரின்கண் பத்தினிக்கோட்டம் எடுப்பித்து விழா நிகழ்த்தினான்.

பொய்கையார் என்ற நல்லிசைப்புலவரால் பாடப்பெற்ற களவழி நாற்பது[3] என்னும் நூல்கொண்டவன் சோழன் செங்கணான் ஆவன்.[4] இங்ஙனம் பெருமை

---

2. 'தத்து நீர்வராற் குருமி வென்றதுந்
 தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறு நூறாயிரம் பெறப்
 பண்டு பட்டினப் பாலை கொண்டதும்.
—க. பரணி—தா. 185.

3. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று.

4. கலிங்கத்துப்பரணி—தா. 182.

யுடன் வாழ்ந்துவந்த சோழரது நிலையும் கி. பி. நான்காம் நூற்றாண்டில் தளர்வுற்றது. அக்காலத்தில் பேரார்விருப்பம் வாய்ந்த பல்லவர் தமிழ்நாட்டில் புகுந்து தொண்டைமண்டலத்தையும் சோழமண்டலத்தையும் கைப்பற்றிக் காஞ்சிமாநகரையும் மாமல்லபுரத்தையும் தலைநகரங்களாகக்கொண்டு ஆட்சிபுரியத் தொடங்கினர். இவர்களது ஆளுகையும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரையில் சோழமண்டலத்தில் நிலைபெற்றிருந்தது.

பல்லவரது ஆட்சிக்காலத்தில் சோழரின் வழியினர் குறுநில மன்னராகி அன்னோர்க்குத் திறை செலுத்திவந்தனர். கி. பி. 849-ல் விசயாலயன் என்ற சோழமன்னன் ஒருவன் பல்லவர்களோடு போர்புரிந்து சோழமண்டலத்தின் ஒரு பகுதியைப் பற்றிக்கொண்டு தஞ்சாவூரில் வீற்றிருந்து முடிமன்னனாக அதனை அரசாளத்தொடங்கினான்.[5] இவனையே தொண்ணூற்றாறு புண்கள் மார்பிலேகொண்ட வீரன் என்று தமிழ்நூற்கள் புகழ்ந்து கூறுகின்றன என்பர். இவன் காலத்தே தான் தஞ்சாவூர் சோழமண்டலத்திற்குத் தலைமை நகரமாயிற்று. இவனது புதல்வன் முதலாம் ஆதித்த சோழன் எனப்படுவான். இவன் தன் நண்பனாகிய இரண்டாம்வரகுணபாண்டியனைத் துணையாகக்கொண்டு பல்லவர்களோடு பலவிடங்களில் பெரும்போர்கள் புரிந்தனன். இறுதியில் கி. பி. 880-ஆம் ஆண்டிற் கனித்

---

5. The Tiruvalangadu Plates of Rajendra Chola I-South Indian Inscriptions Vol. III No. 205; Kanyakumari Inscription of Vira Rajendra Deva. Epigraphia Indica Vol. XVIII No. 4.

னாகத் திருப்புறம்பயத்தில் நிகழ்ந்தபோரில் பல்லவர் முற்றிலும் தோல்வியுறவே ஆதித்தன் வெற்றியெய்தினன். இப்போரின் பயனாகச் சோழமண்டலம் முழுவதும் ஆதித்தனுக்கு உரித்தானதோடு தொண்டைமண்டலமும் அவனது ஆட்சிக்குள்ளாயிற்று. பல்லவரும் குறுநிலமன்னராய்ச் சோழமன்னர்கட்குத் திறைசெலுத்தும் நிலையை அடைந்தனர். ஆதித்தனும் 27 ஆண்டுகள் அரசாண்டு கி. பி. 907-ல் இறந்தான்.

இவ்வாதித்தனது புதல்வன் முதலாம் பராந்தக சோழன் என்பான். இவன் காலத்தில் சோழரது ஆட்சி உயர்நிலையை யடைந்தது. இவன் பாண்டிய நாட்டையும் ஈழநாட்டையும் வென்று தன்னடிப்படுத்தியவன்; இவனை 'மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இவன் தில்லையம்பலத்தில் பொன்வேய்ந்து அதனை உண்மையில் பொன்னம்பலமாக்கிய செய்தியொன்றே இவனது அளப்பரிய சிவபத்தியை நன்கு விளக்குகின்றது.[7] இவன் கி. பி. 907-முதல் கி. பி. 948-வரை அரசாண்டனன்.

இவ்வேந்தனுக்குப் பின்னர் இவனது புதல்வராகிய கண்டராதித்தசோழர் கி. பி. 956-வரை ஆட்சி புரிந்தனர். இவரது ஆளுகையில் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் இல்லையாயினும் இவரது சிவபத்தியின் மாண்பும் செந்தமிழ்ப் புலமையும் பெரிதும் போற்றற்குரியனவாம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்

7. 'கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்'—
விக்கிரமசோழனுலா—கண்ணி 16.

ளாகிய ஒன்பதாந் திருமுறையில் தில்லைச்சிற்றம்பலத் தெம்பெருமான்மீது இவர் பாடியருளிய திருப்பதிகம் ஒன்றுளது. எனவே, ஒன்பதாந்திருமுறையினை யரு ளிச்செய்த நாயன்மார் ஒன்பதின்மருள் இவ்வரசர் பெருமானும் ஒருவர் ஆவர்.[8] கொள்ளிடத்தின் வட கரையிலுள்ள திருமழபாடி என்னுந் தலத்திற்கு மேற் கே ஒரு மைல் தூரத்திலுள்ள கண்டராதித்தச்சதுர் வேதிமங்கலம் என்ற நகரம் இவர் அமைத்ததேயாகும். இவரது மனைவியாராகிய செம்பியன்மாதேவியாரது சிவபத்தியும் அளவிட்டுரைக்குந்தரத்ததன்று. இவ் வம்மையார் திருப்பணிபுரிந்து நிபந்தங்கள் அமைத் துள்ள சிவன்கோயில்கள் நம் தமிழகத்தில் பல உள் ளன.[9] கண்டராதித்த சோழரது படிமம் இவரது மனைவியாரால் கட்டுவிக்கப்பெற்ற கோனேரிராசபுரம் சிவன்கோயிலில் இன்றும் உளது.

இவ்வரசருக்குப் பின்னர் இவரது தம்பியாகிய அரிஞ்சயன் என்பான் சில மாதங்கள் ஆண்டனன். பிறகு இவனது புதல்வனாகிய இரண்டாம் பராந்தகன் கி. பி. 955 முதல் கி. பி. 970 வரை அரசு செலுத்தி னன். இவனைச் சுந்தரசோழன் என்றும் வழங்குவர். அன்றியும், இவனைப் 'பாண்டியனைச் சுரம் இறக்கின

8. ஒன்பதாம் திருமுறையின் ஆசிரியர்களுள் ஒருவராகிய இவ்வரசர் வரலாற்றைச் 'செந்தமிழில்' யான் எழுதி யுள்ள 'முதற்கண்டராதித்தசோழதேவர்' என்ற கட் டுரையில் விரிவாகக் காணலாம்.

9. திருவாரூர் அரநெறி, செம்பியன்மாதேவி (நாகபட்டி னம் தாலுகா), தென்குரங்காடுதுறை (S. I. I. Vol. III. No. 144), திருநல்லம் (கோனேரிராஜபுரம்— S. I. I. Vol. III. No. 146, 147 and 151); திரு மணஞ்சேரி; விருத்தாசலம்.

பெருமாள்' என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவனது மனைவி வானவன் மாதேவியென்பாள்.[10] இவ்வரசனுடைய படிமம் தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரத்தில் இவனது மகளாகிய குந்தவையால் எழுந்தருளுவிக்கப்பெற்றுப் பூசனைக்கு நிபந்தங்களும் விடப்பட்டுள்ளன.[11]

பின்னர், கண்டராதித்தனது திருமகனாகிய உத்தமசோழன் கி. பி. 970-ல் பட்டத்திற்கு வந்தான். இவனுக்கு மதுராந்தகன் என்ற பெயரும் உண்டு. இவனது ஆட்சிக்காலத்தில் இரண்டாம் பராந்தகசோழனது முதல் மகனாகிய ஆதித்த கரிகாலன் ஐந்து ஆண்டுகள்வரையில் இவனோடுசேர்ந்து ஆண்டுவந்தான். 'வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று தொடங்கும் கல்வெட்டுக்கள் இவ்வாதித்த கரிகாலனையே குறிக்கும்.[12] சில ஆண்டுகளில் இவன், சோழருக்குப் பகைவனாய்க் காலங்கருதிக்கொண்டிருந்த ஒரு தலைவனால் கொல்லப்பட்டான் என்று தெரிகிறது.[13] கி. பி. 985-ல் உத்தமசோழன் இறக்கவே, இரண்டாம் பராந்தகசோழனது இரண்டாவது மகனாகிய முதலாம் இராசராசசோழன் அரியணை ஏறினான்.

---

10. சுந்தரசோழனது பட்டத்தரசியாகிய வானவன்மாதேவி தன் நாயகன் இறந்தபோது உடன்கட்டை ஏறினாள் என்றும் அதுபோது இராசராசன் I குழந்தையாக இருந்தனன் என்றும் திருக்கோவலூரிலுள்ள முதல் இராசராசன் கல்வெட்டு உணர்த்துகின்றது. (செந்தமிழ் தொகுதி 4 பக். 232.)
11. South Indian Inscriptions Vol. II No. 6.
12. S. I. I. Vol. III Nos. 199 to 204.
13. M. E. R. 1921, para 31 ; Ins. No. 577 of 1920.

சோழமன்னருள் பல்வகையானும் பெருமையுற்றுப் பெருவீரனாய் விளங்கியவன் இவ்வேந்தனே என்று கூறுவது சிறிதும் புனைந்துரையாகாது. இவனது ஆளுகையில் சோழமண்டலம் மிக உயரிய நிலையை எய்திற்று. திருநாரையூரில் வாழ்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியாரைக் கொண்டு சைவ சமய குரவர்களது திருப்பதிகங்களைத் திருமுறைகளாகத் தொகுப்பித்தவன் இம்மன்னனே யாவன். இவனுக்கு அக்காலத்தில் இட்டு வழங்கிய சிவபாதசேகரன் என்ற பெயரொன்றே இவன் சைவ சமயத்தில் எத்துணை ஈடுபாடுடையவனாயிருந்தனன் என்பதை நன்கு விளக்குகின்றது. ஆயினும் இவன் புறமதத்தினரை என்றும் துன்புறுத்தியவனல்லன்; அன்னோருக்கு மிக்க ஆதரவுகாட்டி யொழுகிவந்தனன் என்பதற்கு எத்துணையோ ஆதாரங்கள் உள.

சோழமன்னர்களது பெருமைக்கும், புகழுக்கும் அக்காலத்திய சிற்ப நுட்பத்திற்கும் ஓர் அறிகுறியாய் இப்போது தஞ்சைமாநகரின்கண் விளங்குகின்ற 'இராசராசேச்சுரம்' என்ற பெரியகோயிலை எடுப்பித்தவன் இம்மன்னர்பெருமானே யாவன் என்பது ஈண்டு அறியத்தக்கது. இவ்வேந்தன், வேங்கி, கங்கப்பாடி, நுளம்பப்பாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டப்பாடி முதலான நாடுகளைவென்று தன்னடிப்படுத்திப் புகழெய்தியவன். இவற்றுள் வேங்கி என்பது கிருஷ்ணை கோதாவரி என்ற இருபேராறுகளுக்கு மிடையில் கீழ்க்கடலைச் சார்ந்துள்ள தொருநாடு என்பதை முன்னரே கூறியுள்ளோம். இது கீழைச்சளுக்கியரது ஆட்சிக்குட்பட்டது. கி. பி.

972-முதல் 989-வரை இந்நாடு உண்ணாட்டுக் கலகங்களால் அல்லலுற்றிருந்தது. முதலாம் இராசராச சோழன் அச்சமயமே அந்நாட்டைக் கைப்பற்றற்குத் தக்கதெனக் கருதிப் பெரும்படையுடன் அவன் மகனாகிய முதலாம் இராசேந்திரசோழனை அவ் வேங்கி நாட்டிற்கு அனுப்பினான். அவன் அந்நாட்டை வென்றதோடு அமையாமல் கீழைச்சளுக்கிய மன்னனாகிய விமலாதித்தனையும் சிறைபிடித்துக்கொண்டு தஞ்சைக்குத் திரும்பினான். விமலாதித்தனும் தஞ்சைமாநகரில் பல ஆண்டுகள் தங்கியிருந்தான்.

பிறகு, முதலாம் இராசராசசோழன் தன் மகள் குந்தவையை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்ததோடு வேங்கிநாட்டை யாட்சிபுரியும் உரிமையும் அளித்து அந்நாட்டிற்கு அவனைத் திரும்ப அனுப்பினான்.[14] விமலாதித்தனும் அந்நாட்டைக் கி. பி. 1015 முதல் 1022 வரை அரசாண்டான். அவனுக்கு இராசராசநரேந்திரன், விசயாதித்தன் என்ற இருமக்கள் இருந்தனர். அவர்களுள் இராசராசநரேந்திரன் என்பவனே விமலாதித்தன் இறந்தபின்னர்க் கி. பி. 1022-ல் முடி சூட்டப்பெற்றான். முதலாம் இராசராசசோழனது மகனாகிய முதலாம் இராசேந்திரசோழன் தன் மகள் அம்மங்கைதேவியைத் தன் உடன்பிறந்தாளது மகனும் வேங்கிநாட்டு வேந்தனுமாகிய இராசராசநரேந்திரனுக்கு மணம்புரிவித்தான். மணமக்கள் இருவரும் வேங்கிநாட்டில் வாழ்ந்துவந்தனர்.

அந்நாளில் பட்டத்தரசியாகிய அம்மங்கைதேவி கருப்பமுற்றுத் தன் பிறந்தகமாகிய கங்கைகொண்ட

14. Mysore Gazetteer Vol. II page 947.

சோழபுரஞ்சென்று அங்குக் கி. பி. 1043-ஆம் ஆண்டில் பூசநாளில் ஒரு தவப்புதல்வனைப் பெற்றாள்.[15] திருமகன் பிறந்தகாலிலே நன்னிமித்தங்கள் காணப்பட்டன. அவற்றைக்கண்ட நகரமாந்தர் எல்லோரும் இறும்பூதுற்று, முன்னாளில் இலங்கையை யழித்துப் பின்னாளில் பாரதப்போர் முடித்த திருமாலே இப்புவியின்கண் மறம் நீங்க அறம் வளருமாறு இந்நாளில் அம்மங்கைதேவியின் ஆலிலைபோன்ற திருவயிற்றில் தோன்றியுள்ளார் என்று கூறிப் பெருமகிழ்வுற்றனர். முதலாம் இராசேந்திர சோழனது பட்டத்தரசியும் இவற்றையெல்லாம் கண்டு களிப்பெய்தித் தன் காதற் பேரனைக் கைகளில் ஏந்திப் பாராட்டியபோது ஓர் ஆண்டிற்குமுன் காலஞ்சென்ற தன் நாயகரது அடையாளங்கள் பல அக்குழந்தையின்பா லிருத்தல்கண்டு 'இவன் எமக்கு அருமகனாகி எங்கள் இரவிகுலத்தைத் தளராது தாங்குவானாக'' என்றுரைத்து அம்மகவிற்கு 'இராசேந்திரசோழன்'[16] என்று பெயரிட்டாள்.[17] இவ்வரசிளங்குமரனும் அங்கேயே வளர்ந்துவந்தான். இராசேந்திரனும், இளமையில் கல்வி கற்றுப் பலகலைகளிலும் தேர்ச்சியுற்று அறிஞர் யாவரும் 'கற்றுத் துறைபோய நற்றவக் குரிசில்' என்று புகழ்ந்து பேசுமாறு கல்வியில் உயர்நிலையை யடைந்தான். பிறகு இவ்வரசிளங்குமரன், உலகங் காக்கும் கடமை பூண்ட தன் குலத்திற்குரிய படைக்கலப் பயிற்சியும் பெற்று,

15. S. I. I. Vol. VI No. 167.

16 இந்த இராசேந்திர சோழனே நம் வரலாற்றுத் தலைவனாகிய முதலாங் குலோத்துங்கசோழன். இப்பெயர் இவனுக்குக் கி. பி. 1075-க்குப்பின்னர் வழங்கத்தொடங்கிற்று.

17. க. பரணி-தா 223, 224, 225.

யானை ஏற்றம் குதிரை ஏற்றங்களும் பயின்று, தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தனன். இவனது அம்மான்மார்களாகிய இராசாதிராசசோழன், விசயராசேந்திரசோழன், வீரராசேந்திரசோழன் முதலானோர் இவனிடத்து மிக்க அன்புடையவர்களாக நடந்து வந்தனர். இவனது ஆற்றலை யுணர்ந்த சான்றோர் தந்தையின் சந்திரகுலத்தையும் தாயின் சூரியகுலத்தையும் ஒருங்கே பெருமையுறச்செய்து, அவற்றைப் புகழுக்கு இலக்கணமாக்க வந்த உபயகுலோத்தமன் என்று இவனைப் பெரிதும் பாராட்டிப் பேசலாயினர்.

## மூன்றாம் அதிகாரம்.

### வேங்கிநாட்டில் குலோத்துங்கன் முடிசூடுதல்.

நம் இராசேந்திரன் பலகலைகளினும் வல்லவனாய்ப் பல்லோரும் புகழுமாறு கங்கைகொண்டசோழபுரத்தில் வாழ்ந்துவரும் நாட்களில், வேங்கிநாட்டில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த தன் தந்தையாகிய இராசராசநரேந்திரன் நோயுற்று வருந்திக்கொண்டிருக்கின்றனன் என்று ஒரு திருமுகம் வரப்பெற்றனன். இதனைக்கண்டதும் அவன் பெருங்கவலையுற்றுத் தன் மாமன்மாரிடம் விடைபெற்றுக்கொண்டு விரைவில் வேங்கிநாட்டை யடைந்தான்; அங்குப் பிணியுற்றுக்கிடந்த தன் தந்தையின் நிலைமையைக்கண்டு பெரிதும் மனமுடைந்து, அவனை விட்டகலாது அணுக்கத்தொண்டனாயமர்ந்து, வேண்டியன புரிந்துவந்தான். அந்நாளில் சளுக்கிய இராசராசனும் தனக்குக் கடவுள் அமைத்த வாழ்நாள் முடிவுற்றமையின் கி. பி. 1062-ஆம் ஆண்டில் வானுலகஞ்சென்றனன்.[1] தந்தையின் பெரும்பிரிவிற்காற்றாது வருந்திய இராசேந்திரனும் மகன் தந்தைக்கு ஆற்றவேண்டிய தீக்கடன் நீர்க்கடன் முதலியவற்றை முடித்து, அம்மான்மாரும் ஆன்றோரும் ஆறுதல்கூற, ஒருவாறு அத்துன்பத்தினின்று நீங்கினன். பின்னர், அமைச்சரும் அந்தணரும் அவனுக்கு முடிசூட்டுவிழா நடத்தற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யத்தொடங்கினர்.

1. S. I. I. Vol. I, No. 39.

இஃது இங்ஙனமாக, கீழைச்சளுக்கியரது தாயத்தினரான மேலைச்சளுக்கிய மன்னர்களுள் ஆறாம் விக்கிரமாதித்தன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் பெரிய போர்வீரன். அவனுக்கும் சோழருக்கும் அடிக்கடி பெரும்போர்கள் நிகழ்ந்துவந்தன. சோழர்கள் தெற்கேயுள்ள பல மன்னர்களை வென்று தம்மடிப்படுத்தித் தாம் முடிவேந்தர்களாய் மேன்மையுற்று விளங்கினர். அங்ஙனமே மேலைச்சளுக்கியரும் தக்கணத்தின் வடபாகத்தில் பெருமையுடன் இலங்கினர். இதனால் பேராண்மையும் பெருவீரமும் படைத்த இவ்விரு அரசகுலத்தினரும் ஒருவரையொருவர் வென்று கீழ்ப்படுத்தவேண்டுமென்ற எண்ணமும் முயற்சியும் உடையவராகவே இருந்தனர். இதற்கேற்ப, முதலாம் இராசராசசோழன் காலமுதல் சோழர்கள் கீழைச்சளுக்கிய மன்னர்களுக்குத் தம் பெண்களை மணஞ்செய்துகொடுத்து அன்னோரைத் தமக்கு நெருங்கிய உறவினராகச் செய்துகொண்டதோடு தம் ஆட்சிக்குட்பட்டிருக்குமாறும் செய்துவந்தனர். இதனால் கீழைச்சளுக்கியரது உதவி மேலைச்சளுக்கியருக்குக் கிடைக்காமற் போயிற்று. அன்றியும் சோழர்களது வலிமையும் பெருமையும் வளர்ச்சியுறலாயின. இதனையுணர்ந்த மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆறாம் விக்கிரமாதித்தன் தன் தாயத்தினரான கீழைச்சளுக்கியரைச் சோழர்களினின்று பிரித்துத் தன்பால் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடையவனாய்க் காலங்கருதிக்கொண்டிருந்தான். அதற்கேற்ப அவன், வேங்கியின் மன்னனாகிய இராசராசநரேந்திரன் இறந்ததையறிந்து, அதுவே தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கோடற்குத் தக்க காலம் என்று கருதித் தன் தண்டநாயகனான சாமுண்டராயன்

தலைமையில் ஒரு படையை வேங்கிநாட்டிற்கனுப்பினான்.[2]

இச்செய்தியை யறிந்த வீரராசேந்திரசோழன் தன் முன்னோர்கள் காலமுதல் நெருங்கிய உறவினால் பிணிக்கப்பட்டிருந்த வேங்கிவேந்தனையும், தங்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த வேங்கிநாட்டையும் இழப்பது தன் ஆண்மைக்கும் வீரத்திற்கும் இழிவையே பயக்குமென்று துணிந்து ஒரு பெரும்படையோடு அந்நாட்டை நோக்கிச்சென்றான். அங்குக் கடும்போர் நடைபெற்றது. அப்போரில் மேலைச்சளுக்கியரது தண்டநாயகனான சாமுண்டராயன் என்பான் கொல்லப்பட்டான். அவனது படைகள் எல்லாம் சிதறுண்டு நாற்றிசையிலும் ஓடியுய்ந்தன. வெற்றியெய்திய வீரராசேந்திரசோழன் தன் மருமகனாகிய இராசேந்திரனுக்கு வேங்கிநாட்டில் ஒரு நன்னாளில் முடிசூட்டி, அந்நாட்டிலுள்ள மக்கள் எல்லோரையும் மகிழ்வுறச்செய்தான். அக்கீழைச்சளுக்கிய நாட்டின் ஒழுகலாற்றின்படி, நமது இராசேந்திரன் ஏழாம் விஷ்ணுவர்த்தனன்[3] என்னும் பெயரை முடிசூட்டுநாளில் எய்தித் 'தந்தையினும் சதமடங்கு தனயன்' என்ற ஆன்றோர் உரைக்கு இலக்காக அரசு செலுத்திவந்தான். அக்காலங்களில் அவனுக்கு உசாத்துணையாயிருந்து அவனது பேரன்பிற்குரியவனாய் ஒழுகிவந்தவன் விசயாதித்தன் என்ற அவனது சிறிய தந்தையேயாவன். அவனது ஆட்சிக் காலத்தில் வேங்கிநாடு மிகச் செழிப்புற்றிருந்தது. குடிகளும் இன்புற்று வாழ்ந்துவந்தனர்.

---

2. சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம் பக்-26.
3. S. I. I. Vol. VI. No. 201.

# நான்காம் அதிகாரம்.

## குலோத்துங்கன் சோழமண்டலத்திற்கு இளவரசன் ஆதல்.

சோழநாட்டில் முதலாம் இராசராசசோழன் கி. பி. 1012-ல் விண்ணுலகெய்திய பின்னர் அவனது புதல்வனாகிய முதலாம் இராசேந்திரசோழன் அரியணை ஏறினான். இவனைக் கங்கைகொண்டசோழனென்றும் வழங்குவர். இவனது ஆளுகையில் சோழமண்டலம் ஈடும் எடுப்புமற்ற நிலையையடைந்தது. மற்றைச் சோழமன்னர்களது ஆட்சிக்காலங்களில் இச்சோழமண்டலம் இத்தகையதொரு சிறப்பும் பெருமையும் எய்தவில்லையென்றே கூறலாம். இவ்வேந்தன், மண்ணைக்கடக்கம், ஈழம், இரட்டப்பாடி, கோசலைநாடு, உத்தாலாடம், தக்கணலாடம், வங்காளம், கடாரம், பப்பாளம், இலாமுரிதேசம் முதலான நாடுகளையும், கங்கையாற்றைச் சார்ந்த சில பகுதிகளையும்வென்று பெரும்புகழுடன் விளங்கினான். இவனைப் 'பூர்வதேசமுங் கங்கையுங் கடாரமுங்கொண்ட கோப்பரகேசரிவர்மன்' என்று கல்வெட்டுக்கள் கூறும். இவன் வடநாட்டு வேந்தர்களை வென்று கங்கைநீர் நிரப்பிய குடங்களை அவர்களது தலைகளில் ஏற்றிச் சோழமண்டலத்திற்குக் கொண்டுவரச்செய்து, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பெரியதோர் ஏரி வெட்டுவித்து அக்கங்கை நீரை அதில் ஊற்றி அதற்குச் 'சோழகங்கம்' எனப் பெயரிட்டான்.[1]

1. S. I. I. Vol. III. No. 205 ; Kanyakumari Inscription of Virarajendra Deva—Epi. Ind. Vol. XVIII. No. 4.

இந்த ஏரியின் பக்கத்துள்ளோர் இதனைப் பொன்னேரி என்று இப்போது வழங்குகின்றனர். இதனருகில் இவ்வேந்தன் தான் வடநாட்டில் அடைந்த வெற்றிக்கு அடையாளமாக ஒரு நகர் அமைத்து அதற்குக் கங்கைகொண்டசோழபுரம் என்று பெயரிட்டான். இவன் காலமுதல் இப்புதியநகரமே சோழர்களுக்குத் தலைநகரமாயிற்று. இங்கு இம்மன்னனால் எடுப்பிக்கப்பெற்ற கங்கைகொண்டசோழேச்சரம் என்ற சிவன்கோயில் ஒன்றுளது. இஃது ஒன்பதாம் திருமுறையாசிரியருள் ஒருவராகிய கருவூர்த்தேவரால் பாடப்பெற்றது. பழையாறை என்று தற்காலத்து வழங்கும் முடிகொண்டசோழபுரத்தும்[2] இவ்வேந்தனுக்குப் பெரியதோர் அரண்மனை இருந்தது. முடிகொண்டான் என்ற பெயருடன் தஞ்சாவூர் ஜில்லாவில் இப்போதுள்ள முடிகொண்டசோழப் பேராற்றை வெட்டுவித்தவனும் இவ்வரசனே யாவன். இவ்வேந்தன் கி. பி. 1042-ஆம் ஆண்டில் இறந்தான்.

பிறகு இவனது மக்கள் தம்முள் முதல்வனாகிய முதலாம் இராசாதிராசசோழன் பட்டத்திற்கு வந்தான். இவன் தன் தந்தையைப்போன்ற பெருவீரன். இவன் மேலைச்சளுக்கியரோடு அடிக்கடி போர்புரிந்து இறுதியில் சளுக்கியமன்னனான ஆகவமல்லனோடு புரிந்த கொப்பத்துப்போரில் கி. பி. 1053-ல் உயிர் துறந்தான். பின்னர், இவனது தம்பியாகிய விசயராசேந்திரசோழன் போர்க்களத்தில் முடிகவித்து, அப்போரை நடாத்தி வெற்றி பெற்றான். இவன் தன்

2. Inscription No. 271 of 1927; M. E. R. 1927.

தந்தையையும் தமையனையும் போலவே சிறப்புடன் அரசாண்டுவந்தான். இவனும் மேலைச்சளுக்கியரோடு தொடர்ந்து போர்செய்துவந்தான். இவனைக் 'கலியாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டருளி ஆனைமேல் துஞ்சியருளிய பெருமாள் விசயராசேந்திரதேவன்' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே, இவனும் சளுக்கியரோடு நிகழ்த்திய போரொன்றில் உயிரிழந்தனன் போலும்.

பின்னர், இவனது இளவலாகிய மும்முடிச் சோழன் என்பான் இராசமகேந்திரன் என்ற பெயருடன் பட்டம்பெற்று அரசாளத் தொடங்கினான். இவன் சோழமண்டலத்தின் ஆட்சியை அடைவதற்கு முன் தன் தந்தையாகிய கங்கைகொண்டசோழனது ஆணையின்படி சேரமண்டலத்திற்கும் பாண்டிமண்டலத்திற்கும் அரசப் பிரதிநிதியாயிருந்து சோழபாண்டியன் என்ற பட்டத்துடன் அவ்விரண்டையும் ஒருங்கே ஆண்டவன். இவன் தன் காலத்தில் சோழமண்டலத்திலுள்ள மக்கள் எல்லோரும் அமைதியாக வாழ்ந்து வருமாறு நன்னெறி வழாது செங்கோல் செலுத்தினான். இத்தகைய பெருங்குண வேந்தனும் சில ஆண்டுகளில் துஞ்சினான்.

பிறகு, இவனது தம்பியாகிய வீரராசேந்திர சோழன் கங்கைகொண்டசோழபுரத்தில் கி. பி. 1063 ஆம் ஆண்டில் அரசு கட்டிலேறினான். இவ்வேந்தன் போராற்றலும் பெருவீரமும் படைத்தவன். இவன் முடிமன்னர்களான தன் தமையன்மார்களுக்கும், அன்னோரது மக்களுக்கும் மேலைச்சளுக்கியர்களால் நேர்ந்த ஆற்றொணா இன்னல்களை மனத்திற்கொண்டு, பெருஞ்-

செற்றமுடையவனாய் அவர்களைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு அவர்களது இரட்டப்பாடி நாட்டின் மேற் சென்றான். இவன், இங்ஙனம் ஐந்துமுறை படையெடுத்துச்சென்று மேலைச்சளுக்கியரது நாட்டைப் பலவிடங்களிற் கொள்ளையிட்டும் சிலவிடங்களில் அழித்தும் பாழ்படுத்தினான். இம்மானக்கேட்டைப் பொறாத மேலைச்சளுக்கியர் தம் படையைத் திரட்டிக் கொண்டு இவனோடு பலவிடங்களில் போர்புரிந்தனர். இறுதியில் கிருஷ்ணையும் துங்கபத்திரையும் கூடும் இடமாகிய கூடல்சங்கமத்தில் கி.பி. 1064-ல் இருபடைகளும் கைகலந்து பெரும்போர்செய்தன. அப்போரில் மேலைச்சளுக்கிய மன்னர்களாகிய ஆகவமல்லன், விக்கிரமாதித்தன் முதலானோர் தோல்வியுற்றுப் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர். சளுக்கிய சாமந்தர்களுட் பல்லோர் போர்க்களத்தில் உயிர்துறந்து புகழ்கொண்டனர். வீரராசேந்திரசோழனும் தன்னுடன் பிறந்த முன்னவர் எண்ணம் முடித்து வெற்றித்திருவை மணந்து, தனது தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்திற்கு மகிழ்வுடன்சென்று இனிது செங்கோல் ஓச்சுவானாயினன்.

இங்ஙனம் சோழருக்கும் மேலைச்சளுக்கியருக்கும் நிகழ்ந்துவந்த போர்களில் சோழகுலத்துதித்த முடிவேந்தர் சிலரும் அரசிளங்குமரர் பலரும் இறந்தொழிந்தனர். இறுதியில் எஞ்சியவர் வீரராசேந்திர சோழனும் இவனது மைந்தனான அதிராசேந்திர சோழனுமே யாவர். அதிராசேந்திரனும் வீரராசேந்திரனது பட்டத்தரசியின் மைந்தன் அல்லன். ஆதலால் அவன் அரசாளும் உரிமையைப் பெறுதற்கு

ஏற்றவனல்லன் ஆயினன். அன்றியும், தன் பாட்டனை முதலாம் இராசராசசோழன் காலத்தில் உயர் நிலைக்குக் கொண்டுவரப்பெற்றுத், தன் தந்தையாகிய கங்கைகொண்ட சோழனால் மிகச்சீரிய நிலைக்கு உயர்த்தப்பெற்றுத், தன் தமையன்மார்களாலும் தன்னாலும் நன்கு பாதுகாக்கப்பட்டு வந்த சோழமண்டலத்தைத் அதன் பெருமை குன்றாதவாறு காத்து ஆட்சிபுரிய வல்ல ஆற்றலும், வீரமும் அதிராசேந்திரனுக்குச் சிறிதும் இல்லை என்பதை வீரராசேந்திரன் நன்குணர்ந்திருந்தான். இதனால் இவன் அதிராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டஞ்சூட்ட விரும்பவில்லை. அன்றியும் ஆண்மையும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்பற்ற வேந்தன் ஒருவனே சோழமண்டலத்தின் சக்கரவர்த்தியாகத் தனக்குப் பின்னர் முடிசூட்டப்பெறுதல் வேண்டுமென்றும் இவன் கருதினான்; இதற்கு எவ்வாற்றானும் தகுதியமையப் பெற்றவன் தன் உடன் பிறந்தாளது மைந்தனும், வேங்கிநாட்டு வேந்தனுமாகிய இராசேந்திரனே என்று துணிந்து, தன் ஆட்சிக்காலத்திலே அவனை வேங்கியினின்று வருவித்துச் சோழமண்டலத்திற்கு இளவரசுப் பட்டங்கட்டினான். இளவரசனான இராசேந்திரனும் தான் முன்னர் ஆட்சி புரிந்துவந்த வேங்கிநாட்டைத் தன் சிறிய தந்தையாகிய விசயாதித்தன் என்பவனை அரசப்பிரதிநிதியாயிருந்து ஆண்டுவருமாறு ஏற்பாடு புரிந்துவிட்டுத் தனது அம்மானாகிய வீரராசேந்திரனோடு சோணாட்டில் வசித்து வந்தான்.

அந்நாளில் இளவரசனான இராசேந்திரன் வடபுலத்திலுள்ள சக்கரக்கோட்டமண்டலத்தை அரசாண்டு வந்த தாராவர்ஷனை அடக்கிவருவதற்கும், திக்குவிசயம்

செய்தற்கும் எண்ணி வெற்றியைத் தரவல்ல பெரும் படையுடன் கங்கைகொண்ட சோழபுரத்தினின்று புறப்பட்டு வடபுலம் நோக்கிச் சென்றான். சென்றவன் மத்தியமாகாணத்திலுள்ள வயிராகரம் என்ற ஊரில் எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றிக்கொண்டு அவ்வூரையும் எரியூட்டினான்;[3] பின்னர், அம்மாகாணத்திலுள்ள சக்கரக்கோட்டமண்டலத்தை ஆண்டுவந்த தாராவர்ஷன் என்னும் வேந்தனோடு போர்புரிந்து அவனைத் தனக்குத் திறைசெலுத்தும்படி செய்தான்.[4] இங்ஙனம் இராசேந்திரன் வடபுலத்தில் பெருவீரத்துடன் போர் செய்துகொண்டிருக்கும் காலத்தில் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்தில் வீரராசேந்திரசோழன் விண்ணுலகெய்தினன்.

---

3. S. I. I. Vol. III. No. 68; க. பரணி தா 239.
வயிராகரத்தில் யானைகளும் வைரச்சுரங்கங்களும் முற்காலத்தில் மிகுதியாக இருந்தன என்று 'அயினி அக்பரி' கூறுகின்றது. இது சக்கரக்கோட்டத்திற்கு அண்மையிலுள்ளது. ( Epi. Ind. Vol. X. No. 4.)

4. S. I. I. Vol. III. No. 68; க. பரணி-தா. 241.
சக்கரக்கோட்டம் என்பது மத்திய மாகாணத்திலுள்ள வத்ஸராச்சியத்தில் உள்ளது. (Baster State) இஃது இதுபோது இந்திராவதி ஆற்றின் தென்கரையில் இருக்கிறது; சித்திரக்கூடம் (Chitrakut) என்று வழங்கப்படுகின்றது; தற்காலத் தலைநகராகிய ஜகதல்புருக்கு மேற்கே 25 மைல் தூரத்தில் உள்ளது. ( Epi. Ind. Vol. IX. page 178.) இதனைத் தலைநகராகக்கொண்டது சக்கரக்கோட்ட மண்டலம் ஆகும். குருஸ்பால் என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டு "சக்ரகூடாதீஸ்வரனும்................................ தாராவர்ஷாசபோகலேஸ்வரா" என்று கூறுகின்றது. இதனால், சக்கரக்கோட்ட மண்டலத்தை ஆட்சிபுரிந்தவன் தாராவர்ஷன் என்பது உறுதி எய்துகின்றது. ( Do. pages 161 & 179 )

# ஐந்தாம் அதிகாரம்.

## குலோத்துங்கன் சோழமண்டலத்தில் முடிசூடுதல்.

வீராசேந்திரசோழன் இறந்ததையும் அதனால் சோழமண்டலம் அரசனில்லாதிருத்தலையும் சளுக்கிய விக்கிரமாதித்தன் கேள்வியுற்று, விரைந்து கங்கைகொண்டசோழபுரஞ்சென்று அதிராசேந்திரசோழனுக்கு முடிசூட்டி நாட்டை ஆண்டுவரச்செய்தான்.[1] வீராசேந்திரனது புதல்வியைச் சளுக்கிய விக்கிரமாதித்தன் மணந்திருந்தமையால், அவன் தன் மைத்துனனாகிய அதிராசேந்திரன் இளவரசுப்பட்டம் பெறாதவனாயிருத்தலை யுணர்ந்தும் அவனையே சோழமண்டலத்திற்கு அரசனாக்கமுயன்று தன் கருத்தையும் நிறைவேற்றிக்கொண்டான். அன்றியும் இளவரசனாக முன்னமே முடிசூட்டப்பெற்றிருந்த இராசேந்திரன் என்பான், வீராசேந்திரன் இறந்த போது தலைநகரில் இல்லாமல் வடபுலஞ்சென்றிருந்தது சளுக்கிய விக்கிரமாதித்தன் தான் எண்ணியதை எண்ணியாங்கு முடித்தற்கு நலமாகவும் இருந்தது. வேங்கி நாட்டு வேந்தனாகிய இராசேந்திரன் சோணாட்டையும் பெறுவானாயின், இவ்விருநாடுகளும் ஓர் அரசனது ஆட்சிக்குள்ளாகிவிடுமென்றும், தன் பகைஞனாகிய அவன் தன்னினும் பெருவலிபடைத்த பேரரசனாகிவிடுவா

1. சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம் பக்.—31.

C. N. Srinivasagopalan



ளென்றும் அவ்விக்கிரமாதித்தன் கருதியே அவன் சோழநாட்டின் ஆட்சியைப் பெறுதலாறு தன் மைத்துனனாகிய அதிராசேந்திரனை அரசனாக்கினான் என்பது ஈண்டு அறிந்துகொள்ளுதற்குரியதாகும்.

மேலைச்சளுக்கிய வேந்தனாகிய விக்கிரமாதித்தன் தான் கருதியதை நிறைவேற்றியமையாலுண்டான பெருமகிழ்வோடு தன் நாட்டிற்குச்சென்றான். அதிராசேந்திரனும் சோழநாட்டை ஆண்டுவந்தான். அவனது ஆட்சியில் மக்கட்குண்டான வெறுப்பினாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ உண்ணாட்டிற் பெருங்கலகம் உண்டாயிற்று. அக்கலகத்தை யடக்கி நாட்டை நன்னிலையில் நிறுத்தற்கேற்ற ஆற்றலும் ஆண்மையும் அரசன்பால் இல்லாமற்போயின. சோழ மண்டலத்திலிருந்த சிற்றரசர்களும் அந்நாட்களில் அவனுக்கு உதவிபுரிந்தாரில்லை. சேய்மையிலுள்ள இரட்டப்பாடி நாட்டில் அரசாண்ட விக்கிரமாதித்தனும் இக்கலக நிகழ்ச்சியை யுணர்ந்து தக்ககாலத்தில் வந்து உதவிசெய்தற்கியலாதவன் ஆயினான். ஆகவே உண்ணாட்டில் நிகழ்ந்த அப்பெருங்கலகத்தில் அரசனான அதிராசேந்திரசோழன் கொல்லப்பட்டான். கொல்லப்படவே, சோணாடு அரசனின்றி அல்லலுற்றது. குறுநிலமன்னரது கலகம் ஒருபுறமும் உண்ணாட்டுக்குழப்பம் மற்றொருபுறமும் மிக்கெழவே, சோழநாட்டு மக்கள் எல்லோரும் அமைதியான வாழ்வின்றி ஆற்றொணாப் பெருந்துன்பத்துள் ஆழ்ந்தனர். கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார்,

"மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே

சாதிக ளொன்றோ டொன்று தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியி னில்லா தொழுக்கமு மறந்து போயே

ஒருவரை யொருவர் கைமிக் கும்பர்தங் கோயில் சாம்பி
அரிவையர் கற்புச் சோம்பி யரண்களு மழியவாங்கே[2]
கலியிருள்பரந்தது"

என்று இக்குழப்பத்தை அக்காலத்திற் கூறியுள்ளார். அன்றியும் சோழநாடு அக்காலத்தில் அரசனின்றி அல்லலுற்றிருந்த செய்தியை முதலாம் குலோத்துங்க சோழனது மெய்க்கீர்த்திகளினும்[3] பார்க்கக்காணலாம்.

இங்ஙனம் சோழநாடு நிலைகுலைந்திருந்த செய்தியை வடபுலத்திற் போர்புரிந்துகொண்டிருந்த இளவரசனாகிய இராசேந்திரன் அறிந்தவுடன் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்திற்கு விரைந்துசென்று முடிசூடிக்கொண்டான். உடனே உள்நாட்டுக் குழப்பமும் கலகமும் ஒழியவே, சோழமண்டலமெங்கும் அமைதி நிலவிற்று.[4] அப்பொழுது சிற்றரசர்கள் அவன் அடியிணை அறுகெடுத்திட்டு வணங்கினர்; அக்

2. க. பரணி—தா. 245, 246, 247.
3. S. I. I. Vol. III. Nos. 64 & 72.
4. —'நாடு
கலகமுங் கங்கமுங் காய்கலியு மாற்றி
உலகமுன் காத்த உரவோனை'— என்று இராசராச சோழனுலாவில் சோழநாட்டில் நிகழ்ந்த கலகத்தையும் குழப்பத்தையும் முதற்குலோத்துங்கசோழன் அடக்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

துனர் 'அரசர் பெருமான் நீடு வாழ்க' என்று வாழ்த்தினர்; மனுநெறி எங்கும் தலையெடுக்கவே அவன் புகழ் யாண்டும் பரவுவதாயிற்று.

நிழலிலடைந்தன திசைகள்
  நெறியிலடைந்தன மறைகள்
கழலிலடைந்தன ருதியர்
  கடலிலடைந்தனர் செழியர்.

பரிசிற்சுமந்தனர் கவிஞர்
  பகடுசுமந்தன திறைகள்
அரசசுமந்தன விறைகள்
  அவனிசுமந்தன புயமும்.

# ஆறாம் அதிகாரம்.

## குலோத்துங்கனது அரசாட்சி.

நம் இராசேந்திரன் சோழமண்டலத்தின் ஆட்சியைக் கி. பி. 1070-ஆம் ஆண்டில் எய்திய பின்னர், ஐந்தாண்டுகள் வரை இவனுக்கு இப்பெயரே வழங்கிவந்தது. அதற்கு முன்னர் இவன் வேங்கிநாட்டையாண்டுவந்தபோது அந்நாட்டின் ஒழுகலாற்றின்படி, 'விஷ்ணுவர்த்தனன்' என்ற பெயரும் அங்கு வழங்கிற்றென்பதை முன்னரே கூறியுள்ளோம். ஆயினும் சோணாட்டரசுரிமையை அடைந்தபிறகு கி. பி. 1075-முதல் குலோத்துங்க சோழன் என்ற பெயரே இவனுக்கு வாணாள் முழுமையும் நிலைபெற்று வழங்கலாயிற்று. குலோத்துங்கன் என்ற பெயருடைய சோழமன்னருள் இவனே முதல்வனாதலின், இவனை முதலாங் குலோத்துங்கன் என்று வழங்குதலே அமைவுடைத்து. இனி, நாமும் இவனைக் குலோத்துங்கன் என்றே எழுதுவோம். இப்பெயரேயன்றி இவனுக்கு வழங்கிய வேறுபெயர்களும் சில உள. அவை, அபயன், விசயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன், உலகுய்யவந்தான் என்பன. இப்பெயர்கள் இவனைக் குறித்தலைக் கல்வெட்டுக்களிலும் கலிங்கத்துப்பரணியிலும் தெளிவாகக் காணலாம். சோழ அரசர்கள் தத்தம் ஆட்சியின் தொடக்கத்தில் ஒருவர்பின் ஒருவராகப்

புனைந்துகொண்டுவந்த இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள்,[1] நம் குலோத்துங்கன் இராசகேசரி என்ற பட்டம் பெற்றவன் ஆவான்.

இவ்வேந்தன்காலத்து நிகழ்ந்த போர்களுள்ளே ஒன்றிரண்டொழிய எஞ்சியன வெல்லாம் இவனது ஆட்சியின் பதினான்காம் ஆண்டிற்கு முன்னரே முடிவெய்தின. போர்களெல்லாம் ஒருவாறு முடிவுற்ற பின்னர், கி.பி. 1084-ஆம் ஆண்டில் இவன் சக்கரவர்த்தி என்ற பட்டமும்[2] 1090-ல் திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டமும் புனைந்துகொண்டு பல்வகையாலும் பெருமையும் புகழும் எய்தி இனிது வாழ்ந்துவந்தான். திரிபுவனசக்கரவர்த்தி என்ற பட்டம் புனைந்து ஆட்சி புரிந்த சோழமன்னருள் இவனே முதல்வன் ஆவான். இவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த இவனது வழித்தோன்றல்களுள் ஒவ்வொருவரும் இப்பட்டம் புனைந்தே அரசாண்டுவந்தனர். 'திரிபுவன சக்கரவர்த்தி' என்ற தொடர்மொழி சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம் ஆகிய மூன்றுக்கும் சக்கரவர்த்தி என்ற பொருளை யுணர்த்தும்போலும்.

இங்ஙனம் பெருமையுடன் வாழ்ந்துவந்த குலோத்துங்கன் நாட்டிற்கு நலம்புரியக் கருதி முதலில் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் அரசர்க்கு நெடுங்காலமாகச் செலுத்திவந்த சுங்கத்தை நீக்கினான். ஓர் அரசன் தன் நாட்டிலுள்ள எல்லா மக்கட்கும் இனிமை பயப்பவாய்ப் பொதுவாகச் செய்யக்கூடிய நலன்களுள்

1. சோழவமிச சரித்திரம் பக். 7.
2. S. I. I. Vol. III, page 131.

இதனினும் சிறந்தது வேறு யாதுளது? இதனால் மக்கள் எல்லோரும் இவனை வாயாரவாழ்த்திச் 'சுங்கந்தவிர்த்த சோழன்' என்று வழங்குவாராயினர். 'தவிராத சுங்கந்தவிர்த்தோன்'[3] என்று புலவர் பெருமக்களும் இவனைப்புகழ்ந்து பாராட்டினர். தஞ்சாவூரைச் சார்ந்த கருந்திட்டைக்குடி இவனது ஆட்சிக்காலத்தில் சுங்கந் தவிர்த்த சோழனல்லூர் என்ற பெயரும் எய்திற்று. பின்னர், சோழமண்டலம் முழுவதையும் அளந்து நிலங்களின் பரப்பை உள்ளவாறு அறிந்தாலன்றி நிலவரியை ஒழுங்குபடுத்தல் இயலாது என்று கருதி, அதனை முற்றிலும் அளக்குமாறு ஆணையிட்டான். அவ்வேலையும் அவன் பட்டமெய்திய பதினாறாம் ஆண்டாகிய கி. பி. 1086-ல் தொடங்கப்பெற்று, இரண்டு ஆண்டுகளில் முடிவுற்றது.[4] பிறகு, இவன், குடிகள் எல்லோரும் ஆறிலொரு கடமை நிலவரி செலுத்திவருமாறு ஏற்பாடுசெய்தான். இங்ஙனமே இவனது பாட்டனுக்குத் தந்தையாகிய முதலாம் இராசராசசோழன் காலத்தும் சோழமண்டலம் ஒருமுறை அளக்கப்பெற்றதோடு ஆறிலொருகடமை வரியும் விதிக்கப்பெற்றது. குலோத்துங்கனது ஆளுகையில் வரி விதிக்கப்படாமல் ஒதுக்கப்பெற்ற நிலங்களும் உள. அவை, ஊர்நத்தம், குளம், கம்மாளச்சேரி, வெள்ளான்சுடுகாடு, பறைச்சுடுகாடு, ஊர்நிலத்தூடறுத்துப்போன வாய்க்கால், ஸ்ரீகோயில், ஐயன்கோயில், பிடாரிகோயில், கழனிக்குளங்கள், பறைச்சேரிநத்தம், நந்தவனம், குடியிருக்கை, ஊரிருக்கை, ஓடை, ஈழச்சேரி, வண்ணாரச்சேரி, பெருவழி,

3. குலோத்துங்கசோழனுலா—வரி 52.
4. The Historical Sketches of Ancient Dekhan page 358.

திருமுற்றம், ஊருணி, கொட்டகாரம், களம், தேவர் திருமஞ்சனக்குளம், கன்றுமேய்பாழ், சுடுகாட்டுக்குப் போகும் வழி, மனை, மனைப்படப்பை, கடை, கடைத் தெரு, மன்று, கிடங்கு, புற்று, காடு, உவர், ஆறு, ஆற்றுப்படுகை, உடைப்பு, மீன்பயில்பள்ளம், தேன்பயில் பொதும்பு என்பனவாம்.[5] வரி விதிக்கப்பெறாத மேலே குறித்துள்ள இடங்களை ஆராயுங்கால், அக் காலில் விளைநிலங்களுக்கு மாத்திரம் நிலவரி வாங்கப் பெற்று வந்ததேயன்றி மற்றை நிலங்களுக்கு வரி வாங் கப்படவில்லை என்பது நன்கு அறியக்கிடக்கின்றது.

நம் குலோத்துங்கன் தன் நாட்டிலுள்ள குடிகளது உழவுத்தொழில் வளர்ச்சியுறுமாறு ஆங்காங்குப் பல ஏரிகளையும் குளங்களையும் வெட்டுவித்தான்; காடுகளை யழிப்பித்து அவர்கள் வாழ்தற்கேற்ற பல ஊர்களும் நகரங்களும் அமைத்தான்; மக்களது தெய்வபக்தி ஓங் குமாறு ஊர்கள்தோறும் சிவபெருமானுக்கும் திரு மாலுக்கும் பல புதிய கோயில்கள் எடுப்பித்ததோடு அவற்றின் பூசை, திருவிழா முதலியவற்றிற்கு நிபந் தங்களும் விட்டான்; அன்றியும் நகரங்களிலுள்ள பழைய செங்கற்கோயில்களை இடித்து அவற்றைக் கற்றளிகளாக எடுப்பித்தான். இங்ஙனம் இவனது ஆட்சிக்காலத்தில் மக்கட்குண்டான நன்மைகள் பல வாகும்; விரிப்பிற் பெருகும்.

இக்குலோத்துங்கனது ஆட்சியின் 50-ஆம் ஆண் டில் வரையப்பெற்ற கல்வெட்டுக்கள், திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார்பாளையத் தாலுகாவிலுள்ள காமரச வல்லியிலும், தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடித் தாலுகா

5. The Historical Sketches of Ancient Dekhan pages 358 & 359.

விலுள்ள கோட்டூரிலும் காணப்படுகின்றன. ஆதலால் இவன் சோழமண்டலத்தை ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆண்டிருத்தல்வேண்டும். இவன் பாட்டனாகிய கங்கைகொண்டசோழனும், மாமன்மார்களாகிய இராசாதிராசன், விசயராசேந்திரன், வீரராசேந்திரன் முதலானோராலும் அரும்பாடுபட்டு உயரிய நிலைக்குக் கொண்டுவரப்பட்ட சோழமண்டலத்தை, அதன் பெருமையுஞ் சிறப்பும் ஒரு சிறிதுங் குறையாதவாறு, யாண்டும் அமைதி நிலைபெறச் செங்கோல் செலுத்திய பெருந்தகை ஆவன். இவனுக்கு முன்னர் அரசாண்ட சோழன் கரிகாற்பெருவளத்தான், முதலாம் இராசராசசோழன், கங்கைகொண்டசோழன் முதலான பேரரசர்களே இவனுக்கு ஒப்பாகக் கூறலாமேயன்றி ஏனையோரைக் கூறுதல் சிறிதும் பொருந்தாது. இவன் காலத்திற்குப் பின்னர் இவனுக்கு ஒப்பாகக் கூறத்தக்க சோழமன்னன் ஒருவனும் இலன் என்றே கூறிவிடலாம். எனவே, நம் தமிழகம் தன்னைப் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாக்கிக் கோடற்குச் சிற்சில காலங்களில் அரிதிற் பெறும் பெருந்தவப்புதல்வர்களுள் ஒருவனாகவே இவனைக் கருதல் வேண்டும். இவனது ஆட்சிக்காலத்தில் சோழநாடு வடக்கேயுள்ள மகாநதி முதல் தெற்கேயுள்ள குமரிமுனைவரையிற் பரவியிருந்தது. அந்நாளில் சோழநாட்டிற்கு வடவெல்லையாகவும் மேலைச்சளுக்கிய நாட்டிற்குத் தென்னெல்லையாகவும் அமைந்திருந்தது இடையிலுள்ள துங்கபத்திரையாறே ஆகும். இப்பெருநில வரைப்பில் நம் குலோத்துங்கன் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து ஐம்பது யாண்டுகள் அமைதியாக ஆட்சிபுரிந்தது மக்களாகப் பிறந்தோர் பெறுதற்குரியனவும் அரியனவுமாகிய பெரும்பேறுகளுள் ஒன்றேயாகும் என்று கூறுதலில் தடையாதுளது?

## ஏழாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது போர்ச்செயல்கள்.

நம் குலோத்துங்கன் நடத்திய போர்களுள் ஒன்றிரண்டொழிய ஏனையவெல்லாம் இவனது ஆட்சியின் முற்பகுதியிலேயே நிகழ்ந்துள்ளன என்று முன்னரே கூறியுள்ளோம். அப்போர் நிகழ்ச்சிகளைத் தற்காலத்தே வெளிவந்துள்ள கல்வெட்டுகளைக்கொண்டு ஒருவாறு ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். அவை :—

1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற் போர்
2. பாண்டியருடன் நடத்திய முதற்போர்
3. மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்
4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம்போர்
5. சேரருடன் நடத்தியபோர்
6. தென்கலிங்கப்போர்
7. வடகலிங்கப்போர்

என்பன. இப்போர்நிகழ்ச்சிகளின் காரணத்தையும் இவற்றின் முடிவையும் கல்வெட்டுக்களும் முன்னூல்களும் உணர்த்தும் குறிப்புக்களைக்கொண்டு சிறிது விளக்குவாம்.

**1. மேலைச்சளுக்கியருடன் நடத்திய முதற்போர் :-** இது குலோத்துங்கன் மேலைச்சளுக்கிய மன்னனுகிய

ஆறும் விக்கிரமாதித்தனோடு கி. பி. 1076-ஆம் ஆண்டில் நடத்திய போர் ஆகும். தன் மைத்துனனாகிய அதிராசேந்திரசோழன் உள்நாட்டுக் கலகத்திற் கொல்லப்பட்ட பின்னர், சோழவளநாட்டில் குலோத்துங்க சோழன் முடிசூடியதை யுணர்ந்த சளுக்கிய விக்கிரமாதித்தன் வேங்கிநாடும் சோணாடும் ஒருங்கே ஓர் அரசனது ஆட்சிக்குட்பட்டிருப்பது தன் ஆளுகைக்குப் பெரியதோர் இடுக்கண் விளைவதற்கு ஏதுவாகும் என்று கருதிக் குலோத்துங்கனது படை வலிமையையும் வீரத்தையும் குலைத்தற்குப் பெரிதும் முயன்றான். அவன், அம்முயற்சியில் வெற்றியுறும்வண்ணம் ஐந்து ஆண்டுகளாகப் படை சேர்த்தும் வந்தான். இந்நிலைமையில் விக்கிரமாதித்தனுக்கும் அவனது தமையனாகிய இரண்டாம் சோமேச்சுரனுக்கும் ஒற்றுமை குலைந்து மனவேறுபாடு உண்டாயிற்று. உண்டாகவே, விக்கிரமாதித்தன் தன் தம்பியாகிய சயசிங்கனை அழைத்துக்கொண்டு மேலைச்சளுக்கியரது தலைநகராகிய கல்யாணபுரத்தை விட்டுச்சென்றான்.[1] பிறகு மேலைச்சளுக்கியரது இரட்டமண்டலம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சோமேச்சுரனும் விக்கிரமாதித்தனும் தனித்தனியாக ஆளப்படும் நிலையை அடைந்தது. இதனையுணர்ந்த குலோத்துங்கன் சோமேச்சுரனைத் தன்பாற் சேர்த்துக்கொண்டான். பின்னர், விக்கிரமாதித்தன் தான் சேர்த்துவைத்திருந்த படைகளைத் திரட்டிக்கொண்டு குலோத்துங்கனோடு போர்புரியப் புறப்பட்டான். திரிபுவனமல்ல பாண்டியன், கதம்பகுலத்துச் சயகேசி முதலானோர் விக்கிரமாதித்தனுக்குப் பேரு

1. சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்—பக்-30.

தவி புரிந்தனர். அவனது தம்பி சயசிங்கனும் அவன் பக்கல் நின்று வேண்டியாங்கு உதவினான். சோமேச்சுரன் குலோத்துங்கன் பக்கத்திருந்து போர்புரிந்து உதவுவதாக உறுதியளித்திருந்தான். இறுதியில் குலோத்துங்கனது படையும் விக்கிரமாதித்தனது படையும் துங்கபத்திரை யாற்றங்கரையில் எதிர்த்துப் போர் செய்தன. விக்கிரமாதித்தன் தன் தமையனாகிய சோமேச்சுரன் குலோத்துங்கனோடு சேர்ந்து தன்னுடன் போர்செய்ய இயலாதவாறு ஓர் சூழ்ச்சிசெய்து இடை நின்று தடுத்தான். இப்போரிற் குலோத்துங்கன் வெற்றியாதல் தோல்வியாதல் எய்தினான் என்று கூறுதற்கிடமில்லை. ஆயினும் நம் குலோத்துங்கனுக்கு உதவி புரிதற்குத் துணைப்படை கொணர்ந்த சோமேச்சுரன் தோல்வியுற்றுத் தன் தம்பியாகிய விக்கிரமாதித்தனாற் சிறைபிடிக்கப்பட்டு நாட்டையும் இழந்தான்.[2] குலோத்துங்கனைச் சோழநாட்டினின்று துரத்துவதற்கு விக்கிரமாதித்தன் மிக்க ஆண்டுகளாகச் சேர்த்துவந்த பெரும் படையானது அவன் தன் தமையனைத் துங்கபத்திரைப்போரில் இங்ஙனம் தோல்வியுறச்செய்து இரட்டமண்டலத்துள் தன் தமையன்பாலிருந்த நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளுவதற்குப் பெரிதும் பயன்பட்டது. விக்கிரமாதித்தனும் மேலைச்சளுக்கிய நாடாகிய இரட்டப்பாடி ஏழரையிலக்கம் முழுமைக்கும் முடிமன்னன் ஆயினான். முதலாம் மேலைச்சளுக்கியப்போர் இவ்வாறு முடிவெய்தியது. இதனை முதலாம் துங்கபத்திரைப்போர் என்றும் கூறலாம்.

2. சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம் பக்-34.

2. *பாண்டியருடன் நடத்திய முதற்போர்* :—இது நம்குலோத்துங்கனது ஆட்சியின் ஐந்தாம் ஆண்டில் நிகழ்ந்த மற்றொரு போராகும். இப்போரைப்பற்றிய செய்திகள் இப்போது நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியும் இதனை விளக்கிற்றில்லை. ஆயினும், இது, விக்கிரமாதித்தனுக்குத் துணையாக நின்று போர்புரிந்த திரிபுவனமல்ல பாண்டியனுடன் குலோத்துங்கன் நடத்திய போராய் இருத்தல் வேண்டுமென்பது ஊகிக்கப்படுகின்றது. இப்போர்நிகழ்ச்சியில் நம்குலோத்துங்கன் வெற்றிபெற்றான். இவனது பகைவனாகிய பாண்டியன் கொல்லப்பட்டான். இது குலோத்துங்கன் பாண்டியரோடு நடத்திய முதற்போராதலின், இதனை முதலாம் பாண்டியப்போர் என்று கூறுதல் பொருத்தமுடையது.

3. *மேலைச்சளுக்கியருடன் நடத்திய இரண்டாம் போர்* :—இது, குலோத்துங்கனது ஆட்சியின் 11-ஆம் ஆண்டாகிய கி. பி. 1081-ல் நிகழ்ந்தது ; விக்கிரமாதித்தன் அவன் தம்பி சயசிங்கன் ஆகிய இருவரோடும் நம் குலோத்துங்கன் நடத்தியதாகும். இச்சண்டைக்குரிய காரணம் தற்காலத்தில் நன்கு புலப்படவில்லை. குலோத்துங்கன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு வடக்கு நோக்கிச்சென்று விக்கிரமாதித்தனது தம்பியாகிய சயசிங்கன் என்பான் அரசப்பிரதிநிதியாகவிருந்து ஆண்டு கொண்டிருந்த வனவாசியைக் கைப்பற்றிக்கொண்டு, தன்னைவந்தெதிர்த்த விக்கிரமாதித்தனோடு கோலார் ஜில்லாவிலுள்ள நங்கிலி என்னுமிடத்தில் பெரும்போர் புரிந்தனன்.[3] இப்போரில், குலோத்துங்கன் வெற்றி

3. சோழவமிச சரித்திரச் சுருக்கம்—பக்-31.

எய்தியபோது விக்கிரமாதித்தனைத் துங்கபத்திரை யாற்றிற்கப்பால் துரத்தியுஞ் சென்றான். அங்ஙனந் துரத்திச்சென்றவன் இடையிலுள்ள மணலூர், அளத்தி முதலான இடங்களில் மீண்டும் அவனைப் போரிற் புறங்கண்டான்.[4] அளத்தியில் நிகழ்ந்தபோரில், இவன் மேலைச்சளுக்கியர்களுடைய களிறுகளைக் கவர்ந்து கொண்டான். அன்றியும், இவன் மைசூர் நாட்டிலுள்ள நவிலையில் சளுக்கிய தண்டநாயகர்களால் காக்கப்பெற்ற ஆயிரம் யானைகளையும் கைப்பற்றிக்கொண்டனன் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது.[5] இறுதியில் துங்கபத்திரைக் கரையில்[6] இரண்டாம் முறை நடைபெற்ற போரில் விக்கிரமாதித்தனும் சயசிங்கனும் தோல்வியுற்று ஓடி ஒளிந்தனர். கங்கமண்டலமும் கொண்காணமும் நங்குலோத்துங்கன் வசமாயின. இங்ஙனம் போரில் வாகைசூடிய குலோத்துங்கன் எண்ணிறந்த யானைகளையும் பொருட்குவியலையும் பெண்டிர்களையும் கவர்ந்துகொண்டு சோணாட்டை யடைந்தான்; அவற்றுள், யானைகளையும் பொருட்குவியலையும் தான் போரில் வெற்றிபெறுதற்குக் காரணமாயிருந்த போர்வீரர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் பகுத்

4. (a) 'தளத்தொடு நிம்பொரு தண்டெழப் பண்டொர்கால்
அளத்தி பட்ட தறிந்திலை யையனே.'
க. பரணி—தா. 372.

(b) 'வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியில் விட்ட களிற்றின ஈட்டமும்'
—முதற்குலோத்துங்கசோழன் மெய்க்கீர்த்தி.

5. 'தண்ட நாயகர் காக்கு நவிலையிற்
கொண்ட வாயிரங் குஞ்சர மல்லவோ'
க. பரணி—தா. 373.

6. க. பரணி—தா. 89.

துக்கொடுத்து அவர்களுக்கு மகிழ்ச்சியை யுண்டுபண்ணினான்; சிறைபிடிக்கப்பட்ட மகளிரைத் தன் அரண்மனையிலுள்ள தேவிமார்களுக்கு வேலைசெய்துவருமாறு வேளம் புகுவித்தான். நம் குலோத்துங்கன் மேலைச்சளுக்கியரோடு நடத்திய இரண்டாம்போரும் இவ்வாறு வெற்றியுடன் முடிவுற்றது.

4. பாண்டியருடன் நடத்திய இரண்டாம்போர்:— குலோத்துங்கன் நடத்தியதாக அறியப்படும் இரண்டாம் பாண்டியப்போரும் இவனது ஆட்சியின் பதினான்காம் ஆண்டாகிய கி. பி. 1084-ன் தொடக்கத்தில் நடைபெற்றது. வடக்கேயுள்ள அளப்பப்பாடிப் பாண்டியனோடு கி. பி. 1076-ல் இவ்வேந்தன் ஒரு போர் புரிந்துள்ளமையின், தெற்கேயுள்ள செந்தமிழ்ப்பாண்டி நாட்டின் அரசர்களுடன் கி. பி. 1084-ல் இவன் நிகழ்த்திய இப்போர் இரண்டாம் பாண்டியப்போர் எனப்பட்டது.

முதலாம் பராந்தகசோழன், முதலாம் இராசராச சோழன் ஆகிய இருவேந்தர்களது காலங்களில், பாண்டியர் தம் நிலைகுலைந்து சோழர்களுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர் ஆயினர். ஆனால் அவர்கள் சிறிது படைவலிமை எய்தியவுடன் அடிக்கடி சோழர்களுடன் முரண்பட்டுத் தாம் முடிமன்னராதற்கு முயன்று வந்தனர். அவர்கள், அங்ஙனம் முரண்பட நேர்ந்தமையின் சோழமன்னர்களுள் ஒவ்வொருவரும் தம் தம் ஆட்சிக்காலங்களில் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்செல்லல் இன்றியமையாததாயிற்று. இதனால் நேரும் துன்பங்களை யுணர்ந்த கங்கைகொண்டசோழன்

எனப்படும் முதலாம் இராசேந்திரசோழன் பாண்டியனை அரியணையினின்று இறக்கித் தன்மக்களுள் ஒருவனுக்குச் சோழபாண்டியன் என்னும் பட்டம் அளித்து அப் பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையில் அரசப்பிரதிநிதியாயிருந்து அந்நாட்டை யாண்டுவருமாறு ஏற்பாடு செய்தான். அங்ஙனமே அவனது மக்களுள் இருவரும் பேரன் ஒருவனும் சோழபாண்டியன் என்னும் பட்டத்துடன் அம்மதுரைமாநகரிலிருந்து ஆட்சி புரிந்தனர்.

வீரராசேந்திரன் காலத்திற்குப் பின்னர் அதிராசேந்திரன் சளுக்கிய விக்கிரமாதித்தனது உதவியால் முடிசூட்டப்பெற்றுச் சோழவளநாட்டை ஆண்டுவந்தபோது பாண்டியர் தாம் முடிமன்னராதற்கு அதுவே தக்க காலமெனக் கருதித் தம் நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஐந்து அரசர்களாகவிருந்து அவற்றை ஆளத்தொடங்கினர். அவர்களது ஆளுகையும் கி. பி. 1084-வரை நடைபெற்றுவந்தது. குலோத்துங்கன் வடக்கே நடத்திய போர்கள் எல்லாம் ஒருவாறு முடிவெய்திய பின்னர், தெற்கேயுள்ள பாண்டிநாட்டையும் தன்னடிப்படுத்த எண்ணி, இப்பாண்டியர் ஐவர்மீதும் தும்பைசூடிப் போர்க்கெழுந்தனன்.[7] இதனையுணர்ந்த பாண்டியர் ஐவரும் ஒருங்குசேர்ந்து பெரும்படையோடு வந்து இவனை எதிர்த்துப் போர்

7. 'வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி அரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து'—
முதற்குலோத்துங்கசோழன் மெய்க்கீர்த்தி.

புரிந்தனர். இப்போரில் பெருவீரனாகிய நம் குலோத்துங்கனே வெற்றியடைந்தான். பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளிந்தனர்.[8] குலோத்துங்கன் பாண்டி நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றியதோடு அவ்விடங்களிலெல்லாம் வெற்றித்தூண்களும் நிறுவினான். இப்போரில் குலோத்துங்கன் கைப்பற்றிய நாடுகளுள் முத்துச்சலாபத்திற்குரிய மன்னார்குடாக்கடலைச் சார்ந்த நாடும் பொதியிற் கூற்றமும் கன்னியாகுமரிப் பகுதியும் சிறந்தவைகளாகும்.

5. சேரருடன் நடத்தியபோர் :—இது நம் குலோத்துங்கன் குடமலைநாட்டில் சேரரோடு நடத்தியபோராகும். இதுவும் குலோத்துங்கனது ஆட்சியின் 14-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இப்போரும் சேரரைத் தனக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களாகச் செய்யும்வண்ணம் குலோத்துங்கனால் தொடங்கப்பெற்றது. திருவனந்தபுரத்திற்குத் தெற்கே பத்துமைல் தூரத்தில் மேலைக்கடற்கோடியிலுள்ள விழிஞத்திலும், திருவனந்தபுரத்தைச்சார்ந்த காந்தளூர்ச்சாலையிலும், குமரிமுனைக்கு வடக்கிற் பத்துமைலிலுள்ள கோட்டாறு என்ற நகரிலும் சேரநாட்டு வேந்தனுக்கும் நம்குலோத்துங்கனுக்கும் பெரும்போர்கள் நடந்தன ;[9] சிறிதும் அஞ்சாது எதிர்த்துப் போர்புரிந்த மலைநாட்டாருள் பலர் போர்க்களத்தில் உயிர்துறந்தனர். குலோத்துங்

---

8. 'விட்ட தண்டெழ மீனவ ரைவருங்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலுநீ'
க. பரணி—தா. 368.

9. 'வேலை கொண்டு விழிஞ மழித்ததுஞ்
சாலை கொண்டதுந் தண்டுகொண் டேயன்றோ'
க. பரணி—தா. 370.

கன் காந்தளூர்ச்சாலையிலுள்ள சேரமன்னனது கப்பற்படையினை இருமுறை யழித்துப் பெருமை எய்தினான்.[10] கோட்டாறும் எரிகொளுத்தப்பெற்று அழிக்கப்பட்டது. சேரமன்னனும் குலோத்துங்கனுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களுள் ஒருவனாயினன். சேரரும் பாண்டியரும் தம்நிலைமை சிறிது உயர்ந்தவுடன் தன்னுடன் முரண்பட்டுத் தீங்கிழைக்காதவாறு கோட்டாறு முதலான இடங்களில் சிறந்த தலைவர்களின்கீழ் நிலைப்படைகள் குலோத்துங்கனால் அமைக்கப்பெற்றன: அவ்வாறு கோட்டாற்றில் நிறுவப்பட்ட படைக்குக் 'கோட்டாற்று நிலைப்படை' என்று பெயர் வழங்கிற்று.[11]

6. தென்கலிங்கப்போர் :—இது குலோத்துங்கனது ஆட்சியின் 26-ஆம்ஆண்டாகிய கி. பி. 1096-ல் நிகழ்ந்தது. இப்போர் வேங்கிநாட்டில் அரசப்பிரதிநிதியாயிருந்த அரசிளங்குமரன் விக்கிரமசோழன் என்பான் தன் இளமைப்பருவத்தில் தென்கலிங்கநாட்டின் மன்னனாகிய தெலுங்கவீமன்மேற் படையெடுத்துச்சென்று அவனை வென்றதனையே குறிக்கின்றது. இதனை விக்கிரமசோழனது மெய்க்கீர்த்தி,

'தெலுங்க வீமன் விலங்கல்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி'

என்று தெளிவாக விளக்குதல் காண்க.

---

10. விக்கிரமசோழனுலா—கண்ணி 24.
11. S. I. I. Vol. III. No. 73.
Do. page 144 Foot-note.

இப்போர் குலோத்துங்கனது மகனாகிய விக்கிரமனால் நிகழ்த்தப்பெற்றதாயினும் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்திலே நடைபெற்றதாதலின் மகனது வென்றிச்சிறப்பு தந்தைக்கேற்றியுரைக்கப்பட்டதென உணர்க.

7. வடகலிங்கப்போர்:—இது குலோத்துங்கனது ஆட்சியின் 45-ஆம் ஆண்டாகிய கி. பி. 1115-ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்ற போராகும்;[12] வடகலிங்க வேந்தனாகிய அனந்தவன்மன் என்பானோடு குலோத்துங்கன் நடாத்தியது.[13] வடகலிங்கத்திற்கு நேரிற்சென்று இப்போரை வெற்றியுற நடாத்தித் திரும்பியவன் குலோத்துங்கனது படைத்தலைவர்களுள் முதல்வனாகிய கருணாகரத் தொண்டைமானே யாவன். இவனோடு வாணகோவரையன், முடிகொண்டசோழன் என்ற இரண்டு படைத்தலைவர்களும் அங்குச் சென்றிருந்தனர்.[14] குலோத்துங்கனது ஆட்சியில் நடந்த போர்களுள் இதுவே இறுதியில் நடந்தது. வடகலிங்கத்தில் நடந்த இப்போர் நிகழ்ச்சியை விரித்துக்கூறும் நூல் கலிங்கத்துப்பரணி என்பது. அந்நூல் இப்போரைப்பற்றி புணர்த்தும் செய்திகளை அடியிற் காண்க.

ஒருநாள் நம் குலோத்துங்கன் காஞ்சிமாநகரிலுள்ள அரண்மனையில் ஒலியமண்டபத்து வீற்றிருந்தபோது, வாயிற்காப்போரில் ஒருவன் ஓடிவந்து அரசனது அடிகளை முடிபடவணங்கி, 'எம்பெருமானே வேந்தர் பல்

12. S. I. I. Vol. IV. page 136.
13. Epi. Ind. Vol. III. page 337.
Indian Antiquary Vol. 18 pages 162 & 166.
14. க. பரணி—தா. 352.

னோர் திறைப்பொருள் கொணர்ந்து கடைவாயிலின்
கண் காத்துக்கொண்டிருக்கின்றனர்' என்றனன். அத
னைக்கேட்ட அரசன் 'அன்னாரை விடுக' என,

'**தென்னவர் வில்லவர் கூவகர் சாவகர் சேதிபர் யாதவரே**
**கன்னடர் பல்லவர் கைதவர் காடவர் காரிபர் கோசலரே.**
**கங்கர் கடாரர் கவிந்தர் துமிந்தர் கடம்பர் துளும்பர்களே**
**வங்க ரிலாடர் மராடர் விராடர் மயிந்தர் சயிந்தர்களே**
**சிங்களர் வங்களர் சேகுணர் சேவணர் செய்யவ னரயணரே**
**கொங்கணர் கொங்கர் குலிங்கர் அவந்தியர் குச்சரர் கச்சியரே**
**வத்தவர் மத்திரர் மாளுவர் மாகதர் மச்சர் மிலேச்சர்களே.**
**குத்தர் திகத்தர் வடக்கர் துருக்கர் குருக்கர் வியத்தர்களே.'**

என்ற மன்னர்கள் அம்மன்னனை யணுகிப் பணிந்
தெழுந்து 'மன்னர் மன்ன! அடியேம் நினக்கு இறுக்
கக்கடவதாய திறைப்பொருள் கொணர்ந்துளேம்' என்
றுரைத்துத் தாம் கொண்டுவந்துள்ள பொற்கலம் மணித்
திரள் முதலான பொருள்கள் அனைத்தையும் அரசன்
திருமுன்னர்க் காட்டிக் கைகுவித்து ஒருபுடை நின்
றனர்.

அப்போது அரசன், 'இவர்களொழியத் திறை
கொடாதார் இன்னும் உளரோ' என்று வினவினன்.
அச்சமயத்துக் கடகர் முன்தோன்றி, 'பெருமானே,
எங்கள் திறையும் கொண்டுவந்துவிட்டோம்' என்று
ரைத்து அவன் கழல் வணங்கினர். அப்போது, 'வட
கலிங்கத்தரசன் இருமுறை திறை கொணர்கிலன்'
என்று அமைச்சன் கூற, அதனைக்கேட்ட அரசன் பெரி
தும் வெகுண்டு 'அங்ஙனமாயின் அவனது வலிய
குன்றரணம் இடியவென்று அவனையும் அவனது களிற்
றினங்களையும் பற்றி ஈண்டுக்கொணர்மின்' என்றனன்.

அரசன் அங்ஙனம் கூறலும், ஆண்டு அருகிருந்த பல்லவர்கோனாகிய கருணாகரத்தொண்டைமான் 'அடியேன் கலிங்கமெறிந்து வருவல்; அடியேற்கு விடைகொடுக்க' வென, அரசனும் 'அங்ஙனமே செய்க' என்றனன்.

குலோத்துங்கனிடத்து விடைபெற்ற கருணாகரன் நால்வகைச்சேனையோடும் போர்க்கெழுந்தனன்; எங்கும் முரசங்கள் முழங்கின; வளைகள் கலித்தன; நாற்படையும் சூழ்ந்து நெருங்கி வெள்ளத்தைப்போல் திரண்டெழுந்தன. அவற்றைக் கண்டோர் பலரும் வியப்பெய்தி, 'இவை கடலைக் கலக்குங்கொலோ? மலையை இடிக்குங்கொலோ? ஒன்றும் அறிகிலம்; இவற்றின் எண்ணம் யாதோ?' என்றையுற்று நடுக்கமுற்றனர். நாற்றிசைகளும் அதிர்ந்தன. தூளிப்படலம் பிறந்தது. பல்லவர்கோனாகிய கருணாகரன் வளவர் பெருமானேறு களிற்றின்மீது இவர்ந்து இரைவேட்ட பெரும்புலிபோற் பகைமேற்சென்றனன். பாலாறு, பொன்முகரி, பழவாறு, கொல்லியெனும் நாலாறுந் தாண்டிப் பெண்ணையாற்றையுங் கடந்து தொண்டைமான் படைகள் சென்றன; அதன்பின்னர், வயலாறு, மண்ணாறு, குன்றியென்னும் ஆறுகளையுங் கடந்து கிருட்டிணை நதியும் பிற்படுமாறு போயின; பிறகு, கோதாவரி, பம்பாநதி, கோதமைநதி யென்னும் இவற்றையுங்கடந்து கலிங்கநாட்டை யடைந்து, சில நகரங்களில் எரிகொளுவிச் சில ஊர்களைச் சூறையாடின.

இத்திறம் நிகழ்வனவற்றைக் கண்ட குடிகளெல்லோரும், 'ஐயோ, மதில்கள் இடிகின்றனவே; வீடுகள் எரிகின்றனவே; புகைப்படலங்கள் சுருண்டு சுருண்டு

எழுகின்றனவே; அரண் எங்குளது? நமக்குப் புகலிடம் யாண்டுளது? இங்குத் தலைவர் யாவர்? படைகள் வருகின்றன; அந்தோ! நாம் கெடுகின்றனம்! மடிகின்றனம்!!' என்று ஓலமிட்டுக்கொண்டு நாற்புறமும் ஓடி அலைந்தனர். அவ்வாறு ஏங்கித் துன்புற்ற குடிகளெல்லாம், 'ஐயோ! நம் மன்னன், குலோத்துங்க சோழற்கு இறுக்கக் கடவதாகிய திறை கொடாது உரைதப்பினான்; ஆதலின் எதிரே தோன்றியுள்ளது அம்மன்னனது படையே போலும்; அந்தோ! இனி என்செய்வது!' என்றலறிக்கொண்டு உரைகுழறவும் உடல் பதறவும் ஒருவர்க்கொருவர் முன்னாக அரையிற் கட்டிய துகில் அவிழ ஓடித் தம்மரசனது அடியிணை வீழ்ந்தனர். அங்ஙனங் குடிகள் தன்னடியில் வீழ்ந்து அலறி ஓலமிடுதலைக்கண்ட கலிங்கர் கோமானாகிய அனந்தவன்மன் வெகுளியினால் வெய்துயிர்த்து, கை புடைத்து வியர்த்து, அன்னாரை நோக்கி 'யான் அபயனுக்கேயன்றி அவன் தண்டினுக்கு மெளியனோ?' என்றுரைத்துத் தடம்புயங்குலுங்குற நகைத்தனன். பின்னர், 'நமது நாடு கானரண், மலையரண், கடலரண் இவற்றாற் சூழப்பெற்றுக் கிடத்தலை அறியாது, அவன் படை வருகின்றதுபோலும்; நல்லது, சென்று காண்போம்' என்று கூறினன்.

அம்மன்னன் கூறியவற்றைக் கேட்ட எங்கராயன் என்னும் அமைச்சர் தலைவன், அரசர் சீறுவரேனும் அமைச்சனாகிய தான் உறுதியை யுரையாதொழியின் அது தன் கடமையினின்று தவறியதாகுமென்பதை நன்குணர்ந்தவனாய், அரசனை நோக்கி, 'மன்னர் பெருமானே, அடியேன் கூறுவனவற்றை யிகழாது சிறிது

செவிசாய்த்துக் கேட்டருளல் வேண்டும். வேற்றரசர் களைப் புறங்கண்டு வெற்றி கொடற்குச் சயதரன் படை போதாதோ! அவனே நேரில் வருதல் வேண்டுமோ? அவனுடைய படையினால் பஞ்சவரைவரும் கெட்ட கேட்டினை நீ கேட்டிலை போலும்; முன்னொருநாள் அவனது படையுடன் பொருவானெழுந்த சேரர் செய்தி நின் செவிப்பட்டதில்லையோ? அவன் விழிஞ மழித்ததும், காந்தளூர்ச்சாலை கொண்டதும் தன் படையினைக் கொண்டன்றோ? தண்டநாயகரால் காக்கப் பெற்ற நவிலையின்கண் ஆயிரம் யானைகளை அவன் கைப் பற்றிக் கொண்டதை நீ யறியாயோ? அபயன் படையினால் ஆற்றாருற்றுத் தம்மண்டலங்களை இழந்தவேந்தர் இத்துணையரென்றுரைத்தல் சாலுமோ? ஆதலால் அத் தண்டின்முன்னர் நின் புயவலி எத்தன்மைத்தாகு மென்பதை எண்ணித் துணிவாயாக; இன்று என்னைச் சிறிதும், நானே அச்சேனைமுன் நின்ற போழ்தினில் யான் கூறியதுண்மை யென்பதை நன்குணர்வாய்' என்று நன்மதி நவின்றனன்.

அமைச்சர்தலைவன் கூறியவற்றைக் கேட்ட கலிங் கமன்னன் அவனை நோக்கி, 'யாம் கூறியவற்றை மறுத்துரைப்பதெனின் இமையோரும் எம் முன்னர் போதாற்குப் பெரிதும் அஞ்சுவர். பன்னாட்களாகச் செருத்தொழில் பெறாது எம்தோட்கள் தினவுற்றிருத் தலை நீ அறியாய்போலும். முழைக்கண்ணுளதாய அரியேற்றின் முன்னர் யானையொன்று எளிதென் றெண்ணிப் பொருதற்குக் கிட்டிவருதல் உண்மையாயி னன்றோ அபயனது படை எம்முடன் பொருதற் கெழும்! எமது தோள்வலியும், வாள்வலியும் பிறவலி

யும் இத்தன்மையனென்றுணராது பிறரைப்போல் அஞ்சிக் கூறலுற்றாய். இது நின் பேதைமையன்றோ? நன்று! நமது நாற்படையுமெழுக; அபயன் ஆணையாற் போதரும் படையுடன் போர்தொடர்க' என்றுரைத்தனன். அப்போழ்தே

'பண்ணுக வயக்களிறு பண்ணுக வயப்புரவி
பண்ணுக கணிப்பில் பலதேர்
நண்ணுக படைச்செருநர் நண்ணுக செருக்களம்
நமக்கிகல் கிடைத்த தெனவே'

என்று எழுகலிங்கத்திலும் முரசறையப்பட்டது.

உடனே, கலிங்கர் கோமானது படைகள் போர்க்குப் புறப்பட்டன; வரைகள் துகள்பட்டன; கடலொலிபோல் முரசங்கள் மொகுமொகென்றொலித்தன; இடைவெளியின்றி ஒருவருடலினில் ஒருவர் தம் உடல்புக நெருங்கிச்சென்று, கலிங்கப்படைகள் கருணாகரன் படைகளின் முன்னுற்றன.

பின்னர் இருதிறத்தார்க்கும் போர் தொடங்கலாயிற்று; 'படை எடும் எடும்' என்ற ஓசையும், 'விடும் விடும்' என்ற ஓசையும், கடலொலிபோன்றிருந்தன; சிலைநாண்தெறிக்கும் ஓசை திசைமுகம் வெடிப்பதொக்கும். இருதிறப்படைகளும் எதிர் நிற்றல், இருபெருங் கடல்கள் எதிர் நின்றாற்போன்றிருந்தது. பரியொடு பரி மலைவது கடற்றிரைகள் தம்முள் இகலி மலைந்தாற் போன்றிருந்தது. யானையொடு யானை பொருவது வரையொடு வரை பொருதாற் போன்றிருந்தது; முகிலொடு முகில் எதிர்த்ததுபோல் இரதமும் இரதமும் எதிர்த்தன. புலியொடு புலி யெதிர்த்தாற்போல் வீர

ரொடு வீரரும் அரியொடு அரி எதிர்த்தாற்போல் அரசரொடு அரசரும் எதிர்த்துப் பொருவாராயினர்; வீரர்களின் விழிகளிலே சினக்கனல் தோன்றிற்று. அக்கனல் மின்னொளி வீசின; அன்னார் கையிற் கொண்ட விற்கள் உருமென இடித்துக் கணைமழை பொழிந்தன; அதனாற் குருதியாறு பெருகலாயிற்று. அவ்வாற்றில் அரசர்களது நித்திலக்குடைகள் நுரையென மிதக்கலுற்றன; போரில் துணிபட்ட களிற்றினங்களின் உடல்கள் அவ்வாற்றின் இருகரையென இருமருங்குங் கிடந்தன.

குருதிவெள்ளத்திற் பிளிற்றிவீழுங் களிற்றினங்கள் வேலை நீருண்ணப்படிந்த மேகங்கள் போன்றிருந்தன; அவ்யானைகளின் கரங்களை வாளாற் றுணித்துத் தம் புயத்திட்ட வீரர்கள் தோற்பைகளைத் தோளின் கண்ணேகொண்டு நீர்விடுந் துருத்தியாளரைப்போன்றிருந்தனர்; அம்புகள் தைக்கப்பெற்றுச் சுருண்டு விழும் யானைகளின் கைகள் வளையங்கள்போன்றிருந்தன. இருதொடையுந் துணிபட்டுக்கிடந்த மறவர் தம் முன்னர்ப் பொருவானெழுந்த வாரணத்தின் வலிகெட ஒரு தொடையைச் சுழற்றி அதன்மேலெறிவர்; மற்றொன்றை இனி எறியுமாறு எடுத்துவைப்பர்; சில வீரர் தம் உரத்தின்மீது பாய்வான் எழுந்த இவுளியை ஈட்டியாற்குத்தி எடுத்துத் திரிவது வெற்றிமங்கைக்கு எடுக்கப்பெறும் வெற்றிக்கொடிபோன்றிருந்தது. அன்னார் யானைகளின் மத்தகங்களைப் பிளக்குங்கால் வீழும் முத்துக்கள் அவ்வெற்றிமங்கைக்குச் சொரியப்பெறும் மங்கலப் பொரிகளை யொப்பனவாகும்; மாற்றார் சிலையில் அம்பைத் தொடுக்குமளவில் தம்மிடத்து அம்பில்

லாத வீரர்கள் தங்கள் மார்பினிற்குளித்த பகழியைப் பற்றியிழுத்துச் சிலையிற்றொடுத்துவிடுவர். குறையுடலங் கூத்தாட, அவற்றின் பின்னர்க் களிப்போடாடும் பேய்கள் ஆடல் ஆட்டுவிக்கும் ஆடலாசிரியன்மாரை யொக்கும். சடசடவெனும் பேரொலியாற் செருக்களம், தீவாய் மடுக்கும் கழைவனம்போன்றிருந்தது.

இவ்வாறு போர்நிகழுங்கால் களப்போரினை விரைவில் முடித்து வாகைசூடுமாறு வண்டையரசனுங் கருணாகரத்தொண்டைமான் தன்வேழமுந்துறச் சென்றனன். அவனது படையும் முன்னேறிச் செல்லலுற்றன. அங்ஙனஞ்செல்லவே கலிங்கப்படையின் மதயானைகள் துணிபட்டன; துரகநிரையொடு தேர்கள் முறிபட்டன. குடர்கள் குருதியின்மேல் மிதந்தன; அவற்றைக் கழுகுகளும் காக்கைகளும் உண்டுகளித்தன; ஆயிரம் யானைகளைக்கொண்டு 'பொருவம்' எனவந்த கலிங்க வீரர்கள், தங்கள் அரசன் உரைசெய்த ஆண்மையுங் கெட அமரில் எதிர்நிற்கமாட்டாது ஒதுங்கினர்; இப்படை மாயையோ மறலியோ வென்றலறிக்கொண்டு நிலைகுலைந்து வீழ்ந்து ஓடினர்; 'அபயம்' 'அபயம்' என்றலறிக்கொண்டு ஒருவர்முன்னர் ஒருவர் ஓடினர்; அங்ஙனம் ஓடிய கலிங்கவீரர் பதுங்கியது கன்முழையின் கண்ணே! மறைந்தது அரிய பிலத்தினுள்ளே! காந்து செறிந்த அடவியிலேயோ! இவற்றை முழுதுந் தெரிந்துகோடல் அரிதாகும். அவ்வாறு கலிங்கரோடப் பலப்பல யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், தேர்கள், மணிக்குவியல்கள், மகளிர்கள் ஆகிய எல்லாவற்றையும் கருணாகரனது படைவீரர்கள் கைப்

பற்றினர். கைக்கொண்ட அன்றேயே அவற்றின் அளவைக் கணித்துரைப்பது அருமையெனின், மற்றையோர் அவற்றைக் கணித்துரைத்தல் எங்ஙனம் கூடும்!

இவற்றைக் கவர்ந்தபின் 'இனி கலிங்கமன்னனை யும் கைக்கொண்டு பெயர்குதும்; அவனிருக்கின்ற இடத்தை யறிக' என்றனன் கருணாகரன். அவன் சொற்கள் பிற்படுமாறு சிலவீரர்கள் விரைந்துசென்று வரைகளிலும் வனங்களிலும் தேடிக் காணப்பெறாது, முடிவில் ஒரு மலைக்குவட்டிற் காத்திருந்த கலிங்கர் கோனைக் குறுகி 'நமது அடற்படையைக் கொணர்க' வென்றனர். எனலும் அவனைக்கொணருமாறு கருணா கரன் தன் படைஞரை ஏவினன். அவர்கள் சென்று வெய்யோன் அத்தகிரியை அடையுமளவில் கலிங்கமன் னன் காத்திருந்த வெற்பினையெய்தி வேலாலும் வில்லா லும் வேலிகோலி விடியளவுங்காத்துநின்றனர். பின் னர், செங்கதிரோன் உதயகிரியை யடையுமுன்னர் அம்மன்னனைக் கைப்பற்றித் திரும்பினர்.

அன்றாது வழியில் எதிர்ப்பட்ட சில கலிங்கர் கள் தங்கள் உடல்முழுவதும் மாசேற்றித் தலைமயிரைப் பறித்தெடுத்து அரையிலுள்ள கலிங்கத்தைக் கலைந் தெறிந்துவிட்டு, 'ஐயா! யாங்கள் சமணர்கள்; கலிங்க ரல்லேம்' எனக்கூறிப் பிழைத்துச் சென்றனர். சிலர் சிலையின் நாணை மடித்து முப்புரி நூலாக அணிந்து கொண்டு 'ஐயா, யாங்கள் கங்கை நீராடப்போந்தேம். விதிவலியால் இங்ககப்பட்டுக்கொண்டேம்; கரந்தவ ரல்லேம்' எனச்சொல்லி உயிர்பிழைத்தனர். குருதி

தோய்த்த கொடித்துணிகளைக் காவியுடையாக வரித்துக்கொண்டு தலையினை முண்டிதஞ் செய்துகொண்டு "ஐயா, எங்கள் உடையைக் கண்டளவில் எங்களைச் சாக்கியரென்று அறிகிலிரோ?" என்றியம்பி உய்ந்தனர் சிலர். சிலர் யானைகளின் மணிகளை அவிழ்த்துத் தாளமாகக் கையிற் பிடித்துக்கொண்டு கும்பிட்டு, "ஐயா, யாங்கள் தெலுங்கப்பாணர்கள்; சேனைகள் மடிகின்ற செருக்களங்கண்டு திகைத்து நின்றோம்; இத்தேயத்தினரல்லேம்" என்றுரைத்துப் பிழைத்துப்போயினர். இவ்வாறு பிழைத்துச் சென்றவர்கள் தவிர, கலிங்க நாட்டில் உயிர்பிழைத்தவர்கள் வேறு ஒருவருமிலர்.

கலிங்கமெறிந்து வாகைமாலைசூடிய கருணாகரத் தொண்டைமான் களிற்றினங்களொடு நிதிக்குவியல்களையும் பிறவற்றையுங் கவர்ந்துகொண்டுவந்து குலோத்துங்கசோழன் திருமுன்னர் வைத்து வணங்கினன். சோழியர்கோன் பெரிதும் மகிழ்ச்சியுற்றுத் தொண்டைமானது போர்வீரத்தைப் பலபடப் பாராட்டி அவற்குத் தக்க வரிசைகள் செய்தனன்.

# எட்டாம் அதிகாரம்.

## குலோத்துங்கனது சமயநிலை.

நம் குலோத்துங்கன் கொண்டொழுகியது பொதுவாக வைதிகசமயம் என்பது 'மூன்னூல் பெருமார்பிற் சிறந்தொளிரப் பிறப்பிரண்டாவது பிறந்து சிறந்த பின்னர்'[1] 'வேதங்கள் நான்கினையும் வேதியர்பாற் கேட்டருளி'[2]னன் என்று ஆசிரியர் சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியிற் கூறியிருத்தலால் நன்கு விளங்குகின்றது. ஆனால் இவன் வைதிகசமயத்தின் உட்பிரிவுகளாகிய சைவ வைணவ சமயங்களுள் சைவசமயத்தையே சிறப்பாகக் கொண்டொழுகியவன்; சிவபெருமானிடத்து அளவுகடந்த பத்திசெலுத்தியவன். இவன் காலத்திற்கு முற்பட்ட சோழமன்னர்கள் எல்லோரும் சைவராகவே இருந்திருப்பதோடு தில்லையில் எழுந்தருளியுள்ள திருச்சிற்றம்பலநாதனைத் தம் குலதெய்வமாகக்கொண்டு வழிபட்டும் வந்துள்ளனர். ஆதித்தன், முதற்பராந்தகன் முதலானோர் தில்லைச்சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்து அதனைச் சிறப்பித்திருக்கின்றனர். நம்குலோத்துங்கனும் தன் முன்னோரைப் போலவே திருச்சிற்றம்பலத்தெம்பெருமானைக் குலதெய்வமாகக்கொண்டு வழிபாடு புரிந்துவந்தான். ஆயினும், தாம் மேற்கொண்ட சமயமொழிய மற்றைச் சம

---

1. க. பரணி—தா. 229.
2. ஷை 230.

யங்களைக் கைக்கொண்டொழுகும் தம் நாட்டுமக்களை வெறுத்துப் பல்லாற்றானும் துன்புறுத்தும் அரசர் சிலர்போல இம்மன்னர்பெருமான் புறச்சமயங்களில் சிறிதும் வெறுப்புக் காட்டியவன் அல்லன். இதற்குச் சில சான்றுகள் எடுத்துக்காட்டிச் சிறிது விளக்குவாம்.

சோழ இராச்சியத்திலுள்ள பல வைணவ சமண பௌத்தக் கோயில்கள்தோறும் இவனது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தஞ்சாவூர் ஜில்லாவைச்சார்ந்த மன்னார்குடியிலுள்ளதும் இப்போது இராசகோபால சாமிகோயில் என்று வழங்கப்பெறுவதுமாகிய திருமால்கோட்டம் இவன் பெயரால் எடுப்பிக்கப்பெற்ற தொன்றாம். 'குலோத்துங்க சோழவிண்ணகரம்' என்பது அதற்குரிய பழைய பெயர். அன்றியும் நாகப்பட்டினத்திலுள்ள [3]கடாரத்தரசனாகிய சூடாமணிவர்மனால் கட்டத்தொடங்கப்பெற்று அவனது மகனாகிய மாறவிசயோத்துங்கவர்மனால் முடிக்கப்பெற்ற இராசராசப்பெரும்பள்ளி என்னும் புத்தவிகாரத்திற்கு நம் குலோத்துங்கன் விளைநிலங்களை நிபந்தமாக விட்டிருக்கின்றான். கி. பி. 1090-ல் இக்கோயிலுக்கு இவ்வேந்தன்விட்ட நிபந்தங்களை யுணர்த்தும் செப்பேடுகள்[4] 'ஹாலண்டு' தேயத்திலுள்ள 'லெய்டன்' நகரத்துப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருத்தலை இன்றுங் காணலாம். இத்தகைய செய்திகளை யாராய்ந்து உண்மை காணுமிடத்து, இவன் தன்காலத்து வழங்கிய எல்லாச்சமயங்களிடத்தும் பொதுநோக்குடையவனாய் அவற்றை அன்புடன் ஆதரித்து வந்தவன் என்பது

3. கடாரம்=Southeru Sumatra.
4. The Small Leiden Grant.

இனிது பெறப்படுகின்றது. ஆயினும், இவன் சிவபிரானிடத்து ஆழ்ந்த பத்தியுடையவனாய்ப் பெரிதும் ஈடுபட்டிருந்தான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவன் எய்தியிருந்த திருநீற்றுச்சோழன் என்ற அருமைத் திருப்பெயரொன்றே இதனை நன்கு வலியுறுத்தும். ஆகவே இவனைச் சிறந்த சைவர் தலைமணி என்று கூறுதல் எவ்வாற்றானும் பொருத்தமுடையதேயாகும்.

## ஒன்பதாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது குணச்சிறப்பு.

நம் குலோத்துங்கன் ஒரு செங்கோல் வேந்தனுக்குரிய எல்லா நற்குணங்களையும் ஒருங்கே படைத்தவன். இவன்பாற் காணப்படும் உயர்குணம் பலவுள் முதலாவதாக வைத்துப் பாராட்டத்தக்கது இவனது கடவுள் பத்தியேயாகும். சிறப்பாகச் சிவபெருமானிடத்து இவன் ஒப்பற்ற பத்தியுடையவனாய் ஒழுகிவந்தவன் என்பது முன்னர் விளக்கப்பட்டது. அன்றியும், தன் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்தினின்று புறப்பட்டுக் காஞ்சிமாநகரை நோக்கிச் செல்பவன், தில்லையம்பதிக்குப்போய்ப் பொன்னம்பலத்திலே நடம்புரியும் முக்கட்பெருமானை வணங்கி, அவரது இன்னருள்கொண்டு வடதிசை ஏகினான் என்று கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் கூறியிருப்பது இவனது சிவபத்தியின்மாண்பை இனிதுவிளக்குகின்றது.[1]

இனி, அடுத்துப் புகழ்தற்குரியதாய் இவனிடத்து அமைந்திருந்த சிறந்த குணம் இவனது வீரத்தன்மையேயாம். இவன் இத்தமிழகம் முழுமையும் இதற்கப்பாலுள்ள கங்கம், கலிங்கம், கொண்கானம், சிங்களம், கடாரம் முதலான பிறநாடுகளையும் தன்னடிப்படுத்திப்

1. க. பரணி—தா. 286.

புகழுடன் ஆண்டுவந்த பெருவீரன் என்பதை முன்னரே கூறியுள்ளோம். ஆகவே, இவனை இப்பரதகண்டத்தின் பெரும்பாகத்திலும் இதனைச் சூழ்ந்துள்ள பிறவிடங்களிலும் தன் வெற்றிப்புகழைப் பரப்பிய வீரர்தலைமணி என்றுரைத்தல் சிறிதும் மிகைபடக் கூறியதாகாது. இவனது படைத்தலைவர்களும் அமைச்சர்களும் இவனைப்போலவே வீரத்தன்மை வாய்ந்தவர்களாய் இவனுக்கு உசாத்துணையாய் அமர்ந்து இவனது வென்றிமேம்பாடு யாண்டும் பரவுதற்குக் காரணமாயிருந்தனர் என்பது ஈண்டு அறியத்தக்கது. அன்னோருள் சிலரது வரலாற்றை மற்றோர் அதிகாரத்திற் காணலாம்.

இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த வேந்தன் ஆவன்; சங்கத்துச் சான்றோர் நூல்களையும் பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி முதலாய நூல்களையும் நன்கு பயின்றிருந்தான். ஆசிரியர் சயங்கொண்டாரும் இவனைப் பண்டிதசோழன் என்று கலிங்கத்துப்பரணியில் ஓரிடத்தில் குறித்துள்ளார்.[2] இவன் புலவர்களது கல்வித்திறத்தை அளந்து காண்டற்குரிய பேரறிவு படைத்தவனாயிருந்தமையின் அன்னோரிடத்துப் பெருமதிப்பும் அன்பும் வைத்திருந்தான். அன்றியும், அவர்கட்கு வேண்டியன அளித்துப் போற்றியும் வந்தான். எனவே, இம்மன்னன் புலவர்களைப் புரந்துவந்த பெருங்கொடைவள்ளல் ஆவன். இவன் 'கல்வியினெறிக் கவிவாணர் கவியினெறிப் இசையினெறியும்'[3] பொழுது போக்கி வந்தனன் என்பர் கவிச்சக்கிரவர்த்தியாகிய

2. க. பரணி—தா. 519.
3. ௸ 264.

சயங்கொண்டார். இவன், செந்தமிழ்ப் புலமையுடையனாயிருந்தமையோடு வடமொழிப் பயிற்சியும் பெற்றிருந்தான். அன்றியும், இவன் வேங்கிநாட்டில் ஆட்சி புரிந்தபோது அந்நாட்டு மொழியாகிய தெலுங்கே அரசாங்கமொழியாக அமைந்திருந்தது. வேங்கி நாட்டிலுள்ள இவனது கல்வெட்டுக்களும் தெலுங்கு மொழியில் காணப்படுகின்றன. எனவே, இவன் தெலுங்கு மொழியையும் கற்றவனாதல் வேண்டும். ஆகவே, தமிழ், ஆரியம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் இவ்வேந்தன் நல்ல பயிற்சியுடையவனாயிருந்தனன் என்பது நன்கு புலப்படுகின்றது.

நம் வளவர்பெருமான் நூலறிவு எய்தியிருந்ததோடு இயற்கையில் நுண்ணறிவும் அமையப்பெற்றிருந்தான்; நல்லறிஞர்களோடு அளவளாவி அறியவேண்டியவற்றை நன்கறிந்து பேரறிஞனாய் விளங்கினான். ஆசிரியர் சயங்கொண்டார் இவனை 'அறிஞர் தம்பிரான் அபயன்'[4] என்று கலிங்கத்துப்பரணியில் கூறியிருத்தலும் இச்செய்தியை இனிது வலியுறுத்தும்.

இனி, இவ்வேந்தனது செங்கோற் பெருமையும் பெரிதும் மதிக்கத்தக்கதாகும். இவன் 'குடியுயரக் கோல் உயரும்' என்பதை நன்குணர்ந்தவனாதலின் தன் நாட்டிலுள்ள குடிகள் எல்லோரும் வளம் பெறுதற்கேற்ற செயல்களைச் செய்து அவர்களது பேரன்பிற்குரியவன் ஆயினான். இவன், தன் குடிமக்கள் பண்டைக்காலமுதல் அரசர்க்குச் செலுத்திவந்த சுங்கத்தைத் தவிர்த்து, அவர்களது வாழ்த்திற்கும் புகழுரைக்

4. க. பரணி—தா. 8ப.

கும் உரிமைபூண்டு விளங்கிய செய்தி முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இவனது செங்கோற் சிறப்பை அபயன் 'இமயத்தினைத் திரித்தகோலில் வளைவுண்டு—நீதிபுனை செய்ய கோலில் வளைவில்லையே'[5] என்று பாராட்டிக் கூறியுள்ளனர் புலவர் பெருமானாகிய சயங்கொண்டாரும்.

அன்றியும், இவன் அஞ்சாமை, ஈகை, ஊக்கம், சுற்றந்தழுவுதல், காலமறிந்து கருமமுடிக்கும் ஆற்றல் முதலான அருங்குணங்கள் படைத்த பெருந்திறல் வேந்தனாய் அந்நாளில் நிலவினான். சுருங்கவுரைக்குமிடத்து, இம்மன்னர்பெருமான், தன்னடிவந்து பொருந்தினோர் எவரேயாயினும் தன்னளி சுரந்து அவர்களை வாழ்விக்கும் வண்மையும், எதிர்த்தோர் கூற்று வெருண்டன்ன ஆற்றலுடையவராயினும் அன்னாரைப் போரிற் புறங்காணும் வீரமும் உடையவனாய் விளங்கிய பெருந்தகையாவன் என்று கூறி இவ்வதிகாரத்தை ஒருவாறு முடிக்கலாம்.

5. க. பரணி—தா. 260.

# பத்தாம் அதிகாரம்.

## குலோத்துங்கனது மனைவியரும் மக்களும்.

குலோத்துங்கனது பட்டத்தரசியாக விளங்கியவள் மதுராந்தகி என்பாள். இவளே இவ்வேந்தனது முதல்மனைவி. இவளுக்குத் தீனசிந்தாமணி என்ற பெயரும் உண்டு. இவ்வரசி இவனது அம்மானாகிய விசயராசேந்திரசோழனது மகள். இவனுக்கு வேறு இருமனைவியரும் இருந்தனர். அவர்கள் ஏழிசைவல்லபி, தியாகவல்லி என்ற இருவருமேயாவர். பட்டத்தரசியாகிய மதுராந்தகி என்பாள் குலோத்துங்கனது ஆட்சியின் இருபத்தாறாம் ஆண்டில் இறந்துவிட்டனள். பின்னர், இவனது மற்றொரு மனைவியாகிய தியாகவல்லி என்பவள் பட்டத்தரசியாயினள். இவளே இவ்வரசனது ஆட்சியின் பிற்பகுதி முழுமையும் பட்டத்தரசியாகவிருந்து வாழும்பேற்றை எய்தியவள்.

'பொன்னின்மாலை மலர்மாலை புவிமாதி யுடனே
புவனி காவலர்கள் தேவியர்கள் சூழ்புடைவரச்,
சென்னி யானையுடனானை நடத்துமுரிமைத் தியாக
வல்லி நிறைசெல்வியுடன் சேர்ந்துவரவே'[1] என்னுங் கலிங்கத்துப்பரணிப் பாடலால் பட்டத்தரசியாகிய தியாகவல்லியின் பெருமையும் அரசன் அவள்பால் வைத்திருந்த மதிப்பும் நன்குணரலாகும். இவள்,

1. க. பரணி—தா. 273.

'சிவனிடத்துமையெனத் தியாகவல்லி—உலகுமுழுதுடையாள்' என்று நம் குலோத்துங்கனது மெய்க்கீர்த்தியிலும் புகழப்பட்டுள்ளாள்.

இனி, ஏழிசைவல்லபியை 'ஏழிசை வளர்க்க வுரியாள்'[2] என்று ஆசிரியர் சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் கூறியிருத்தலால் இவள் ஏழிசையிலும் புலமையெய்தி அவற்றை இனிது வளர்த்துவந்தனள் என்பது நன்கு புலப்படுகின்றது.

இனி, நம் குலோத்துங்கனது மனைவியருள் பட்டத்தரசியாக விளங்கியவளைப் புவனமுழுதுடையாள் அல்லது அவனிமுழுதுடையாள் என்றும், மற்றையோரை ஏழுலகுமுடையாள், திரிபுவனமுடையாள், உலகுடையாள் என்றும் அக்காலத்தில் வழங்கிவந்தனர் என்பது கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றது. அவர்களது இயற்பெயர்களோடு இப்பெயர்களையும் சேர்த்துச் சிறப்பிப்பது அக்காலத்தில் பெருவழக்காயிருந்தது. இவ்வுண்மையை அக்காலத்துக் கல்வெட்டுக்களைக்கொண்டறியலாம்.[3]

மதுராந்தகி என்பவள் பட்டத்தரசியாக விளங்கிய நாட்களில் புவனிமுழுதுடையாள் என்றும் அவனிமுழுதுடையாள் என்றும் வழங்கப்பட்டனள். அப்போது, ஏழிசைவல்லபி, தியாகவல்லி என்ற மற்ற மனைவியர் இருவரும் ஏழுலகுமுடையாள் உலகுடையாள் என்னும் சிறப்புப் பெயர்களை எய்தி வாழ்ந்தனர். மதுராந்தகி வானுலகடைந்தபின்னர், தியாகவல்லி பட்

2. க. பரணி—தா. 272.
3. S. I. I. Vol. III. page 177.

டத்தரசியாயினள் என்று முன்னரே கூறியுள்ளோம். அவள் அந்நிலையை எய்தியவுடன் அக்கால வழக்கம் போல் புவனிமுழுதுடையாள் என்ற சிறப்புப்பெயரைப் பெற்றனள்.

நம் குலோத்துங்கனது முதல்மனைவியாகிய மதுராந்தகிக்கு மக்கள் எழுவர் இருந்தனர். அவர்களுள் முதல்மகன் விக்கிரமசோழன் எனப்படுவான். இரண்டாம் மகன் இராசராசன் என்னும் பெயரினன். மூன்றாம் மகன் வீரசோழன் என்பான். மற்றைப் புதல்வர்களது பெயர்கள் இக்காலத்துப் புலப்படவில்லை. அன்றியும், அம்மங்கைதேவி என்ற ஒரு மகளும் இருந்தனள். இவர்களுள் முதல்வனாகிய விக்கிரமசோழன் கி. பி. 1108-ஆம் ஆண்டில் சோழமண்டலத்திற்கு இளவரசுப்பட்டம் கட்டப்பெற்றுத் தன் தந்தையிடம் அரசியல் நுட்பங்களைக் கற்றுவந்தான். இவன், தென் கலிங்கமன்னனாகிய தெலுங்கவீமன்மேல் ஒருமுறை படையெடுத்துச்சென்று அவனைப் போரிற்புறங்கண்டு வெற்றித்திருவுடன் திரும்பினான்.[4] கி. பி. 1120-ல் நம் குலோத்துங்கன் விண்ணுலகெய்தியபின்னர் அரியணையேறிச் சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்டு ஆட்சிபுரிந்தவன் இவ்விக்கிரம சோழனேயாவன். இவனுக்குத் தியாகசமுத்திரம் அகளங்கன் முதலான வேறு பெயர்களும் உண்டு.[5] புலவர் பெருமானாகிய ஒட்டக்

---

4. —"போர்த்தொழிலால்
ஏனைக் கலிங்கங்கள் ஏழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"
விக்கிரமசோழனுலா—கண்ணி-331.

5. விக்கிரமசோழனுலா—கண்ணிகள் 59, 152, 182, 209, 216, 255, 284.

கூத்தர் இவ்வேந்தன்மீது 'விக்கிரமசோழனுலா' என்ற ஓர் உலாப் பாடியுள்ளனர். இம்மன்னன் இப்புலவர் பெருந்தகையைப் பெரிதும் பாராட்டி ஆதரித்துவந்தான்.

இரண்டாம் மகனாகிய இரண்டாம் இராசராசன் என்பான் கி. பி. 1077 முதல் 1078 வரை ஓராண்டு வேங்கிநாட்டில் அரசப்பிரதிநிதியாயமர்ந்து அதனை அரசாண்டனன்; பின்னர், தன் தந்தையிடத்தமர்ந்து அணுக்கத்தொண்டுகள் புரிதல்வேண்டுமெனச் சோழ மண்டலத்திற்குத் திரும்பிவந்துவிட்டான்.[6] மூன்றாம் மகனாகிய வீரசோழன் என்பவன் தன் தமையனாகிய இரண்டாம் இராசராசனுக்குப் பின்னர் வேங்கிநாட்டிற்கு அரசப்பிரதிநிதியாக அமர்ந்தான்.[7] அங்கு அவனது ஆட்சி பல ஆண்டுகள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்று தெரிகிறது.

குலோத்துங்கனது மற்றை மக்களைப்பற்றிய வரலாறு இப்போது புலப்படவில்லை.

### குலோத்துங்கனது சுற்றத்தினர்.

1. தந்தையைப்பெற்ற பாட்டன் ...விமலாதித்தன்.
2. தந்தையைப்பெற்ற பாட்டி ...குந்தவ்வை II.
3. தந்தை ...கீழைச்சளுக்கியனாகிய இராசராச [நரேந்திரன்.
4. தாய் ... ...அம்மங்கைதேவி I.
5. உடன்பிறந்தாள் ...குந்தவ்வை III.

6. S. I. I. Vol. I. No. 39–A Grant of Virachoda.
7. Do. Do.

6. மனைவியர் ...மதுராந்தகி, ஏழிசைவல்லபி,
[தியாகவல்லி.
7. மக்கள் ...விக்கிரமசோழன், இராசராசன் II.
[வீரசோழன், அம்மங்கைதேவி II.
8. சிறிய தாதை ...விசயாதித்தன் VII.
9. தாயைப்பெற்ற பாட்டன் ...கங்கைகொண்ட
[சோழன் அல்லது இராசேந்திரசோழன் I.
10. அம்மான்மார் ...இராசாதிராசன் I,
[விசயராசேந்திரசோழன், மும்முடிச்சோழன்,
[வீரராசேந்திரசோழன்.
11. அம்மான்சேய் ...அதிராசேந்திரன்.
12. முதல்மனைவியின் தந்தை ...விசயராசேந்திரன்.

## பதினொன்றாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது அரசியல் தலைவர்கள்.

குலோத்துங்கனது ஆளுகையில் அமைச்சர்களாகவும் படைத்தலைவர்களாகவும் திருமந்திர ஓலைநாயகமாகவும் திருமந்திர ஓலையாகவும் திருவாய்க் கேள்வியாகவும் புரவுவரித் திணைக்களத்தினராகவும் அமர்ந்து அரசாங்கத்தை இனிது நடத்திய அரசியல் அதிகாரிகள் எத்துணையோ பலர் ஆவர். அவர்களுட் சிலரது பெயர்கள்மாத்திரம் கல்வெட்டுக்களால் தெரிகின்றன. அன்னோருள் மூவரது வரலாற்றைச் சிறிது விளக்குதற்குரிய கருவிகள் கிடைத்துள்ளமையின் அவர்களைப்பற்றிய செய்திகளும் ஈண்டுச் சுருக்கமாக எழுதப்படுகின்றன.

1. கருணாகரத் தொண்டைமான் :— இவனது வரலாற்றைக் கலிங்கத்துப்பரணி ஒன்றே சிறிது கூறுகின்றது. அந்நூல் ஒன்றிலதேல் தமிழகத்தில் அக்காலத்தே பெருவீரனாய்ப் பெரும்புகழ் படைத்து விளங்கிய இக்குறுநில மன்னனது பெயரே பின்னுள்ளோர் தெரிந்துகொள்ளாதவாறு மறைந்தொழிந்திருக்கும் என்பது திண்ணம். இவன் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு சிற்றரசன். இவன், தண்ணளியினும் கல்வி கேள்விகளினும் சிறந்தவனாயிருந்தமையின் நம் குலோத்துங்கனது அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக முதலில் அமர்த்தப்பட்டான். பின்னர், தன் சீரிய

ஆற்றலாற் படிப்படியாக உயர்நிலையை எய்தி இறுதியில் வேந்தனது அமைச்சர் தலைவனாகவும் படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினன். இவனே, வடகலிங்கப் போர்க்குத் தலைமைப் படைத்தலைவனாகச் சென்று, போர்க்களத்தில் தன் அரசனாகிய குலோத்துங்கசோழற்கு வாகைமாலை சூட்டியவன். குலோத்துங்கன் எய்திய பெரும்புகழுக்குச் சிறந்த காரணமாயிருந்தோருள் இவன் முதன்மையானவன் என்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டாரும் இவனை 'வண்டையர் அரசன் அரசர்கள் காதன் மந்திரி—உலகுபுகழ் கருணாகரன்'[1] எனவும், 'கலிங்கப்பரணி நம் காவலனைச் சூட்டிய தோன்றல்'[2] எனவும் புகழ்ந்துள்ளார். இவனது அரிய அரசியல் ஊழியத்தைப் பெரிதும் பாராட்டி அதற்குரிய அறிகுறியாக 'வேள்' 'தொண்டைமான்' ஆகிய பட்டங்கள் குலோத்துங்கசோழனால் இவனுக்கு வழங்கப்பட்டன. இவன் இத்தகைய சிறப்பினை எய்திக் குலோத்துங்கனது அரசியலைப் பெருமையுறச் செய்தது இவ்வேந்தனது ஆட்சியின் பிற்பகுதியிலேயாகும். இவன், குலோத்துங்கனது மகனாகிய விக்கிரமசோழனது ஆட்சியிலும் இருந்துள்ளான் என்பது விக்கிரமசோழ னுலாவினால் அறியப்படுகின்றது.[3] இவன் வாழ்ந்த ஊர் வண்டை என்பர் ஆசிரியர் சயங்கொண்டார். அவ்வூர், சோழமண்டலத்தில் குலோத்துங்க சோழவளநாட்டைச் சார்ந்த திருநறையூர் நாட்டி

1. க. பரணி—தா. 430.
2. ஷெ 522.
3. விக்கிரமசோழனுலா—கண்ணி—69.

னுள்ள வண்டாழஞ்சேரியாகும் என்று ஒருகல்வெட்டு[4] உணர்த்துகின்றது. அஃது இப்போது வண்டுவாஞ் சேரி என்ற பெயரோடு தஞ்சாவூர் ஜில்லாவில் கும்ப கோணம் தாலூகாவிலுள்ள நாச்சியார்கோயிலிலிருந்து குடவாசலுக்குச்செல்லும் பெருவழியிலுள்ளது. வண் டாழஞ்சேரி என்பது வண்டுவாஞ்சேரி என்று பிற் காலத்தில் மருவி வழங்கிவருகின்றது.

இவன், சிவபெருமானிடத்தில் அளப்பரிய பேரன் புடையவனாய்த் திருவாரூரில் அரிய திருப்பணிகள் செய்துள்ளான். இவன் இறுதியில் திருவாரூரில் தியா கேசரது திருவடிகளிற் கலந்தனன் என்றும் தியாகே சரது திருப்பெயர்களுள் கருணாகரத்தொண்டைமான் என்பதும் ஒன்று என்றும் திருவாரூர் உலாக் கூறு கின்றது. இதனால், இவன் அப்பெருமானிடத்துக் கொண்டிருந்த அன்பின்முதிர்ச்சி ஒருவாறு விளங்கும்.

2. அரையன் மதுராந்தகனான குலோத்துங்கசோழ கேரளராசன் :—இவன் சோழமண்டலத்தில் மண்ணி நாட்டிலுள்ள முழையூரின் தலைவன்; குலோத்துங்க சோழனது படைத்தலைவர்களுள் ஒருவன். அரசனால் கொடுக்கப்பெற்ற குலோத்துங்கசோழ கேரளராசன்

4. 'ஸ்வஸ்திஸ்ரீ கோ இராசகேசரிவன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு நாற்பத்துமூன்று. ஜயங்கொண்டசோழமண் டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூ ராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ் சேரியுடையான் வேளான கருணாகரனான தொண் டைமானார் தேவியார் அழகியமணவாளனி மண்டை யாழ்வார் வைத்த திருநந்தா விளக்கு.' (S.I.I. Vol. IV. No, 862.)

என்ற பட்டம் எய்தியவன்; குலோத்துங்கன் சேரர்களோடு நடத்திய போர்க்குப் படைத்தலைமை வகித்துச்சென்று அதில் வெற்றிபெற்றவன்; இவ்வேந்தனால் சேரமண்டலத்தில் கோட்டாற்றில் நிறுவப்பெற்ற நிலைப்படைக்குத் தலைவனாயிருந்தவன். இவன் கோட்டாற்றில் தங்கிய நாட்களில் அங்கு 'இராசேந்திர சோழேச்சுரம்' என்ற கோயில் எடுப்பித்துள்ளான்.[5] அதற்கு நிபந்தங்களுக்காகத் தேவையான இறையிலியும் குலோத்துங்கசோழனால் விடப்பட்டுள்ளது. இதனால், இவன் சிவபெருமானிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவனாய் இருந்தனன் என்பது நன்கு விளங்குகின்றது.

3. மணவிற்கூத்தனான காலிங்கராயன்:— இவன் தொண்டைமண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரின் தலைவன்; குலோத்துங்கனது ஆட்சியின் முற்பகுதியில் படைத்தலைவனாயமர்ந்து பெரும் புகழ் எய்தியவன்; குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டிநாடு, வடநாடு முதலியவற்றோடு நிகழ்த்திய போர்களில் படைத்தலைமைவகித்து வெற்றியுற்று, அதனால் தன் அரசனுக்கு என்றும் நிலைபெறத்தக்க புகழை உண்டுபண்ணியவன்.[6] இவனது போர்வன்மையையும் பெருமையையும் நன்குணர்ந்த குலோத்துங்கன் இவனுக்குக் 'காலிங்கராயன்' என்ற பட்டம் அளித்தான்.

இவன், தில்லையம்பலத்தில் நடம்புரியும் இறைவனிடத்துப் பேரன்புபூண்டொழுகி, ஆண்டு இயற்றிய

5. S. I. I. Vol. III. No. 73.
6. S. I. I. Vol. IV. No. 225.

திருப்பணிகள் பல; அவற்றுள் தில்லையம்பலம் பொன் வேய்ந்தமையும், அங்கு நூற்றுக்கால்மண்டபம், பெரிய திருச்சுற்றுமாளிகை, தேவாரம் ஓதுதற்குரிய மண்டபம், சிவகாமகோட்டம் முதலியவற்றைக் கட்டுவித்தமையும் சிறந்தனவாம். அன்றியும், இவன் தியாகவல்லி முதலான ஊர்களைப் பொன்னம்பலவாணருக்குத் தேவதான இறையிலியாக விட்டிருக்கின்றனன். சமயகுரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசு அடிகளை ஆட்கொண்டருளிய திருவதிகை வீரட்டானேச்சுரர் திருக்கோயிலில் இவன் செய்துள்ள அருந்தொண்டுகள் பலவாகும். அங்குக் காமகோட்டம் எடுப்பித்தும், பொன்வேய்ந்தும், ஆடரங்கும் வெள்ளிச்சாலையும் அமைப்பித்தும், தேவதான இறையிலிவிடுத்தும் செய்த அருந்தொண்டுகள் அளவிறந்தன என்பர். இவற்றால் இவனது சிவபத்தியின்மாட்சி இத்தகையதென்று நன்கு புலப்படுகின்றதன்றோ? இனி, இவன் சைவசமயத்திற்குப் புரிந்துள்ள அரும்பணிகளுட் சிறந்தது மூவர் அருளிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையம்பதியிற் சேமித்துவைத்தமையே யாகும்.[7] இவன் இவ்வாறு ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளை விளக்கக்கூடிய பல வெண்பாக்கள் தில்லையம்பதியிலும் திருவதிகைவீரட்டத்திலும் உள்ள கோயில்களில் வரையப்பட்டுள்ளன.[8]

இவன், விக்கிரமசோழன் ஆட்சியிலும் இத்தகைய உயர்நிலையிலே இருந்தனன் என்பது விக்கிரமசோழன் உலாவடிகளால் புலனாகின்றது.[9]

---

7. S. I. I. Vol. IV. No. 225. [தொகுதி 23.
8. Ins. No. 369 of 1921 ; M. E. R. 1922 ; செந்தமிழ்த்
9. விக்கிரமசோழனுலா— கண்ணிகள் 78, 79.

## பன்னிரண்டாம் அதிகாரம்.

### குலோத்துங்கனது அவைக்களப்புலவர்.

இனி, குலோத்துங்கன் காலத்துச் சிறந்து விளங்கிய புலவர்பெருமான் கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் ஆவர். இவரது வரலாற்றை அடியிற் சுருக்கி வரைவாம்.

இப்புலவர் பெருந்தகையார் சோழமண்டலத்திலே கொரடாச்சேரி ஸ்டேஷனுக்கு அண்மையிலுள்ள தீபங்குடி என்னும் ஊரின்கண் பிறந்த நல்லிசைப்புலவராவர். இவரது குலமும் சமயமும் நன்கு புலப்படவில்லை. இவர் பெரும் புலமை படைத்தவராய் நம் குலோத்துங்கசோழனைக் காணவேண்டி அவனது அவைக்களத்தை அடைந்தபோது அவ்வரசன் 'நமது ஊர் யாது'? என்று வினவ,

செய்யும் வினையும் இருளுண் பதுவும்
    தேறும் நறவும் ஊனும் களவும்
பொய்யும் கொலையும் மறமுந் தவிரப்
    பொய்தீர் அறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் இதழும் விழியும்
    காலும் நிறமும் போலுங் கமலம்
செய்யும் மடவார் கனிவா யுதரக்
    கோபங் கமழும் தீபங் குடியே,

என்று தம்புலமைக்கேற்பப் பாடலால் விடைகூறினர். இச்செய்தி, தமிழ் நாவலர் சரிதையால் அறியப்படு

கின்றது. அரசன் இவரது புலமைக்கு வியந்து தன் அவைக்களப்புலவராக இவரை இருக்கச்செய்தனன் என்று தெரிகிறது.

இவர் அரசனுக்கு விடைகூறிய பாடலில், பொய் கொலை முதலியன நீக்குதலையும், சமணர்க்குச் சிறந்த இரவுண்டல் தவிர்தலையும், தமதூர் சைனக்கடவுளின் தலமாயிருக்கும் சிறப்பையும் எடுத்துரைத்துப் புகழ்ந்திருத்தலால் இவர் சைனமதப் பற்றுடையவராயிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. இவர் தாம் பாடியுள்ள கலிங்கத்துப்பரணியில் கடவுள் வாழ்த்து என்ற பகுதியில் சிவபெருமான், திருமால், நான்முகன், சூரியன், கணபதி, முருகவேள், நாமகள், துர்க்கை, சத்தமாதர்கள் என்ற இன்னோர்க்கு வணக்கங்கூறியிருத்தலாலும் இவர்களுள் சிவபெருமானுக்கே முதலில் வணக்கங்கூறியிருத்தலாலும் இவர் பரணி பாடியகாலத்தில் சைவமதப்பற்றுடையவராக மாறி இருத்தல் வேண்டுமென்பது நன்கு விளங்குகின்றது. ஆகவே, இவர் முதலில் சைனமதப்பற்றுடையவராயிருந்து சைவசமயத்தினனாகிய குலோத்துங்கசோழனையடைந்து அவனது அவைக்களப்புலவராயமர்ந்த பின்னர், சைவமதப்பற்றுடையவராயினர் போலும்.

இனி, இப்புலவர் தம்மோடு வாதப்புரிவான் போந்த தென்னாட்டுப்புலவர் சிலரை வென்ற காரணம் பற்றி, 'சயங்கொண்டார்' என்றழைக்கப்பெற்றனர் என்பர். ஆயின் இவரது இயற்பெயர் யாதென்பது இப்போது தெரியக்கூடவில்லை.

கலிங்கரைத் தொலைத்து வாகைமிலைந்த குலோத்துங்கன் இப்புலவரை நோக்கி, 'புலவீர்! யானும்

சயங்கொண்டாருயினேன்' என்றனன். உடனே புலவர், 'அங்ஙனமாயின், சயங்கொண்டாரைச் சயங் கொண்டான் பாடுதல் மிகப் பொருத்தமுடைத் தன்றோ!' என உரைத்துப்போய், சின்னாட்களில் 'கலிங்கத்துப்பரணி' என்ற ஓர் அரிய அழகிய இயற்றி வந்து அரசனது அவைக்களத்தே அரங்கேற்றினர். அப்போது அப்பரணி நூற்பாடல்களைப் பரிவுடன் கேட்டுக்கொண்டு வீற்றிருந்த வேந்தர்பெருமான் ஒவ்வொருபாடலின் இறுதியிலும், பரிசிலாகப் பொற்றேங் காய்களை ஒவ்வொன்றாக உருட்டித்தந்து இவரையும் இவரியற்றிய நூலையும் பெரிதும் சிறப்பித்தனன்.

இக்கதை எவ்வாறாயினும், இப்புலவர், தாம் அரசன்பாற்கொண்ட பேரன்பின் பெருக்கத்தால் அவனது கலிங்கவெற்றியைச் சிறப்பிக்கக் கருதி, 'கலிங்கத்துப்பரணி' என்ற நூல் பாடினரெனக் கோடலில் இழுக்கொன்றுமில்லை. பரணிநூற்கேட்ட வளவர்பெருமானும் புலவர்க்குத் தக்கவாறு பரிசில் அளித்துப் பாராட்டியிருத்தலும் கூடும்.

இனி, இவரியற்றிய பரணி சொற்பொருள் நயங் கள் நன்கமையப்பெற்று நிலவுதலால், இவரைப் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று முற்காலத் திய அறிஞர் புகழ்ந்துரைப்பாராயினர். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் இப்பரணி யிலுள்ள சில பாடல்களைத் தம் உரையில் மேற்கோளாக எடுத்து ஆண்டிருத்தலோடு இதன் ஆசிரியராகிய சயங் கொண்டாரைக் 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் புகழ்ந் துள்ளார். புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் மகனும் தம்பால் தமிழ் நூற்களைக்

கற்றுத் தெளிந்தவனுமாகிய இரண்டாம் குலோத்துங்க சோழன்மீது தாம் பாடிய பிள்ளைத்தமிழில் 'பாடற் பெரும்பரணி கேடற்கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவச் செஞ்சேவகஞ்செய்த சோழன் திருப்பெயரா செங்கீரை யாடியருளே' [1] என்றுகூறி நம் கலிங்கத்துப்பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டாரைக் கவிச்சக்கரவர்த்தி என்று மனமுவந்து பாராட்டியிருத்தல் ஈண்டு அறியத்தக்கதொன்றாம். விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூன்று மன்னர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்றுக் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டமும் எய்தி மிக உயரிய நிலையில் வீற்றிருந்த நல்லிசைப் புலவராகிய ஒட்டக்கூத்தர் ஆசிரியர் சயங்கொண்டாரிடத்து எத்துணைமதிப்பும் அன்பும் உடையவராயிருந்தனரென்பது மேற்கூறியவற்றால் இனிது விளங்காநிற்கும்.

இனி, இப்பரணியில் பண்டைச்சோழவேந்தர்களது வரலாறுகள் கூறப்பட்டிருத்தலால் சோழரைப் பற்றி ஆராய்வார்க்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம். அன்றியும், பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களுள் பலவற்றை இந்நூலிற் காணலாம்.

நமது சயங்கொண்டார் வணிகர்மீது 'இசையாயிரம்' என்ற நூலொன்று பாடியுள்ளனரென்று தமிழ் நாவலர் சரிதை உணர்த்துகின்றது. அந்நூல் இதுபோது கிடைக்கப்பெறாமையின் இறந்ததுபோலும். அன்றியும் 'விழுப்பரையர்' என்ற ஒரு தலை

1. தமிழ்ப் பொழில்—துணர் 4—பக்—320.

வர்மீது 'உலாமடல்' என்னும் நூலொன்று பாடியுள்ளனர் என்று தெரிகிறது. சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் நமது சயங்கொண்டாரேயாவர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

# பதின்மூன்றாம் அதிகாரம்.

## குலோத்துங்கனது அரசியல்.

நம் குலோத்துங்கனது அரசியல் முறைகளை இனி விளக்குவாம். பொதுவாக நோக்குமிடத்துப் பழைய தமிழ் நூல்களாலும் கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் அறியப்படும் அரசாங்க முறைகள் எல்லாம் நம் மன்னர் பெருமானாகிய குலோத்துங்கனுக்கும் உரியவையென்றே கூறலாம். அவற்றை எல்லாம் ஆராய்ந்து ஒன்றையும் விடாது எழுதப்புகின் அவை ஒரு தனி நூலாக விரியும் என்பது திண்ணம். ஆதலால், அவ்வரசியல் முறைகளை மிகச் சுருக்கமாக எழுதி விளங்க வைத்தலே எமது நோக்கமாகும்.

1. இராச்சியத்தின் உட்பிரிவுகள்:—நமது வேந்தர் பெருமானது ஆணையின்கீழ் அடங்கியிருந்த சோழ இராச்சியம் அக்காலத்தில் பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள், சோழமண்டலம், சயங்கொண்ட சோழமண்டலம், இராசராசப் பாண்டிமண்டலம், மும்முடிச் சோழமண்டலம், வேங்கைமண்டலம், மலைமண்டலம், அதிராசராசமண்டலம் என்பன சிறந்தவை. இவற்றுள், சோழமண்டலம் என்பது தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களையும் தென்னார்க்காடு ஜில்லாவின் தென்பகுதியையும் தன்னகத்துட்கொண்டுள்ள நிலப்பரப்பாகும்; சயங்கொண்ட சோழமண்ட

லம் என்பது தென்னார்க்காடு ஜில்லாவின் பெரும்பகுதியையும் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, சித்தூர் ஜில்லாக்களையும் தன்னகத்துக்கொண்டது; இராசராசப் பாண்டிமண்டலம் என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைத் தன்னகத்துக்கொண்டது; மும்முடிசோழமண்டலம் என்பது ஈழமாகிய இலங்கையாகும்; வேங்கைமண்டலம் என்பது கீழைச்சளுக்கிய நாடாகும்; மலைமண்டலம் என்பது சேரநாடாகும்; இது திருவாங்கூர் இராச்சியத்தையும் மலையாளம் ஜில்லாவையும் சேலம் ஜில்லாவின் ஒரு பகுதியையும் தன்னகத்துக்கொண்டது; அதிராசராசமண்டலம் என்பது கொங்கு நாடாகும்; இது கோயம்புத்தூர் ஜில்லாவையும் சேலம் ஜில்லாவின் ஒரு பகுதியையும் தன்னகத்துக்கொண்டது.

இனி, ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதல் இராசராச சோழன் காலத்தில் சோழமண்டலம், இராசேந்திரசிங்கவளநாடு, இராசாச்ரயவளநாடு, நித்தவிநோதவளநாடு, க்ஷத்திரியசிகாமணி வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, அருண்மொழிதேவ வளநாடு, கேரளாந்தக வளநாடு, இராசராசவளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு என்னும் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.[1] பெரும்பான்மையாக நோக்குமிடத்து ஒவ்வொரு வளநாடும் இரண்டிரண்டு பேராறுகளுக்கும் இடையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகும். உதாரணமாக, உய்யக்கொண்டார் வளநாட்டை எடுத்துக்கொள்வோம். அஃது அரிசிலாற்றுக்கும் காவிரி

1. S. I. I. Vol. II, Introduction pages from 21 to 27.

யாற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பு ஆகும் என்பது தஞ்சையிலுள்ள இராசராசேச்சுரத்திற் காணப்படும் ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது.[2] இங்குக் குறிக்கப்பெற்றுள்ள வளநாடுகளின் பெயர்கள் எல்லாம் முதல் இராசராசசோழனது இயற்பெயரும் பட்டப்பெயர்களுமேயாகும். நம் குலோத்துங்கசோழன் தன் ஆட்சிகாலத்தில் இவ் வளநாடுகளுக்குரிய பெயர்களை நீக்கிவிட்டுத் தன் பெயர்களை அவற்றிற்கு இட்டனன். க்ஷத்திரிய சிகாமணி வளநாடு என்பது குலோத்துங்க சோழவளநாடு என்னும் பெயருடையதாயிற்று. இராசேந்திர சிங்கவளநாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; அவற்றுள் மேற்கிலுள்ள பகுதி உலகுய்யவந்த சோழவளநாடு எனவும் கிழக்கிலுள்ள பகுதி விருதராச பயங்கரவளநாடு எனவும் வழங்கப்பட்டன. உலகுய்யவந்தான், விருதராசபயங்கரன் என்பன நம் குலோத்துங்கசோழனது சிறப்புப் பெயர்கள் என்பது கலிங்கத்துப்பரணியால் அறியப்படுஞ் செய்தியாகும்.[3] பிற மண்டலங்களும் இங்ஙனமே பல வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. தொண்டைமண்டலமாகிய சயங்கொண்ட சோழமண்டலம் மாத்திரம் இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

---

2. ‘அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப்பள்ளிச்சந்தம் இறக்கின நெற்குப்பை அனந்தபடி நிலம்’—S. I. I. Vol. II. Ins. No. 4; முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் கொள்ளிடத்திற்கும் காவிரிக்கும் நடுவிலுள்ள நிலப்பரப்பு, விருதராசபயங்கரவளநாடு என்று வழங்கிற்று என்பது மாயூரத்தாலுகா இலுப்பைப்பட்டியிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது.

3. க. பரணி—தா. 134, 243, 582.

இனி, ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. வளநாட்டின் உட்பகுதிகளாகிய நாடுகளுள் சில, கூற்றங்கள் எனவும் வழங்கிவந்தன. ஒவ்வொரு நாடும் சில தனியூர்களாகவும் பல சதுர்வேதிமங்கலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சதுர்வேதிமங்கலமும் சில சிற்றூர்களைத் தன்னகத்துக்கொண்டு விளங்கிற்று.

2. அரசனும் இளவரசனும் :— இங்ஙனம் வகுக்கப்பட்டிருந்த சோழ இராச்சியத்திற்குச் சோழ அரசனே தலைவன் ஆவன். அரசியலில் தலைமைவகித்து எவற்றிற்கும் பொறுப்புடையவனாய் நீதி தவறாது ஆட்சிபுரியும் கடமை இவ்வேந்தனுக்கே யுரியதாகும். சோழமன்னர்கள் பட்டத்திற்குரிய தம் புதல்வர்க்கு இளவரசுப்பட்டம் கட்டி அவர்களை அரசியல் முறைகளில் நன்கு பழக்கிவருவது வழக்கம். இதற்கேற்ப, நம் குலோத்துங்கன் தனது மூத்தமகனாகிய விக்கிரம சோழனுக்குத் தன் ஆட்சிக்காலத்தில் இளவரசுப்பட்டம் கட்டி அரசியல் நுட்பங்களை யுணர்ந்து வன்மையெய்துமாறு செய்தான். இவ்விக்கிரமசோழனே குலோத்துங்கனுக்குப் பின்னர் முடிசூடியவன் என்பது முன்னரே யுணர்த்தப்பட்டது.

3. உடன் கூட்டம் :—அரசன், தான் விரும்பியவாறு எதனையும் நடத்தற்குரிமையுடையவனெனினும் பல அதிகாரிகளுடனிருந்து ஆராய்ந்தே காரியங்களை நடத்துவது வழக்கம்.[4] இவ்வதிகாரிகளை 'உடன் கூட்டத்ததிகாரிகள்' என்று கல்வெட்டுக்

4. சோழவமிச சரித்திரச் சுருக்கம், பக். 48, 49.

களும் செப்பேடுகளும் கூறுகின்றன. இவர்கள் அர
சனால் அளிக்கப்பெற்ற பலவகைச் சிறப்புகளையும்
எய்திப் பெருமையுற்றவர்கள்.

4. அரசியல் அதிகாரிகளும் அவர்களது கடமை
களும்:—நம் குலோத்துங்கனது ஆளுகையில் பல்
வகைத் துறைகளிலும் தலைவர்களாக அமர்ந்து அவ
னது ஆட்சி நன்கு நடைபெறச் செய்தோர், படைத்
தலைவர், நாட்டதிகாரிகள், நாட்டையளப்போர், நாடு
கண்காட்சி, வரியிலார், வரிக்குக் கூறுசெய்வார், புரவு
வரி, வரிப்புத்தகம், பட்டோலைப் பெருமான், விடை
யதிகாரி, திருவாய்க்கேள்வி, திருமந்திர ஓலை, திரு
மந்திர ஓலைநாயகம் என்போர்.[5]

இவர்களுள், படைத்தலைவர் அரசனது காலாட்
படை, குதிரைப்படை, யானைப்படை இவற்றிற்குத்
தலைமைவகித்துப் போர்நிகழுங்கால் அதனை வெற்றி
யுற நடத்துவோர். நாட்டதிகாரிகள் ஒவ்வொரு உள்
நாட்டிற்கும் தலைவர்களாய் விளங்குவோர்; இவர்கள்
தம்தம் நாட்டைச் சுற்றிப்பார்த்து குடிகளின் நலங்
கள், அறநிலையங்கள், நியாயம் வழங்குமுறை முதலான
வற்றைக் கண்காணித்து வருவது வழக்கம். நாட்டை
யளப்போர் ஒவ்வொரு நாட்டையும் கூறுபட அளவிடு
வோர். நாடு கண்காட்சி என்போர் நாட்டை யளந்
ததைக் கண்காணித்து உண்மை காண்போர். வரி
யிலார் வரிகளால் வருந்தொகையைக் கணக்கிற் பதிந்து
கொள்வோர். வரிக்குக் கூறுசெய்வார் கணக்கிற் பதிந்
துள்ள தொகையை இவ்வியற்றிற்குச் செலவிடவேண்

5. The Historical Sketches of Ancient Dekhan pages 371, 372, 373 & 374.

டுமென்று பாகுபாடு செய்வோர். புரவுவரி என்போர் அரசிறை நீக்கிய ஊர்களினின்றும் வருதற்குரிய பிற வரிகளுக்குக் கணக்கு வைப்போர். வரிப்புத்தகம் என்போர் அரசனுக்கு ஒவ்வோர் ஊரினின்றும் வருதற்குரிய காணிக்கடனாகிய அரசிறைக்குக் கணக்குவைப்போர். பட்டோலைப் பெருமான் நாடோறும் நடப்பவற்றை நிகழ்ச்சிக்குறிப்பில் எழுதிவைப்போர். விடையதிகாரி என்போர், கிராமசபைகளினின்றும் பிற அதிகாரிகளிடத்திருந்தும் வரும் ஓலைகளைப் படித்துப்பார்த்து அவற்றிற்குத் தக்கவாறு விடையெழுதியனுப்புவோர்; அன்றியும் அரசனது ஆணைத்திருமுகத்தை ஊர்ச்சபைகளுக்கும் பிற அதிகாரிகளுக்கும் முறைப்படி தூதுவர் வாயிலாக அனுப்புவோரும் இவர்களேயாவர். திருவாய்க்கேள்வி என்போர் அரசன் திருவாய் மலர்ந்தருளியவற்றைக் கேட்டுவந்து திருமந்திர ஓலையிடம் அறிவிப்போர். திருமந்திர ஓலை என்போர் அரசனது ஆணையை எழுதுவோர். இவர்களுக்குத் தலைவராயிருப்போர் திருமந்திரவோலை நாயகம் எனப்படுவார்.

இனி, இவர்களையன்றி அரச காரியங்களை முட்டின்றி நடத்தும் கரும மாராயம் என்போரும் தலைநகரிலிருந்து வழக்காராய்ந்து நீதி செலுத்தும் அறங்கூறவையத்தாரும் அந்நாளில் இருந்தனர்.

இக்காலத்தில் அரசாங்க அதிகாரிகளுள் சிறந்தோர்க்கு அவர்களது ஆற்றலையும் அரசியல் ஊழியத்தையும் பாராட்டி, 'ராவ்பகதூர்' 'திவான்பகதூர்' 'சர்' 'C. I. E.' முதலான பட்டங்கள் அளித்து நமது அரசாங்கத்தார் அவர்களை மகிழ்விப்பதுபோல, பதி

னொன்றாம் நூற்றாண்டில் நம் தமிழகத்தில் முடிமன்னனாக வீற்றிருந்து செங்கோல் ஓச்சிய நம் குலோத்துங்கனும் தன் அரசியல் அதிகாரிகளுக்குப் பல பட்டங்கள் வழங்கி அவர்களைப் பாராட்டியுள்ளான் என்பது ஈண்டு உணரத்தக்கது. அக்காலம் அரசனால் அளிக்கப்பெற்ற பட்டங்கள், மூவேந்தவேளான், கேரளராசன், காலிங்கராயன், தொண்டைமான், வாணகோவரையன், பல்லவராயன், இளங்கோவேள், காடவராயன், கச்சிராயன், சேதிராயன், விழுப்பரையன் முதலியனவாகும். இப்பட்டங்களை அரசன் பெரும்பாலும் தன் பெயர்களோடு இணைத்தே வழங்குவது வழக்கம்.

இதன் உண்மையைக் குலோத்துங்கசோழகேரளராசன், இராசேந்திரசோழ மூவேந்தவேளான், விருதராசபயங்கர வாணகோவரையன், வீரசோழப் பல்லவராயன், சனநாதக் கச்சிராயன் என்று வழங்கப்பெற்றுள்ள பட்டங்களால் நன்குணரலாம். அன்றியும் சிறுதனம், பெருந்தரம் என்ற இரண்டு பட்டங்கள் இருத்தலைக் கல்வெட்டுக்களில் காணலாம். இவை அதிகாரிகளது உயர்வு தாழ்வுகளாகிய வேறுபாடுகளையுணர்த்த அளிக்கப்பெற்றவைபோலும்.

5. அரசிறை:—அக்காலத்தில் குடிகள் தம் அரசனுக்குச் செலுத்திவந்த நிலவரி காணிக்கடன் என்று வழங்கப்பெற்றுள்ளது. இக்காணிக்கடன் விளையும் நெல்லின் ஒரு பகுதியாகவாதல் பொன்னும்காசுமாகவாதல் செலுத்தப்பெறுவது வழக்கம்.[6] இக்காணிக்கடனை ஊர்ச்சபையார் குடிகளிடத்திலிருந்து ஆண்டுதோறும் வாங்கி அரசனது தலைநகரிலுள்ள அரசாங்க

6. S. I. I. Vol. II Ins. No. 4 & 5.

பொக்கிஷசாலைக்கு அனுப்புவர். மூன்றாம் ஆண்டு தொடங்கியும் கடந்த ஈராண்டிற்கும் நிலவரி கொடாதவர் நிலங்கள் ஊர்ச்சபையாரால் பறிமுதல் செய்யப்பட்டு விற்கப்படுவது வழக்கம்.[7] அங்ஙனம் விற்றமையால் கிடைத்தபொருள் அரசாங்கத்தில் சேர்ப்பிக்கப் பெறும்.

இனி, நிலவரியேயன்றிக் கண்ணாலக்காணம், குசக்காணம், நீர்க்கூலி, தறியிறை, தரகு, தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், (இடைப்பூட்சி) ஓடக்கூலி, செக்கிறை, வண்ணாரப்பாறை, நல்லா, நல்லெருது, நாடுகாவல், உல்கு, ஈழம்பூட்சி முதலான பல்வகை வரிகளும் இருந்துள்ளன.[8] எனவே, அந்நாளில் பற்பல தொழில்களுக்கும் வரிகள் ஏற்பட்டிருத்தல் அறியத்தக்கது. வரிகளின் பெயர்கள் மிகுந்துள்ளமைபற்றி அரசாங்கவரிகள் அக்காலத்தில் மிகுந்திருந்தன என்று கருதற்கு இடமில்லை. ஒவ்வொரு தொழிலின் பெயரையும் சுட்டி வரிப்பெயர் குறிக்கப்பெற்றிருத்தலின் வரிப்பெயர்கள் மிகுந்து காணப்படுகின்றனவேயன்றி வேறில்லை. இந்நாளில் தொழில்வரி என்ற பொதுப் பெயரால் எல்லாத் தொழிலாளரிடத்தும் வரி வாங்கப்படுகின்றது. ஆகவே, இற்றைநாள் தொழில்வரி ஒன்றே எல்லாத் தொழில்களுக்குமுரிய பல்வகைத் தொழில் வரிகளையும் தன்னகத்து அடக்கிக்கொண்டு நிற்றல் காண்க.

கடன், கூலி, இறை, பாட்டம், பூட்சி என்பன வரிகளை யுணர்த்தும் மொழிகளாம். கண்ணாலக்காணம்

7. S. I. I. Vol. III. Ins. No. 9.
8. S. I. I. Vol. II. Nos. 98 & 99.

என்பது கல்யாணவரி என்றும் அது திருமணகாலில் மணமகனும் மணமகளும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய அரைக்கால் பணமேயாம் என்றும் சோழநாட்டிலுள்ள முதற் பராந்தகசோழன் கல்வெட்டு ஒன்று உணர்த்துகின்றது.[9] காடுகாவல் என்னும் வரி பாடிகாவல் எனவும் வழங்கும். இஃது ஊர்களைக் காத்தற்கு வாங்கிய ஒரு தனி வரியேயாகும். உல்கு என்பது சுங்கவரியாகும். ஈழம்பூட்சி என்பது கள் இறக்குதற்குச் செலுத்தவேண்டிய வரியாகும்.

6. நிலஅளவு:—ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஊர்களை முறையாக அளந்தாலன்றி அங்கு விளைநிலங்கள் எவ்வளவு உள்ளன என்பதும் அவற்றிற்குரிய நிலவரியாகிய காணிக்கடன் குடிகளிடத்திலிருந்து அரசாங்கத்திற்கு எவ்வளவு வரவேண்டும் என்பதும் நன்கு புலப்படமாட்டா. ஆதலால், சோழ இராச்சியம் முழுமையும், முதல் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில் ஒருமுறையும், முதல் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் ஒருமுறையும், மூன்றாம் குலோத்துங்கசோழனது ஆட்சிக்காலத்தில் ஒருமுறையும் அளக்கப்பட்டது.[10] இவை முறையே கி. பி. 1001, கி. பி. 1086, கி. பி. 1216-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தவையாகும்.

நிலம் அளந்த கோலை 'உலகளந்தகோல்' என்று வழங்குவர். இக்கோல் பதினாறு சாண் நீளமுடையது. நிலங்களை நீர்நிலம், கொல்லை, காடு என்று வகுத்துள்

9. The Historical Sketches of Ancient Dekhan, page 348.
10. Do. pages 357 & 358.

னர். இவற்றால், சீர் நிலம், கொல்லை என்பன முறையே நன்செய் புன்செய்களைப் போலும். நிலங்கள் நூறு குழிகொண்டது ஒருமா ஆகவும் இருபதுமா கொண்டது ஒரு வேலியாகவும் அளக்கப்பெற்றன. வேலி ஒன்றுக்கு நூற்றுக்கலனிலேயுள்ளதும் அதற்குக் கீழ்ப்பட்டதுமான நிலங்கள் இருதரமாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அக்காலத்தில் நிலத்தின் எத்துணைச் சிறு பகுதியையும் விடாமல் நுட்பமாக அளக்கப்பெற்றுள்ளது என்பது 'இறையிலி நீக்கு நிலம் முக்காலே இரண்டு மாக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா முக்காணிக்கீழ் முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினால் இறை கட்டின காணிக்கடன்' என்பதனால் நன்கு விளங்கும். நிலத்தையளந்து எல்லை வகுத்து அக்குறுப் புள்ளடிக்கல் நடுவது வழக்கம் என்பதும் பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

7. இறையிலி:—நம் குலோத்துங்கனது ஆட்சிக் காலத்தில் வரி விதிக்கப்பெறாமல் ஒதுக்கப்பெற்ற நிலங்கள் யாவை என்பது முன்னரே விளக்கப்பட்டது. சைவ வைணவ திருக்கோயில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலங்கள் தேவதானம் எனவும், சைன பௌத்த கோயில்களுக்கு அளிக்கப்பெற்றவை பள்ளிச் சந்தம் எனவும் பார்ப்பனர்க்கு விடப்பெற்றவை பிரம தேயம், பட்டவிருத்தி எனவும் அறச்சாலைகட்கு விடப்பெற்றவை சாலாபோகம் எனவும் வழங்கப் பெறும். புலவர்க்கு அளிக்கப்பெற்றது புலவர் முற் றூட்டு எனப்படும்.

8. நாணயங்கள்:—நம் குலோத்துங்கன் காலத் தில் பொன்னாலுஞ் செம்பாலுஞ் செய்யப்பெற்ற காசு

கள் வழங்கிவந்தன. இக்காசுகளுள் சில இக்காலத்தும் சிற்சில இடங்களில் கிடைக்கின்றன. அக்காலத்துச் சோழமன்னர்களது காசுகள் எல்லாம் ஒரே எடையுள்ளனவாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்று பழைய காசுகளை ஆராய்ந்து அரியநூல் ஒன்று எழுதியுள்ள டாக்டர் கன்னிங்காம் என்ற துரைமகனார் வரைந்துள்ளனர். காய்ச்சி உருக்கினும் மாற்றும் நிறையும் குன்றாதது என்று அதிகாரிகளால் ஆராய்ந்து உறுதிசெய்யப்பட்டதற்கு அடையாளமாகத் தலை யிடப்பெற்ற தலைப்பொன்னும் அக்காலில் வழங்கிற்று.[11]

9. அளவைகள்:—அக்காலத்தில் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய நான்கு வகைப்பட்ட அளவைகளும் வழக்கில் இருந்தன. இவற்றுள் எடுத்தல் என்பது நிறுத்தல் ஆகும். மணி, பொன், வெள்ளி முதலான உயர்ந்த பொருள்கள், கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்னும் நிறைகல்லாலும், செம்பு, பித்தளை, வெண்கலம், தரா முதலான தாழ்ந்த பொருள்கள் பலம் கஃசு என்னும் நிறைகல்லாலும் நிறுக்கப்பட்டுவந்தன. அரசாங்க முத்திரையிடப் பெற்ற நிறைகல் குடிஞைக்கல் எனப்படும். பொன்னின் மாற்றறிதற்குரிய ஆணியும் அப்போது இருந்தது என்பது ஈண்டு உணர்தற்குரியதாகும்.

இனி, செம்பு, பித்தளை முதலியவற்றால் செய்யப்பெற்றவை, இரண்டாயிரம் பலம், மூவாயிரம் பலம்

11. (a) S. I. I. Vol. III No. 96.
(b) Do. page 229 Foot-Note.

என்று நிறுக்கப்பட்டுள்ளசெய்தி, கல்வெட்டுக்களால் வெளியாகின்றது.[12] ஆகவே, அந்நாளில், சேர், வீசை, தூக்கு, மணங்கு ஆகியவற்றால் நிறுக்கும் வழக்கமின்மை நன்கு புலப்படுகின்றது.

நெல், அரிசி, உப்பு, நெய், பால், தயிர் முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்னும் முகக்குங்கருவிகளால் அளக்கப்பட்டன.[13] சர்க்கரை, மிளகு, கடுகு, புளி முதலியன பலத்தால் நிறுக்கப்பட்டன. அரசாங்க முத்திரை இடப்பெற்ற மரக்காலும் இருந்தது. தோரை, விரல், சாண், முழம் என்பவற்றால் நீட்டல் அளவை நடைபெற்றது.

எடுத்தல் அளவை:—

2 குன்றி = 1 மஞ்சாடி
20 மஞ்சாடி = 1 கழஞ்சு

முகத்தல் அளவை:—

5 செவிடு = 1 ஆழாக்கு
2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி
2 உரி = 1 நாழி
8 நாழி = 1 குறுணி
2 குறுணி = 1 பதக்கு
4 குறுணி = 1 தூணி
12 குறுணி = 1 கலம்.

10. கிராமசபை:— நம் குலோத்துங்கன் காலத்தில் ஊர்கள்தோறும் சபைகள் இருந்தன. இச்சபை

12. S. I. I. Vol. II. Ins. Nos. 36, 41, 85.
13. S. I. I. Vol. II. Ins. Nos. 35, 51, 84.

யினரே அங்கு நடைபெறவேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றிவந்தனர். சுருங்கச்சொல்லுமிடத்து அக்காலில் கிராமஆட்சி முழுமையும் இச்சபையாரால் தான் நடத்தப்பெற்று வந்தது எனலாம். இச்சபையின் உறுப்பினர் எல்லோரும் கிராமத்திலுள்ள பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர் ஆவர். அக்காலத்தில் தனியூர்களும் பல சிற்றூர்களடங்கிய சதுர்வேதி மங்கலங்களும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு (Ward) என்று வழங்கினர். ஒவ்வொரு குடும்பிற்கும் பிரதிநிதியாக ஒவ்வோர் உறுப்பினரே தேர்ந்தெடுக்கப்பெற்றனர். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உத்தரமேரூர் முப்பது குடும்புகளையுடையதாகவும் தஞ்சாவூர் ஜில்லாவில் செந்தலை என்று தற்காலத்து வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலம் சற்றேறக்குறைய அறுபது குடும்புகளையுடையதாகவும் இருந்தன. எனவே, உத்தரமேரூரிலிருந்தசபை முப்பது உறுப்பினரையுடையதாயிருந்தது என்பதும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திருந்தசபை அறுபது உறுப்பினர்களையுடையதாயிருந்தது என்பதும் நன்கு விளங்குகின்றன. ஆகவே சபையின் உறுப்பினரது எண் அவ்வவ்வூரின் பெருமை சிறுமைக்கு ஏற்றவாறு குறிக்கப்பெறும் போலும்.

இனி, சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறும் உரிமையுடையோர் காணிக்கடன் செலுத்தற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்தமனையும் உடையவராகவும் சிறந்த நூல்களைக்கற்ற அறிஞராகவும் காரியங்களை நிறைவேற்றுவதில் வன்மையுடையவராகவும்

அறநெறியில் ஈட்டிய பொருளைக்கொண்டு தூயவாழ்க்கை நடத்துவோராகவும் முப்பத்தைந்துக்கு மேல் எழுபத்தைந்துக்குட்பட்ட வயதினராகவும் மூன்று ஆண்டுகட்கு உள்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இருந்திராதவராகவும் இருத்தல்வேண்டும் என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

இனி, எந்தச் சபையிலாவது உறுப்பினராகவிருந்து கணக்குக்காட்டாதிருந்தவரும், ஐவகைப் பெரும் பாதகங்கள் புரிந்தோரும், கிராம குற்றப்பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், பிறர்பொருளைக் கவர்ந்தோரும், கள்ளக் கையெழுத்திட்டவராகிய கூடலேகை (Forgery) செய்தோரும், குற்றங்காரணமாகக் கழுதைமீது ஏற்றப்பட்டவரும், எந்தவகைக் கையூட்டுக் (Bribe) கொண்டோரும் கிராமத் துரோகி என்று கருதப்பட்டோரும் இங்குக் குறிக்கப்பெற்றோர்க்கு உறவினரும் தம் வாழ்நாள் முழுமையும் கிராமசபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறுதற்குத் தகுதியற்றவராவர்.[14]

பொதுமக்கள், கிராம சபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாகும். தேர்ந்தெடுத்தற்குக் குறிக்கப்பெற்ற நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுதற்கு அமைக்கப்பட்டுள்ள மாளிகையில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறாகவுள்ள எல்லோரையும் கூட்டுவர். அக்கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்பெறும். அங்குள்ள நம்பிமாருள்

14. சோழவமிச சரித்திரச்சுருக்கம் பக். 53, 55.

வயது முதிர்ந்தார் ஒருவர் அக்குடத்தை எடுத்து அதனுள் ஒன்றும் இல்லை என்பதை எல்லோரும் அறியக்காட்டிக் கீழேவைப்பர். உடனே, அவ்வூரில் ஒவ்வொரு குடும்பிலுள்ளாரும் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்றுவோர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்குசேர்த்து, அவை எக்குடும்பிற்குரியவை என்பது நன்கு புலப்படுமாறு அக்குடும்பின் பெயர் வரையப்பெற்ற வாயோலையொன்றைச் சேர்த்துக்கட்டி அக்குடத்தில் இடுவர். இங்ஙனமே எல்லாக்குடும்பினரும் குடவோலை இடுவர். பின்னர், அம்முதியார் அங்கு நடைபெறுவதை யுணராத ஓர் இளைஞனைக்கொண்டு அக்குடத்தினின்றும் ஓர் ஓலைக்கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து வேறு ஒரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஓர் ஓலையை அச்சிறுவனைக்கொண்டு எடுக்கச்செய்து, அதனைத் தாம் பெற்று, அங்குள்ள கரணத்தான் (கணக்கன்) கையிற்கொடுப்பார். அவன் தன் ஐந்து விரல்களையும் விரித்து உள்ளங்கையில் அதனை வாங்கி, அவ்வோலையில் எழுதப்பெற்றுள்ள பெயரை அங்குள்ளோர் யாவரும் உணருமாறு படிப்பான். பின்னர் அங்குள்ள நம்பிமார் எல்லோரும் அதனை வாசிப்பர். அதன் பிறகு, அப்பெயர் ஓர் ஓலையின்கண் வரைந்து கொள்ளப்படும். அவ்வோலையிற் குறிக்கப்பெற்ற பெயருடையவரே அக்குடும்பிற்குரிய கிராமசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆவர்.[15]

இங்ஙனமே மற்றைக் குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பெறுவர். ஊரிலுள்ள எல்

15. சோழவமிச சரித்திரச்சுருக்கம் பக். 54.

ளைக் குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தபின்னர், அவர்களுள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும் முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் சிலர் ஏரிவாரியராகவும், சிலர் பொன்வாரியராகவும், சிலர் பஞ்சவாரியராகவும் ஏற்படுத்தப்படுவர். எனவே, கிராமசபை, சம்வத்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம் என்ற ஐந்து உட்கழகங்களைத் தன்னகத்துக்கொண்டு விளங்கிற்று. சபையின் உறுப்பினர் ஏதேனும் குற்றம் பற்றி இடையில் விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதியமும் பெறாது தம் வேலைகளை நடத்துவதற்கு உரிமையுடையவராவர். இவர்களை ஆளுங் கணத்தார் எனவும் பெருமக்கள் எனவும் கூறுவர். இவர்கள் கூடுதற்கு ஊர்தோறும் மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவர்களுள் நியாயவிசாரணை செய்வதும் அறநிலையங்கள் நன்கு நடைபெறுகின்றனவா என்று பார்த்துக்கொள்வதும் சம்வத்சரவாரியரது கடமையாகும். ஏரி குளம் ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்தலும் விளைவிற்கு வேண்டும் நீரைப் பாய்ச்சுவித்தலும் ஏரிவாரியரது கடமையாகும். நிலத்தைப்பற்றிய எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுதல் தோட்டவாரியரது கடமையாகும். பல்வகையாலும் வாங்கப்பட்ட பொற்காசு செப்புக்காசுகளை ஆராய்வது பொன்வாரியரது கடமை யாகும். பஞ்சவாரியரது கடமை யாது என்பது இப்போது புலப்படவில்லை. இச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் எனப்படுவான். இவனை மத்தியஸ்தன் எனவும் கூறுவதுண்டு. நல்வழியில் ஈட்டிய பொருளும்

நல்லொழுக்கமும் உடையவனாகிய கரணத்தானாக அமைப்பர். இவன் கணக்கு எழுதல் வேண்டும். எழுதிய கணக்கைச் சபையார் விரும்பியபோது, தானே நேரில்காட்டவேண்டும். இவன் சபையாரது நன்கு மதிப்பைப் பெறாவிடின் அடுத்த ஆண்டில் இவனுக்கு அவ்வேலை கொடுக்கப்படமாட்டாது. ஒருநாளைக்கு ஒருநாழி நெல்லும் ஓராண்டிற்கு எழுகழஞ்சு பொன்னும் இரண்டு கூறையும் கணக்கனுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படுவது வழக்கம். கணக்கன் தான் எழுதிய கணக்கைச் சபையாரிடம் ஆராய்ந்து பார்த்தற்குக் கொடுக்கும்போது கையில் காய்ச்சிய மழுவை (Red Hot Iton) ஏந்தி உறுதிமொழி கூறிக்கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின் கணக்கனுக்கு எழுகழஞ்சிற்குமேல் கால்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்படும். ஊறுபாடு நேருமாயின் பத்துக்கழஞ்சு பொன் தண்டமும் வேறு தண்டமும் சபையாரால் விதிக்கப்படும்.[16]

இனி, நியாய விசாரணை நடத்தும் சம்வத்சரவாரியர் கொலைசெய்தவனுக்குக் கொலைத்தண்டம் விதித்தலும், பிறவற்றிற்குச் சிறையிடுதலும், தளையிடுதலும், பொன்தண்டம் விதித்தலும் வழக்கம். அறியாமையால் தற்செயலாக நேர்ந்த சாவிற்கெல்லாம் அவ்வவற்றிற்கு ஏற்றவாறு திருக்கோயில்களில் விளக்கிடுவதற்குக் குற்றவாளிகள் பொன் கொடுக்குமாறு சபையார் தீர்ப்புக்கூறுவர். வேட்டைக்குச் சென்றான் ஒருவன்

16. Annual Report on Epigraphy of the Southern Circle for the year ending 31st March 1916, pages 115 & 116.

எய்த அம்பு, குறி தவறி ஓர் உழவன்மேற்பட்டு அவன் இறந்ததற்கும், ஒருவன், தன் மனைவியைத்தள்ள, அவள் விழுந்து இறந்தமைக்கும், ஒருத்தி, தன் மகள் மீது எறிந்த கோல்பட்டு அண்மையில் நின்ற வேறொரு பெண் மாண்டதற்கும் திருக்கோயில்களில் விளக்கிடுமாறு தீர்ப்புக்கூறினரேயன்றி அன்னோர்க்குக் கொலைத் தண்டம் விதித்திலர். ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்றாது தொழிந்தவர்களுக்குப் பொன் தண்டம் விதித்தல் வழக்கம் என்பதூஉம் அவர்கள் அதனைக் கொடாது ஓடிவிட்டால் அன்னோரது வீடு, காணி முதலியவற்றை அரசனது ஆணையின்படி விற்று ஊர்ச் சபையார் ஒழுங்குசெய்தல் வழக்கம் என்பதூஉம் பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

11. ஆவணக்களரி:—அக்காலில் ஊர்கள்தோறும் எழுதப்படும் ஆவணங்களைக் (பத்திரங்கள்) காப்பிட ஆவணக்களரியும் (Registration Office) இருந்தது. நிலத்தை விற்போரும் வாங்குவோரும் ஆவணத்துடன் அங்குச்சென்று நிலத்தின் விலையையும் நான்கெல்லையையும் தெரிவித்துத் *தம் உடன்பாட்டிற்கும் உறுதிமொழிகூறி ஆவணம் காப்பிடப்பெற்ற பின்னர்த் திரும்புவர். இவ்வாவணம் என்றும் பயன்படக்கூடியதாயிருப்பின் அவ்வூரிலுள்ள கோயிற்சுவரில் அதனைப் பொறித்துவைப்பது வழக்கம்.

12. படை:—நம் குலோத்துங்கன்பால் யானைப் படையும் குதிரைப்படையும் காலாட்படையும் மிகுதியாக இருந்தன. இவன் காலத்தில் தேர்ப்படை இருந்ததாகத் தெரியவில்லை. வில், வேல், வாள், அம்பு, தடி முதலியன அக்காலத்தில் வழங்கிய படைக்கலங்கள்

ஆகும். குலோத்துங்கனும் அவனது முன்னோர்களும் நிலத்திலும் கடலிலும் சென்று போர்புரிவதில் சிறந்த ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. எனவே, நம் குலோத்துங்கனிடத்தும் பல கப்பற் படைகளும் இருந்திருத்தல்வேண்டும். 'இருமுடி சோழன் தெரிந்த வில்லிகள்' என்பதனால் ஒவ்வொரு படைக்கும் வெவ்வேறு பெயரிடும் வழக்கம் உண்டு என்ற செய்தி புலனாகின்றது. படைஞர் போர் நிகழாத காலங்களில் உழுது பயிரிட்டுக்கொண்டு இருப்பது வழக்கம். வென்றுகொண்ட நாடுகளில் நிலைப்படை அமைத்தலும் உண்டு. குலோத்துங்கன் சேரமண்டலத்தை வென்றபோது அங்குள்ள கோட்டாற்றில் ஒரு நிலைப்படை ஒரு படைத்தலைவன்கீழ் நிறுவப்பெற்றது என்பது முன்னரே விளக்கப்பட்டது.

13. கோயில்கள் :—அக்காலத்தில் நம் தமிழகத்தில் பல கோயில்கள் இருந்தன. செங்கற்கோயில்களாக விருந்த இவற்றைக் கற்றளிகளாக அமைப்பித்தவர்கள் சோழமன்னர்களும் அன்னோரது அதிகாரிகளுமே யாவர். பல புதிய கோயில்களும் இவர்களால் கட்டுவிக்கப்பெற்றன. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பிசேர், திருவைகாவூர்[17] முதலான தலங்களிலுள்ள கோயில்கள் நம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் கற்றளிகளாக்கப்பட்டன. சூரியனார்கோயில் என்ற ஊரிலுள்ள சூரியனது ஆலயமும், மன்னார்குடியிலுள்ள

17. திருவைகாவூரிலிருந்து எடுக்கப்பெற்றதும் அவ்வூரிலுள்ள திருக்கோயில் முதற்குலோத்துங்கசோழனது ஆட்சிக்காலத்தில் கற்றளியாக அமைக்கப்பெற்ற செய்தியை யுணர்த்துவதும் ஆகிய ஒரு கல்வெட்டு இப்புத்தகத்தின் இறுதியில் சேர்க்கப்பெற்றுளது.

குலோத்துங்க சோழவிண்ணகரமும் கோட்டாற்றிலுள்ள இராசேந்திர சோழேச்சரமும் இவ்வேந்தன் காலத்தில் கட்டப்பெற்றனவேயாம். கோயில்களெல்லாம் அரசர்களாலும் பிற அன்பர்களாலும் அளிக்கப்பெற்ற பெரும் பொருளும் நிலமும் உடையனவாய் அக்காலத்தில் விளங்கின. திங்கள்தோறும் பூரணையில் கோயில்களுக்கு விழா நடைபெற்றது. உச்சியம்போதில் கோயில்களில் மாகேச்சுரர்க்கு நாள்தோறும் அன்னம் இடுவது வழக்கம். தேவாரப் பதிகங்கள் நாள்தோறும் திருமுன்னர் விண்ணப்பஞ் செய்தற்கு நிபந்தங்கள் விடப்பட்டிருந்தன.[18] கோயிற் காரியங்களை எல்லாம் அவ்வவ்வூரிலுள்ள ஒரு சபையார் நன்கு நடத்திவந்தனர். அரசனும் அரசாங்க அதிகாரிகளும் நாட்டைச்சுற்றிப்பார்த்து வருங்கால் கோயில்கள் திட்டப்படி நடத்தப்பட்டு வருகின்றனவா என்று ஆராய்ந்து வருவது வழக்கம்.[19] கோயிற்குரிய செலவு போக எஞ்சியபொருளின் ஒரு பகுதியைக் கல்வி வளர்ச்சிக்குச் செலவிட்டுவந்தனர் என்பது தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள எண்ணாயிரம் என்ற ஊரிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது.[20] ஒரு பகுதி மருத்துவ நிலையத்திற்கும் செலவிடப்பட்டது என்பது செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருமுக்கூடல் கோயிற் கல்வெட்டால் அறியப்படுகின்றது.[21]

---

18. (a) S. I. I. Vol. III. Ins. Nos. 139, 151-A.
    (b) Do. Vol. II. Ins. No. 65.
19. S. I. I. Vol. III. Ins. Nos, 49, 57 & 66.
20. Ins. Nos. 333, 335 & 343 of 1918 (Madras Epigraphical Report.)
21. The Historical sketches of Ancient Dekhan page 336.

# பதினான்காம் அதிகாரம்.

## முடிவுரை.

இதுகாறும் எழுதியுள்ள பல அதிகாரங்களால் பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சோழமண்டலத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து நம் தமிழகத்தையும் இதற்கப்பாலுள்ள பிறநாடுகளையும் ஆட்சிபுரிந்த முடிமன்னனாகிய முதற் குலோத்துங்கசோழனது வரலாற்றை ஒருவாறு நன்குணரலாம். அன்றியும் சற்றேறக்குறைய ஐம்பது ஆண்டுகள்வரை நம் தமிழகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் இவ்வரலாற்று நூல் இயன்றவரை இனிது விளக்காநிற்கும். கல்விமுதிர்ச்சியால் அறிவு திருவாற்றல்களுடன் நிலவிய நம் வேந்தர்பெருமான் கடைச்சங்ககாலத்தில் சிறப்புடன் விளங்கிய சோழன் கரிகாலன், சேரன் செங்குட்டுவன் முதலான முடிமன்னர்களோடு ஒருங்குவைத்து எண்ணத்தக்க பெருமையும் புகழும் உடையவன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்தகைய பெருவீரன் அரசுவீற்றிருந்து செங்கோல் செலுத்திய திருவுடைநகரம் கங்கைகொண்டசோழபுரம் ஆகும். நம் குலோத்துங்கனது தாய்ப்பாட்டனாகிய கங்கைகொண்டசோழனால் அமைக்கப்பெற்ற இப்பெருநகரம் அவ்வேந்தன் காலத்திலேயே சோழமண்டலத்திற்குத் தலைநகராகும் பெருமை எய்திற்று. அவனுக்குப் பின்னர், சோழர்களது ஆட்சியின் இறுதி

வரை இந்நகரமே எல்லாச் சோழமன்னர்களுக்குந் தலைநகரமாக இருந்தது. எனவே, இது தஞ்சையினும் சிறந்த அரணுடைப்பெருநகரமாக அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். இந்நகர், கங்காபுரி என்று கலிங்கத்துப்பரணியிலும் விக்கிரமசோழனுலாவிலும், கங்கைமாநகர் என்று வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தியிலும், கங்காபுரம் என்று தண்டியலங்கார மேற்கோள் பாடலிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இத்தகைய பெருமைவாய்ந்த இந்நகரம் இதுபோது தன் பண்டைச் சிறப்பனைத்தும் இழந்து திருப்பனந்தாளுக்கு வடக்கில் கொள்ளிடத்திற்குக் கட்டப்பெற்றுள்ள லோயர் அணையிலிருந்து அரியலூர்க்குச்செல்லும் பெருவழியில் ஒரு சிற்றூராக உள்ளது. ஆயினும் இவ்வூரின் பழைய நிலைமை நினைவுகூர்தற்கும் சோழச்சக்கரவர்த்திகளின் பெருமையையுணர்தற்கும் ஏதுவாக இன்றும் அங்கு நிலைபெற்றிருப்பது கங்கைகொண்ட சோழேச்சுரம் என்னும் சிவாலயமேயாகும். இந்நகரில் நம் குலோத்துங்கனுக்குப்பின்னர் வீற்றிருந்து ஆட்சிபுரிந்தோர் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் என்போர். இவர்கள் எல்லோரும் அறிவினாலும் வீரத்தாலும் நம் குலோத்துங்கனுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்று ஐயமின்றிக் கூறலாம். சோழமன்னர்களுள் இறுதியானவன் மேற்கூறிய மூன்றாம் இராசேந்திரனே ஆவன். அவனுக்குப் பின்னர் சோழநாடு பாண்டியரது ஆட்சிக்குள்ளாயிற்று. சோழர்களும் பாண்டியர்க்குத் திறைசெலுத்துங் குறுநில மன்னர்களாயினர். இவர்களது தலைநக

ராகிய கங்கைகொண்ட சோழபுரமும் பகையரசர்களால் முற்றிலும் அழிக்கப்பெற்றுச் சிறுமை எய்திற்று. படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவந்த தமிழ் வேந்தர்களான சோழர்கள் தங்கள் ஆட்சியும் வீரமும் இழந்து தாழ்வுற்றனரெனினும் அவர்களது ஆதரவில் வெளிவந்த தமிழ் நூல்களும், அவர்களால் எடுப்பிக்கப்பெற்ற திருக்கோயில்களும், வெட்டப்பெற்ற பேராறுகளும், கட்டப்பெற்ற அணைகளும் இன்றும் நிலைபேறுடையனவாய் அன்னோரது பெருமையினைத்தும் நம்மனோர்க்குணர்த்தும் கலங்கரை விளக்கமென நின்று நிலவுதல் ஒருவகையால் நமக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பது திண்ணம்.

முற்றும்.

# சேர்க்கை. 1.

## முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகள்.

[ முதல் மெய்க்கீர்த்தி. ]

1. திருமன்னி விளங்கு மிருகுவ டனையதன்
தோளும் வாளுந் துணையெனக் கேளலர்
வஞ்சனை கடந்து வயிரா கரத்துக்
குஞ்சரக் குழாம்பல வாரி யெஞ்சலில்
சக்கரக் கோட்டத்துத் தாரா வரசனைத்
திக்கு நிகழத் திறைகொண் டருளி
அருக்க னுதயத் தாசையி லிருக்குங்
கமல மனைய நிலமக டன்னை
முந்நீர்க் குளித்த வந்நா ளாதிக்
கேழ லாகி யெடுத்த திருமால்
யானுஞ் சலியா வகையினி தெடுத்துத்
தன்குடை நிழற்கீ ழின்புற விருத்தித்
திகிரியும் புலியுந் திசைதொறும் நடாத்திப்
புகழுந் தருமமும் புவிதொறு நிறுத்தி
வீரமுந் தியாகமும் மானமுங் கருணையும்
உரிமைச் சுற்ற மாகப் பிரியாத்
தலைநிகழ் சயமுந் தானும்வீற் றிருந்து
குலமணி மகுட முறைமையிற் சூடித்
தன்கழல் தராதிபர் சூடச் செங்கோல்
நாவலம் புவிதொறும் நடாத்திய கோவிராசகேசரி
வன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு
யாண்டு—

[இரண்டாவது மெய்க்கீர்த்தி.]

2. புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளை யிளங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்ரமத் தொழிலாற்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயிர்முனைக்
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுட முரிமையிற் சூடித்
தன்னடி யிரண்டுந் தடமுடி யாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னை
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனாது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீவாந் தரத்துப் பூபாலர் இறைவிடு
கலஞ்சொரி களிறுமுறை நிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விற்றாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்றுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்

அளத்தியி லிட்ட களிற்றின நிரையும்
பட்டவெம் பரியும் விட்ட தன் மானமும்
கூறின வீரமும் கெடப்ப வேறின
மலைகளு முதுகு நெளிப்ப விழித்த
நதிகளுங் கழன் றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தக்கா ருகந்து தானும் தானையும்
பன்று விட்ட பலபல முதுகும்
பயத்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கைக்கொண்
டண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித் தரங்கமும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரிய முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி யரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொற்றை வெஞ்சுர மேற்றிக் கொற்ற
விசயத் தம்பந் திசைதொறு நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித் தென்னாட்

டெல்லை காட்டிக் கடன்மலை நாட்டுள
சாவே றெல்லாத் தனிவிசும் பேற
மாவே றியதன் வருதினித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டா றட்பட
செறிதொறு கிலைகளிட் டருளித் திறல்கொள்
வீரசிம் மாசனத் திரியனிட் டருளி
வடதிசை, வேங்கை மண்டலங் கடந்து தாங்கலர்
கலிங்க மேழுங் கனலெரி பரப்ப
விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் களிற்றொடு பட்டுமுன் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர
வருகோ மட்டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறளா மதகரி யிராசனன்
தண்டுபதி யாகிய தலைச்சே னாபதி
மண்டலிக தாமய னென்பார்த் திசைமுகன்
போத்தயன் கேத்தணன் செருச்சே னாபதி
என்றிவ ரனைவரும்
வெற்றவே ழத்தொடு பட்டு மற்றவர்
கருந்தலை யொடுவெண் ணிணங்கழு கோடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துக்
கருங்கட லடையத் தராதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டலங்கல்
ஆரமுந் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவனிடத் துமையெனத் தியாக வல்லி
உலக முடையா ளிருப்ப வவளுடன்
கங்கையிற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்

வாழி மலர்த்திணி திருப்ப ஆழியுந்
திருமா லாகத்துப் பிரியா தென்றும்
திருமக ளிருக்கென வீரசிம் மாசனத்து
வீற்றிருந் தருளின கோவிராசகேசரி வன்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு—

[மூன்றும் மெய்க்கீர்த்தி.]

3. புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமக ணிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரிரியலுற் றழிதர
விக்கலன் சிங்கணன் மேல்கடற் பாயத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி
விசயாபி டேகம்பண்ணி வீரசிம் மாசனத்துப்
புவனமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோவி ராசகேசரி வன்மரான சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு—

# சேர்க்கை 2.

## சோழ சளுக்கியர் சம்பந்தம்.

| சோழர். | | கீழைச்சளுக்கியர் |
|---|---|---|
| இராசராசன் I. | | |
| ├ இராசேந்திரன் I. | | |
| ├ குந்தவ்வை | × | விமலாதித்தன் |
| இராசேந்திரன் I.: ├ வியசராசேந்திரன் | | |
| இராசேந்திரன் I.: ├ அம்மங்கை | × | இராசராசன் |
| வியசராசேந்திரன்: மதுராந்தகி | × | குலோத்துங்கன் I. |

# சேர்க்கை 3.

## திருவைகாவூர்க் கல்வெட்டு.

(1) ஸ்வஸ்திஸ்ரீ

புகழ்மாதுவிளங்க ஜெயமாதுவிரும்ப
நாமகள்நிலவ மலர்மகள்புணர
உரிமையிற்சிறந்த மணிமுடிசூடி
மீனவர்நிலைகெட வில்லவர்குலைய(2)த்தா
ஏனைமன்னவர் இரியலுற்றிழிதரத்
திக்கனைத்துந்தன் சக்கரநடாத்தி

வீரசிங்காசனத்து அவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ(3)கேசரிவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு நாற்பதாவது ராஜராஜ வளநாட்டுப்பாவை சுற்றுப்பூண்டி (4) பூண்டி உடையார் சூரியன் பவழக்குன்றிரான வளநாடுடையார் உலகுய்யவந்த சோழவளநாட்டு அண்டாட்டுக்கூற்றத்துடையார் திருவைகாவுடை(5)ய மகாதேவர் கோயில்முன்பு இஷ்டிகையாய் நிரணித்தமையில் இக்கோயில் இழிச்சித்திருக்கற்றளியாகச் செய்கைக்கு யாண்டு முப்பத்திரண்டாவ(6)து வின்னப்பஞ்செய்து இஷ்டிகை இழிச்சிவித்துத் திருக்கற்றளியும் திருவிடைக்கட்டும் திருமண்டபமும் செய்வித்து இத்தேவர் பழந்தேவதானமான (7) நிலத்து

நெல்லு திருப்படிமாற்றுக்கும் நிபந்தத்திற்கும் போதா மையில் தேவதானம்பெறுகைக்கு விண்ணப்பஞ்செய்து உலகுய்யவந்த சோழவள (8) நாட்டு விறைகூற்றத்துக் சனப்பாக்குடி பொத்தகப்படி நிலம் இருபதேகலிக்குத் தால் நெல்லு ஆயிரத்து இருநூற்றுச் சிக்கூடம் தேவதா னமா (9) க இடுவித்து நிவந்தஞ்செல்லப் பண்ணுவித் தார் ராஜராஜவளநாட்டுப்பாலை கூற்றுப்பூண்டி பூண்டி உடையார் சூரியன் பவழக்குன்றினான (10) வள நாடுடையார்—இவர் சொல்ல இத்திருப்பணி செய்வித் தார் இக்கோயிலில் ஸ்ரீமாகேஸ்வரர் திருவெண்காடு டையான் திருச்சிற்றம்பலமுடையானை தங்கைவிரத முடித்தார்.—

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை